# நீங்கள் எந்த சபை?

இயேசுகிறிஸ்து ஏழு சபைகளுக்கு
வெளிப்படுத்தின விசேஷம்

ஜீவத்தண்ணீர்

# நீங்கள் எந்த சபை?

## பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| புத்தகத்தைப் பற்றி .. .. .. | 3 |
| 1. சபைகளுக்கு வெளிப்படுத்தின விசேஷம்<br>எபேசு சபை | 4 |
| 2. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது<br>சிமிர்னா சபை | 13 |
| 3. நீ மரண பரியந்தம் உண்மையாயிரு<br>பெர்கமு சபை | 27 |
| 4. இரு புறமும் கருக்குள்ள பட்டயம்<br>தியத்தீரா சபை | 39 |
| 5. அக்கினி ஜுவாலை போன்ற கண்கள்<br>சர்தை சபை | 54 |
| 6. ஜெயங்கொள்ளுகிறவனுக்கு வெண்வஸ்திரம்<br>பிலதெல்பியா சபை | 66 |
| 7. திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்<br>லவோதிக்கேயா சபை | 77 |
| 8. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் | 90 |
| 9. நீங்கள் நினையாத நாழிகையில் இயேசு | 101 |
| வாழ்த்துரைகள் | |

## புத்தகத்தைப் பற்றி ......

திவ்ய வாசகனாகிய யோவானுக்கு கர்த்தர் வெளிப்படுத்தின விசேஷம், விசுவாசிகள் அநேகருக்கு முழுமையாக விளங்கிக் கொள்ளக் கூடாத மறை பொருளாகவே இருந்து வந்திருக்கிறது. அதே நிலையில், வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் பல, இந்நாட்களில் தெளிவும் விளக்கமும் பெற்று, நாம் வாழும் இந்நாட்கள், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மிகவும் சமீபமான காலம் என்பதையும் உறுதிச் செய்கிறது.

இம்மட்டும், மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள் என்ற வசனத்தில் தஞ்சம் புகுந்து; இரட்சிப்பின் உறுதியோடும், நித்திய வாழ்வின் நிச்சயத்தோடும் வாழ்வதே முக்கியம் என்று போக்குச்சொல்லி; இந்த தரிசன புத்தகத்தை வாசிப்பதில்,தியானிப்பதில் நாட்டமில்லாதிருந்த என்னையும் கர்த்தர், இந்த வசனங்களை வாசித்து தியானிக்க உதவிச்செய்தார்; பாக்கியவானாக மாற்றினார்.

இயேசுவுக்காக வாழ அர்ப்பணித்திருக்கும் என் வாழ்வில், 2013 ஜுலை மாதம் துவங்கி, கர்த்தர் இடைபட்டு தெளிவுபடுத்தின சபைகளுக்கான வார்த்தைகளின் தொகுப்பே இந்த புத்தகமாகும். மிகவும் உன்னதமான இந்த அனுபவத்தில் மேலோங்கி நிற்கும் உண்மை, நம்முடைய இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்து மெய்யாகவே சீக்கிரம் வரவிருக்கிறார் என்பதே.

ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும். மார நாதா!

அந்நாட்களில் ரோம சாம்ராஜ்யத்தின் ஆசியப் பகுதியிலிருந்த ஏழு சபைகளுக்கு, இந்த தரிசன புத்தகத்தில் கர்த்தரால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிற விசேஷம் என்ன?

இந்நாட்களில், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டிருக்கிற தேவஜனமாகிய நமக்கு, இந்த தரிசன வார்த்தைகள் வெளிப்படுத்தும் எச்சரிப்புகள் என்ன? நமக்கருளும் ஆலோசனைகள் என்ன?

இதை வாசித்து பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானித்து தெளிவடைந்து, கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். கூடுமானால் அநேகருடன் இதை பகிர்ந்து கொள்ளுங்கள். இனி காலம் செல்லாது.

**விஜயகுமார் சாமுவேல்**

# 1. சபைகளுக்கு வெளிப்படுத்தின விசேஷம்

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நம்மைப் போல இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் இயேசுவுடனே கூட இருந்தபடியினாலே, இயேசு நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38). நாம் நம்முடைய பாவ சாபங்களிலிருந்து மீட்கப்பட்டு, ஆத்தும இரட்சிப்படைய, அந்த இயேசு நமக்காக பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப்போஸ்தலர் 1:3). இயேசு உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். இயேசு கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே (ரோமர் 8:34). அல்லேலூயா!

## ஆதித்திருச்சபை

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் முன்பாக அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் (லூக்கா 24:49). இயேசுவின் சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர், அவரின் கட்டளையின்படி எருசலேமிலே ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.

திரளான ஜனங்கள் இதைக் கேட்டு கூடி வந்தபோது, பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு அவர்களை நோக்கி :

நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2:38) என்று புத்தி சொன்னார். அவருடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவ்விதமாக இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.

இயேசுவே இந்த சபையாகிய சரீரத்துக்கு, இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டத்திற்கு தலையானவர். பெந்தெகொஸ்தே நாளில் துவங்கிய ஆதித்திருச்சபையின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான சரித்திரத்தில், சபை பலவிதமான நெருக்கங்களுக்கும் பாடுகளுக்கும் கொள்கை விபரீதங்களுக்கும் உட்பட்டது. சபையில் வேசித்தனம், விக்கிரகங்களுக்கடுத்த வஞ்சகம் போன்ற கொடிய பாவங்கள் காணப்பட்டது; பிரிவினைகளும் யுத்தங்களும் கூட ஏற்பட்டது.

ஆனாலும் கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபேசியர் 5: 25-27). கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார். அல்லேலூயா!

## இன்றைய திருச்சபை

உலகளவில் இன்றைய நாட்களில் சபையானது பலவிதமான பிரிவுகளுடனும் கொள்கை கோட்பாடுகளுடனும் பல்வேறு விசுவாச நிலைகளில் காணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட நாம் ஒவ்வொருவருங்கூட ஏதாவதொரு சபையில் அங்கம் வகிக்கிறோம். இந்த சபைகள் நம்முடைய விசுவாச வாழ்விற்கும் கொள்கைகளுக்கும் தன்மைகளுக்கும் உகந்த சபையாகவோ; அல்லது நம்முடைய பெற்றோரும் உற்றாரும் முன்னோரும் ஆராதித்து வந்த சபையாகவோ இருக்க வாய்ப்பு உண்டு. சிலர் ஆராதனைகளுக்கு எளிதாக செல்லும் வகையில், தங்கள் குடியிருப்பின் அருகிலுள்ள சபைகளிலேயே கூடியும் ஆராதிக்கிறார்கள்

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றதும், அன்பின் ஐக்கியம் ஆராதனை நல்ல போதனை மற்றும் நற்கிரியைகளையும் உடைய சபையைச் சார்ந்து அதில் நிலைத்திருக்கவே வாஞ்சிக்கிறோம். ஆனால், தனிப்பட்ட சபைகள் மற்றும் சபைப் பிரிவுகளின் ஆவிக்குரிய தன்மைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவே இருக்கிறது. ஆதித்திருச்சபையின் நாட்களுக்கு அடுத்த காலக்கட்டத்திலிருந்த சபைகளுங்கூட அன்பிலும் ஐக்கியத்திலும் விசுவாசத்திலும் கிரியைகளிலும் வேறுபட்டு இருந்ததை, அப்போஸ்தலர்கள் எழுதின நிருபங்களில் வேதாகமத்தில் காண்கிறோம். இவற்றைத் தொடர்ந்து, அந்நாட்களில் ஆசியாவில் இருந்த ஏழு சபைகளைப் பற்றி யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்திலும், சபைகளில் காணப்பட்ட மாறுபட்ட ஆவிக்குரிய தன்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு சிலரைத் தவிர, அநேக தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் விரும்பி சார்ந்திருக்கிற சபையின் தன்மைகளை விசுவாச நிலையை உடையவர்களாவே காணப்படுகிறார்கள். இந்த சிலருக்கு எடுத்துக்காட்டாக, வேதாகமத்தில் செத்தசபை என்று கர்த்தரால் வருணிக்கப்பட்ட சர்தை சபையிலும், தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் இருந்ததாக (வெளி 3:4) எழுதப்பட்டிருக்கிறது. இதைப் போன்றே, உண்மையும் சத்தியமுமுள்ள சபை என்று விவரிக்கப்படும் பிலதெல்பியா சபைக்கும், சாத்தானின் கூட்டத்தாரில் சிலரைக் கர்த்தர் கொடுத்திருந்ததாக (வெளி 3:9) வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீங்கள் எந்த சபை?

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நீங்கள் எந்த சபை? என்று நம்மை ஒருவர் கேட்கும் போது, நாம் வழக்கமாக விரும்பி தேவனை ஆராதிக்கின்ற சபைப் பிரிவின் பெயரையோ அல்லது சபையின் பெயரையோ சொல்லுவோம். ஆனால் இங்கு நமக்கு இப்பொழுது கேட்கப்படும் இந்தக் கேள்வியின் நோக்கம், தனிப்பட்ட ஆவிக்குரிய நிலையில் நீங்களும் நானும், எவ்வகையான பண்புகளை உடையவர்களாக இருக்கிறோம் என்பதை அறிவதும் எத்தன்மையான கிரியைகளை வாழ்வில் நடப்பித்து வருகிறோம் என்பதை வெளிப்படுத்துவதுமே ஆகும்.

இந்நாட்களிலும், நம்முடைய ஆவிக்குரிய நிலையை அறிந்து உணர்ந்து கிறிஸ்துவுக்குள் நம்மை சீர்படுத்திக் கொள்ள பேருதவியாக, ஆவியின் உரைக்கல்லைப் போன்று, நம்முடைய கர்த்தராகிய

இயேசுகிறிஸ்து அந்நாட்களில் சபைகளுக்கு தந்தருளின வார்த்தைகள் உதவுகின்றன. இந்த வசனங்கள் வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் என்ற புஸ்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இயேசுகிறிஸ்துவின் இந்த செய்தி, ரோம சாம்ராஜ்யத்தின் ஆசியப் பகுதியில் அந்நாட்களில் இருந்த ஏழு சபைகளுக்கென அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தரிசனத்தில் வெளிப்பட்டவையாகும்.

## தரிசனம் பெற்ற யோவான்

இயேசுகிறிஸ்து நம்மைப்போலொத்த மனிதராக இவ்வுலகில் வாழ்ந்து ஊழியஞ்செய்த நாட்களில், தமக்கு சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார். அவரிடத்தில் வந்தவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்கள் தம்மோடு கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாக தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகார முடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார் (மாற்கு 3:14,15). இவர்களில் யோவானும் ஒருவராயிருந்தார்.

அந்தப் பன்னிருவரில், யோவானும் அவர் சகோதரர் யாக்கோபும், பேதுருவும் அவர் சகோதரர் அந்திரேயாவைப் போன்றே, மீன் பிடிக்கிறவர்களாயிருந்தார்கள். இவர்களில் யோவான் சீஷன் இயேசுவுக்கு அன்பாயிருந்தார். இராப்போஜனம் பண்ணுகையில் இயேசுவின் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார்? என்று கேட்ட சீஷன் இவரே (யோவான் 21:20).

பன்னிருவரிலும், இயேசுவோடு மிகவும் நெருங்கி இருந்து, பல முக்கிய நிகழ்வுகளில் பங்குபெற்ற மூவரில் ஒருவராக யோவான் இருந்தார். மறுரூபமலையிலும், ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகளை இயேசு உயிர்ப்பெற்றெழச் செய்தபோதும், இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட கெத்செமனே தோட்டத்தில், தனித்து ஜெபித்தபோதும் இருந்த மூவரில் யோவானும் ஒருவராயிருந்தார். பின்னர் பிரதான ஆசாரியர்களால் இயேசு விசாரிக்கப்பட்டபோதும், இயேசுவின் சிலுவை மரணத்தின்போதும் இயேசுவுக்கருகில் காணப்பட்ட சீஷன் யோவான் ஒருவரே.

ஆதித்திருச்சபையில் அப்போஸ்தலர்களாகிய யாக்கோபும் பேதுருவும் யோவானும் சபையின் தூண்களாக (கலாத்தியர் 2:9) எண்ணப்பட்டார்கள். சபை உபத்திரவங்களுக்கும் நெருக்கங்களுக்கும் உட்பட்டபோது யோவான், எபேசு பட்டணத்தில் தங்கியிருந்து மூப்பராக இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை அந்த எல்லைகளில் அறிவித்து

வந்தார். ரோம அரசாங்கம் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க தடைசெய்தபோதும், யோவான் அதை மீறி செயல்பட்டார். அதனால், தேவனுடைய வசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், ரோம அரசால் பத்மு என்னும் தீவில் சிறைப்படுத்தப்பட்டார்.

பத்மு, எபேசு பட்டணத்திற்கு தென்மேற்கே சுமார் 80 கிலோமீட்டர் தொலைவில் ஏஜியன் கடலில் (மத்திய தரைக்கடலின் வடக்கு பகுதியில் ஒரு வளைகுடா) இருக்கிற ஒரு தீவு. எரிமலைச் சிதறலினால் உண்டான கூர்மையான பாறைகளால் நிறைந்த பத்மு தீவின் கருங்கல் சுரங்கங்களில், கைதிகள் வேலைச் செய்யும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டனராம், யோவான் பத்மு தீவில் இருந்த காலங்களில், கடினமான சூழ்நிலையில் ஆவிக்குள்ளான போது கர்த்தர் கொடுத்த வெளிப்பாடுகளைத் தொடர் தரிசனங்களாக பெற்றார். தரிசனங்கள், பெற்றுக் கொண்ட வரிசையில் யோவானால் தொகுக்கப்பட்டு, வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம் பெற்றுள்ளன. தன்னுடைய முதிர் வயதில் யோவான் பத்மு தீவிலிருந்து விடுவிக்கப்பட்டு எபேசு பட்டணத்திற்கு வந்தார். எபேசுவில் தங்கியிருந்த நாட்களில், யோவான் சுவிசேஷத்தையும் (கி.பி.85) மற்ற மூன்று நிருபங்களையும் (கி.பி 90) அவர் எழுதினதாக வரலாறு சொல்லுகிறது.

## இயேசுகிறிஸ்துவின் கடிதம்

அப்போஸ்தலனாகிய யோவான் பத்மு தீவிலே சிறைப்பட்டிருந்த போது கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானார். அங்கு அவர் தரிசனமாகக் கண்டவைகளையும், இருக்கிறவைகளையும் இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் புஸ்தகத்தில் எழுதும்படியாக கர்த்தர் அவருக்குச் சொன்னார். மேலும் சபைகளைக் குறித்து எழுதிய வார்த்தைகளை, ரோம சாம்ராஜ்யத்தின் ஆசியப் பகுதியில் இருந்த எபேசு சிமிர்னா பெர்கமு தியத்தீரா சர்தை பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயோ என்னும் பட்டணங்களில் இருந்த எழு சபைகளுக்கும் அனுப்பும்படியாகவும் கட்டளைப் பெற்றார்.

யோவான் இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து பிரத்தியட்சமாக தரிசனத்தில் சபைகளைக் குறித்து பெற்றுக் கொண்ட இந்த வார்த்தைகள், ஏழு கடிதங்களாக, நிருபங்களாக தொகுக்கப்பட்டு வேதாகமத்தில், வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் 2 மற்றும் 3- ஆம் அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளன. இந்தக் கடிதங்கள் சபைகளின் கிரியைகளையும்

ஆவிக்குரிய நிலையையும் ஆராய்ந்தறிந்து, சபைகளின் நிறைவு மற்றும் குறைவுகளைத் தொகுத்தளிக்கிறது. கர்த்தருடைய பாராட்டுகளும் ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் இவற்றோடு தொகுக்கப்பட்டு, இவை சபைகளுக்கான இடைக்கால ஆவிக்குரிய தேர்ச்சி அறிக்கையைப் போன்று (Interim Spiritual Progress Report) காட்சியளிக்கிறது.

சபைகளுக்கான இந்த ஆய்வு அறிக்கை, கடைசி கால நியாயத்தீர்ப்பு அல்ல. கடைசி நியாயத்தீர்ப்பில், பெரிய வெள்ளைச் சிங்காசனத்தில் வீற்றிருப்பவரின் முன்பாக புஸ்தகங்களும் ஜீவபுஸ்தகமும் திறக்கப்படும். அப்பொழுது, அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டபடியே அனைவரும் நியாயத்தீர்ப்படைவார்கள் (வெளி 20:11,12). இந்தக் கடைசி நியாயத் தீர்ப்பின் போது, பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி இயேசுவைப் பற்றிக் கொள்வதற்கோ அல்லது இன்னும் அதிகமான நற்கிரியைகளைச் செய்து, நிறைவான நற்பலனைப் பெற்றுக் கொள்வதற்கோ வாய்ப்பே இல்லை என்பதை நாம் அறிவோம்.

சபைக்கான இந்தக் கடிதங்கள், ஆய்வு அறிக்கை, கடைசி நியாயத்தீர்ப்பிற்கு வெகு முன்னரே, கிருபையின் நாட்களில் சபையின் காலத்தில், சபையின் பொறுப்பான ஊழியர்களும் விசுவாசிகளும், தங்களுடைய ஆவிக்குரிய நிலையை உணர்ந்து, பாவமான வாழ்விலிருந்து மனந்திரும்பி, அழிவிலிருந்து மீட்கப்பட எச்சரிக்கையாக எழுதப்பட்டிருக்கிறது. மேலும் இந்த வார்த்தைகள், நற்கிரியைகளைச் செய்து நற்சாட்சியோடு விளங்கும் சபையாருக்கு அவர்களைப் பாராட்டியும், தொடர்ந்து அவர்கள் நற்கிரியைகளை செய்ய உற்சாகப்படுத்தியும் எழுதப்பட்டிருக்கிறது.

## ஆவிக்குரிய உரைக்கல்

வேதாகமத்தின் வசனங்களும், சபைகளுக்கான இந்தக் கடிதங்களும், சபை ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலையின் உரைக்கல்லைப் போன்று இருக்கிறது. பொன்னும் வெள்ளியும் அக்கினியினால் புடமிடப்பட்டு, உரைகல்லில் உரசிப்பார்த்து சோதிக்கப்படுகிறது. இதனால் அவற்றின் தரத்தை மதிப்பிடுகிறார்கள். இதைப் போன்றே மீட்கப்பட்ட தேவ ஜனமாகிய நாமும், உபத்திரவத்தின் குகையிலே புடமிடப்பட்டு, நம்முடைய விசுவாச வாழ்வின் கிரியைகளை, சபைக்கான கடிதங்களில் எழுதப்பட்டிருக்கிற, எதிர்பார்க்கப்படுகிற பண்புகளோடும், வேத வசனங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்து, நம்மையே ஆராய்ந்தறிந்து, சீர்ப்படுத்திக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

தேவனுடைய பிள்ளைகளின் வாழ்விலும் குடும்பத்திலும் ஊழியங்களிலும் காணப்படுகிற தவறான பாவச்செயல்களைத் தவிர்த்து, நற்பண்புகளை பற்றிக் கொண்டு, நற்கிரியைகளை நடப்பித்து, நித்திய ஜீவனை சவதரிக்க, சிறப்பான ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் இந்தக் கடிதங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு, நம்மை இவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்து, சோதித்தறிந்து பார்க்கையில் வெளிப்படும் தரம், நாம் எந்த சபையின் ஆவிக்குரிய தன்மைகளோடு ஒத்து காணப்படுகிறோம் என்பதை நிதானித்து அறிய உதவுகிறது. அறிந்த நிலையில், கர்த்தருடைய ஒத்தாசையோடு அதற்கென தெளிவாக சொல்லப்பட்டிருக்கிற ஆலோசனைகளைப் பின்பற்றி தேவசித்தத்தை நிறைவேற்றவும், நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவும், வழிநடத்துகிறது.

## நீங்கள் பாக்கியவான்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பெரிதான கிருபையினால், அவருடைய வழி நடத்துதலின்படியே, ஆசியாவின் ஏழு சபைகளுக்கு இயேசுகிறிஸ்துவினால் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளைத் தியானிக்க நாம் கிருபை பெற்றிருக்கிறோம். தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கும் இந்தச் சபைகளின் நிறைவு குறைவு மற்றும் ஆவிக்குரிய தன்மைகளோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏதுவாக, கர்த்தருடைய ஒத்தாசையோடு இவைகள் இந்த புத்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வார்த்தைகளைக் குறித்து யோவான் : இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது (வெளி 1:3) என்று எழுதியிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரனே சகோதரியே, கர்த்தரால் தந்தருளப்பட்டிருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள, இயேசுகிறிஸ்துவில் ஊன்றக் கட்டப்பட்டு அவரையே உறுதியாகப் பற்றிக்கொண்டு நற்சாட்சியின் வாழ்வு வாழ, கர்த்தர் உன்னை அழைக்கிறார். இந்த வார்த்தைகளை வாசிக்க அர்ப்பணித்திருக்கிற நீ பாக்கியவான், பாக்கியவதி. இந்நாளிலும் இயேசுகிறிஸ்துவின் அழைப்பிற்கு செவிகொடுத்து அவருக்கு பிரியமானதைச் செய்ய ஒப்புக்கொடுத்திருக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக ! அல்லேலூயா !

# எபேசு சபை

கடினமான பத்மு தீவின் சிறையிருப்பில் யோவான் ஆவிக்குள்ளானார்.
மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரையும், கர்த்தருடைய
மகிமையையும் வல்லமையையும் யோவான் கண்டபோது,
செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தார்.

ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த
ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து,
மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த
மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டார்.

கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்.
சபைக்கு தலையானவரான இயேசுகிறிஸ்து,
சபைகளின் மத்தியிலே யோவானுக்கு காணப்பட்டார்.

மரித்தேன், ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்;
நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய
திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் - என்றவர்,
கண்டவைகளையும் இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு
சம்பவிப்பவைகளையும் எழுது என யோவானுக்கு கட்டளையிட்டார்.

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
முதலாவது இடம் பெறுவது
எபேசு சபைக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
எபேசு, அன்பு தணிந்த பாரம்பரிய சபை என குறிப்பிடப்படுகிறது.

இப்பொழுது நாம், எபேசு சபைக்கு எழுதப்பட்ட வார்த்தைகளை
தியானிக்க வேண்டியதின் அவசியம் என்ன? அவசரம் ஏன்?

**கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது !**

*ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து,*
*இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே*
*அநாதி தேவனுடைய கட்டளையின்படி*
*வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும்*
*விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு*
*அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற*
*இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான,*
*இயேசுகிறிஸ்துவைப் பற்றிய*
*பிரசங்கமாகிய சுவிசேஷத்தின்படியே*
*உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும்,*
*தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற*
*தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய்*
*என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக.*
*ஆமென்*

*(ரோமர் 16:25-27).*

# 2. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் பூமியை நியாயந்தீர்க்க வருகிற நாள், வேதாகமத்தில் கர்த்தரின் நாள் என்றும், தேவனுடைய நாள் என்றும், இயேசுகிறிஸ்துவின் நாள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய நாள், பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்? (யோவேல் 2:11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் (2 பேதுரு 3:10) என்று பேதுரு எச்சரிக்கிறார். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது : கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் (யோவேல் 2:31,32).

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44) என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு, இயேசுவின் சித்தத்தையே வாழ்வில் செய்ய வாஞ்சிக்கிற நம்மை எச்சரிக்கிறார். மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள் (லூக்கா 21:27) என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் வருகிறார்; அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் (சங்கீதம் 96:13). நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நியாயாதிபதியாக வரவிருக்கிறார். இயேசு : மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் (வெளி. 22:20).

## இயேசு சீக்கிரமாய் வருகிறார்

இயேசுகிறிஸ்து தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்.. (மத்தேயு 25:31,32). ஜீவபுஸ்தகத்திலே

எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான் (வெளி 20:15).

அந்நாளிலே முந்தின வானமும் பூமியும் ஒழிந்து போகும்; சமுத்திரமும் இல்லாமற்போகும் - சகலவிதமான சத்துருவின் எதிர்ப்புகளும் ஒழிந்து போகும் - புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரும். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் (வெளி 21:1,2). தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி 21:27).

இதனிமித்தமே பரிசுத்த பவுல் : நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் (பிலிப்பியர் 1:11) என்று எழுதியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பேதுருவும் : தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்.... ஆகையால் பிரியமானவர்களே, இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர் களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2பேதுரு 3:12-14) என்று எச்சரிக்கிறார். திவ்ய வாசகனாகிய யோவானுக்கும், சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டிய வைகளை, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததை, இயேசு தம்முடைய தூதனை அனுப்பி வெளிப்படுத்தினார்.

## சபைகளுக்கான நியாயத்தீர்ப்பு

யோவான் தேவ வசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தார். கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளான யோவான், இனி சம்பவிக்க வேண்டிய வைகளைத் தேவனுடைய பிள்ளைகளுக்கு காண்பிக்கும் பொருட்டு, அவருக்கருளப்பட்ட தரிசனங்களைத் தொகுத்து வேதாகமத்திலே வெளிப்படுத்தின விசேஷமாக எழுதி வைத்திருக்கிறார்.

ஆவிக்குள்ளான நிலையில் மனுஷகுமாரனுக்கு ஒப்பான மகிமையுள்ள தேவனைக் கண்டார். இயேசு தாம் யோவானுக்கு வெளிப்படுத்தின சம்பவங்களை ஒரு புஸ்தகத்தில் எழுதி ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா,

லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கு அனுப்பும்படியாக கட்டளையிட்டார்.

யோவான் பெற்ற முதலாம் தரிசனம் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்ட நிருபங்களைக் குறித்தது. இந்தக் கடிதங்கள் சபைகளுக்கான நியாயத்தீர்ப்பு என்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில் இந்த நிருபங்களைக் காணலாம்.

இந்தக் கடைசி நாட்களில் வாழுகின்ற நாம் ஒவ்வொருவருங்கூட இந்தச் சபைகளுக்கான நிருபங்களோடு, நம்முடைய நடக்கையையும் அதாவது கிரியைகளையும் பிரயாசத்தையும் குறைவுகளையும் ஒப்பிட்டுப்பார்த்து, மனந்திரும்பி, நித்திய வாழ்வு பெற்றிட, வரவிருக்கும் பேரழிவிலிருந்து, நித்திய அக்கினியிலிருந்து தப்பித்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

## எபேசு சபையின் நியாய விசாரிப்பு

எபேசு பட்டணத்திலுள்ள சபைக்கு தேவனுடைய நற்செய்தியை எடுத்துச் சொல்லும் பொறுப்பைப்பெற்ற போதகருக்கு, ஊழியருக்கு எழுதப்பட்ட வார்த்தைகள் வெளிப்படுத்துதல் இரண்டாம் அதிகாரம் முதல் ஏழு வசனங்களில் காணப்படுகிறது. இந்தக் கடிதம் எபேசு சபையின் ஆவிக்குரிய நிலையை நன்றாக சோதித்தறிந்து, படிக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் தேர்ச்சிப் படிவம் (Progress Report) போலவும், அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியரின் இடைக்கால ஆய்வு அறிக்கை (Mid - Term Appraisal) போன்றும் இருப்பதை உணரமுடிகிறது. காலம் நிறைவேறும்போது சபையும் ஊழியரும், விசுவாசிகளும் அழிவிற்குட்படாதபடிக்கு இரட்சிக்கப்பட, சபைகளைச் சோதித்தறிந்து கர்த்தரால் முன்னரே சொல்லப்பட்ட வார்த்தைகளின் தொகுப்பே இந்த நிருபங்கள்.

நம்முடைய இரட்சகர் இங்கே தம்மை ஏழு பொன் குத்து விளக்குகளாகிய சபைகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவராக வெளிப்படுத்துகிறார். வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங்களான சபையின் தூதர்களை ஏந்திக் கொண்டிருக்கிறார். மனுஷரின் மத்தியில் தேவாதி தேவன் வாசஞ்செய்கிறார்; உலாவிக் கொண்டிருக்கிறார். ஏழு பொன்குத்துவிளக்குகள் இருள் சூழ்ந்த உலகில் ஒளிவீசும்படியாக நியமிக்கப்பட்டிருக்கிற சபைகளைக் குறிக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, சபையும் ஊழியரும் விசுவாசிகளும் மனந்திரும்பி இயேசுவை நோக்கிப்பார்க்கும்போது, தம்முடைய வலது

கரத்திலுள்ள நட்சத்திரங்களான தூதர்கள் மூலம் இயேசு பதிலளிப்பார்; பாதுகாத்து ஜெயமளிப்பார்.

எபேசு சபை அன்பு தணிந்த பாரம்பரிய சபை என்பதாக விவரிக்கப்பட்டுள்ளது. கர்த்தர் பேரில் உள்ள பேரன்பினால் உந்தப்பட்டு செய்யப்படவேண்டிய நற்கிரியைகள், பாரம்பரியமாக செய்யப்படும் கடமைகளாக உருவிழந்துச் சிதைந்து நிற்கும் அவலநிலை; அடிப்படையான அன்பை மறந்து, சடங்காக காரியங்களை ஆசரிக்கும் நிலையில் எபேசு சபை காணப்பட்டது.

## உன் பிரயாசத்தை அறிவேன்

எபேசு சபையின் கிரியைகளைச் சோதித்தறிந்த கர்த்தர், சபை இளைப்படையாமல் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பிரயாசப் பட்டதையும், சபையின் பொறுமையையும், பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாதிருக்கிறதையும் பாராட்டுகிறார். உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும், நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன் (வெளி. 2:2,3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எபேசு சபைக்கு இன்னுமொரு பாராட்டாக கர்த்தர் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை அவர்களும் வெறுத்தார்கள் (வெளி. 2:6) என்று எழுதப்பட்டிருக்கிறது. நிக்கொலாய் என்னும் ஒரு மதப்பிரிவினர், தேவனுடைய ஊழியர்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்ற எண்ணத்தோடு விக்கிரக வழிபாட்டிலும் ஒழுக்கக்கேடுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, உன்னுடைய ஆவிக்குரிய நிலையை அறிவாயோ? உன் கிரியைகளையும், பிரயாசத்தையும் பொறுமையையும் கர்த்தர் கண்டு பாராட்டும்படியாக உன் வாழ்வு அமைய, இன்று உன்னை அர்ப்பணிப்பாயா? கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்!

அப்போஸ்தலனாகிய பவுல் : உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12) என்றும்; கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1கொரி. 15:58) என்றும் எழுதியிருக்கிறார். மேலும், எபிரெயர் 6:10-ல்: உங்கள் கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே என்று எழுதப்பட்டிருக்கிறது.

எபேசு சபையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல்வேறு நிலைகளில் தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்தப் பணிகளில் இணைந்து செயல்படுகிற நம்மில் அநேகருடைய பிரயாசங்களும் கிரியைகளும் பொறுமையும் குறைவாகக் காணப்படலாம். முழுநேரமோ அல்லது பகுதி நேரமோ, தங்களை ஊழியர் என்று பிரகடனப்படுத்தியும் அநேகர் தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்தப் பணிகளில் கர்த்தருடைய ஒத்தாசையுடன் பிரயாசப்பட்டுச் செயல்படாமலிருப்பதைக் காண்கிறோம். கர்த்தருக்கான கிரியைகளை வெளிப்படுத்தாமல், கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதைக் காட்டிலும் மற்ற அலுவல்களில் உற்சாகமாகப் பங்கேற்பதையும் பார்க்கிறோம். இன்னும் சிலர் தங்களுக்கு நியாயமாகத் தோன்றுகிற மற்றப்பணிகளைக் காரணங்காட்டி, முழுமையாக கர்த்தருக்கு அர்ப்பணித்து செயல்படாமல், தயங்கி நிற்கிறதையும் அறிவோம்.

அன்பு தணிந்த பாரம்பரிய சபை என்று பெயர்பெற்ற எபேசு சபையில் காணப்பட்ட நற்காரியங்களிலுங்கூட, நம்மில் அநேகர் குறைவுள்ள வர்களாகவே காணப்படுகிறோம். நிலத்தரகர்களாகவும், திருமண புரோக்கர்களாகவும் விசுவாசிகளின் வாகனங்களில் உலாவந்து விருந்துண்டு ‘ஞாயிறு ஊழியர்களாக’ பணியாற்றுவோரும் நம்மில் உண்டு. பிரயாசங்களிலும், கிரியைகளிலும், பொறுமையிலும், நன்மதிப்பைப் பெற்ற எபேசு சபைக்கே, ஆதி அன்பு குறைவுப்பட்டதினிமித்தம் எச்சரிப்பையருளின சபைகளின் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிற கர்த்தர், என்னையும் உங்களையும் வரவிருக்கிற கடைசி நியாயத்தீர்ப்பை நினைவூட்டி, மனந்திரும்பி கர்த்தருக்குள் பிரயாசப்பட்டு தேவனுடைய சித்தத்தின்படி கிரியைகளை நடப்பிக்க எச்சரிக்கிறார்.

## நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதற்காக நன்மதிப்பைப் பெற்ற எபேசு சபையின் குறைவையும் கர்த்தர் வெளிப்படுத்தினார். ஆதியில் செய்த அன்பின் கிரியைகளைச் செய்யும்படியாகவும், செய்யாதபட்சத்தில் கர்த்தரின் முகப்பிரகாசம் சபையைவிட்டு நீங்கிப்போகும் என்பதாகவும் கர்த்தர் எச்சரித்தார். அதாவது சபை இருளுக்கும் இருளின் கிரியைகளுக்கும் உட்படும் என்றார்.

ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் (வெளி 2:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பல நற்காரியங்கள் செய்திருந்த போதும், அன்பு குறைந்தபோது, ஏன் இவ்வளவு கொடூரமான தண்டனை, எச்சரிப்பு? அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம் (மத்தேயு 24:12) என்று நம் இரட்சகர் சொல்லியிருக்கிறார். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்(1 யோவான் 5:3). தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் அதாவது தேவனுடைய சித்தத்தைச் சபையின் ஊழியரும் விசுவாசிகளும் செய்யாது, அக்கிரமம் மிகுதியாகக் காணப்படும் சபையே, அன்பிலே குறைந்த சபையாகும். இதனிமித்தமே எபேசு சபை கர்த்தரால் கடிந்துக் கொள்ளப்பட்டது.

யோவானுக்கு இந்த தரிசனமும் நிருபமும் வெளிப்படுத்தப்படுவதற்கு 15, 20 ஆண்டுகளுக்கு முன்னரே (கி.பி. 60-ஆம் ஆண்டு) இதேப்போன்ற எச்சரிப்பையும் ஆலோசனைகளையும் பரிசுத்த பவுல் எபேசு சபைக்கு தெரிவித்திருப்பதை வேதாகமத்தில் வாசிக்கிறோம். எபேசியருக்கு எழுதின நிருபத்தில் அன்பின் ஐக்கியத்தைக் குறித்தும், அன்பிலே நடந்துக் கொள்ளும்படியாகவும், கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் இருக்கும்படியாகவும், ஆவியினால் நிறைந்து எப்பொழுதும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கும்படியாகவும் பவுல் புத்தி சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரனே, சகோதரியே, நீயும் இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த அன்பின் கிரியைகளைச் செய்வாயா? குறைவுப்பட்ட ஐக்கியம் பூரணப்படட்டும்; நடக்கை கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தட்டும்; கனிநிறைந்த அன்பின் கிரியைகள் வாழ்வில்

வெளிப்படட்டும்; ஆவியில் நிறைந்த நற்சாட்சியின் வாழ்வு ஒளிரட்டும்.

அப்பொழுது மனுக்குலம் பாவத்தினிமித்தம் இழந்த பரதீசும் மறுக்கப்பட்ட மறைக்கப்பட்ட ஜீவவிருட்சத்தின் கனியும், உனக்கும் குடும்பத்திற்கும் சபைக்கும் தந்தருளப்படும். அல்லேலூயா !

## அன்பின் ஐக்கியம் (எபேசியர் 4:1-6)

ஆதி அன்பு குறைவுபடுகிறதற்கு முதலாவது காரணம் ஐக்கியமின்மையே. விசுவாசிகளின் ஐக்கியத்தையும், அந்நியோந்நியத்தையும் முற்றிலும் வெறுக்கிற சத்துருவானவன், வெகு எளிதாக நம்மை வஞ்சித்து மனமேட்டிமையையும், அகங்காரத்தையும், ஆணவத்தையும், பொறுமையின்மையையும் நம்மில் உண்டுப்பண்ணி அன்பின் ஐக்கியத்தைக் குலைக்கிறான்.

இதனிமித்தமே பரிசுத்த பவுல் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடவுங்கள் (எபேசியர் 4:1) என்று புத்திசொல்லி எழுதியிருக்கிறார். நம்முடைய ஐக்கியத்தில், விசுவாசி என்ற நிலையில் நம் அழைப்பு இருக்குமேயானால், அப்படியே எல்லாவற்றிலும் செயல்படவும், கர்த்தரால் நியமிக்கப்பட்ட ஊழியராகவோ, தலைவராகவோ செயலாற்ற வேண்டுமானால் அந்தப் பொறுப்பை உணர்ந்து அழைப்புக்குப் பார்த்திர வான்களாக நடக்கவும் ஆலோசனை பெற்றிருக்கிறோம்.

மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் (எபேசியர் 4:2,3) என்று பவுல் புத்தி சொல்லுகிறார். கிறிஸ்துவின் அன்பையறிந்து நாம் நம்மை அர்ப்பணிக்கும் போது, இந்த அன்பின் ஐக்கியம், குடும்பத்திலும் சபையிலும் ஊழியங்களிலும் வெளிப்படுகிறது. அன்பின் உபசரிப்பிலும், பலவீனரைத் தாங்குவதிலும், விசுவாசத்தில் குறைவுள்ளவர்களைச் சேர்த்து அணைத்துக்கொள்ளுவதிலும், ஈவாகப் பெற்ற இரட்சிப்பை நாளுக்கு நாள் நற்செய்தியாக அறிவித்து கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவதிலும் அன்பின் ஐக்கியம் விளங்குகிறது.

அன்பினால் உந்தப்பட்டு உற்சாகமாகச் செய்யப்பட்ட இவ்வகையான நற்கிரியைகள், பின்னர் முறைப்படுத்தப்பட்டு சடங்காக அனுசரிக்கப் படுகிறதையும், தொடர்ந்து சபையின் பாரம்பரியம் என்ற போர்வைக்குட்பட்டு ஆரம்ப நிலையின் அன்பு குறைவுப்பட்டு கடமைக்காக

செய்யப்படுகிறதையும் காண்கிறோம். நாளடைவில் தனிமனிதரின் மனமேட்டிமையும் ஆணவமும் அகங்காரமும் பொறுமையின்மையும், போட்டியாகவும், பொறாமையாகவும், பிரிவினைகளாகவும், வழக்கு களாகவும், வெளிப்படையான குற்றச்சாட்டுகளாகவும் வெளிப்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் அன்பிலும், ஐக்கியத்திலும், ஜெபத்திலும் நற்செய்திப்பணியிலும் முன்மாதிரியாக ஒரு சபையும் ஊழியரும் விசுவாசிகளும் செயல்பட்டு வந்தனர். கர்த்தருடைய ஒத்தாசையுடன் புதியதொரு தேவாலயமும் கட்டி முடித்தனர்: ஜெபமும் நற்செய்திப்பணியும் தொடர்ந்தது. பின்னர் தங்களை முன்னிலைப்படுத்தி, சபையில் தங்களுடைய பங்களிப்பை பெருமையாகப் பேசும் ஒரு கூட்டமும் எழுந்தது. அன்பும் ஐக்கியமும் குறைவுப்பட ஆரம்பித்தது. நாளடைவில் சண்டையும் சச்சரவும், சபைக்கு விரோதமாக சபை மூப்பர்களின் உண்ணாவிரதமும், வழக்குகளும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டு சபையின் சாட்சி சந்திக்கு வந்தது. எந்த சபையின் ஐக்கியத்தால் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டதோ, அதற்கு நேர்மாறாக அதே சபையின் சாட்சி சிதைந்து, அவருடைய நாமம் மாசுப்பட்டது.

ஆம் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்வும் குடும்பமும் சபையும் ஊழியமுங்கூட இதேப்போன்ற நிலையில் இருக்கலாம். இப்பொழுதாவது வரவிருக்கும் கடைசி நியாயத்தீர்ப்பை மனதில் கொண்டு நிச்சயமாக நியமிக்கப்பட்டிருக்கிற பேரழிவை உணர்ந்து மனந்திரும்பி, ஆதியில் செய்தக் கிரியைகளை கிறிஸ்துவின் அன்போடுச் செய்ய அழைக்கப்படுகிறோம், எச்சரிக்கப்படுகிறோம்.

## அன்பின் நடக்கை (எபேசியர் 5:1-9)

ஐக்கியத்தை அடுத்து, ஆதி அன்பு சபைகளில் குறைவுப்படுவதற்கு காரணம் தனிநபர்கள், ஊழியர்கள் மற்றும் தலைவர்களின் நடக்கை என்பதாக எழுதப்பட்டிருக்கிறது. தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி கிறிஸ்து நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துக்கொள்ளுங்கள் என பவுல் எழுதி வைத்திருக்கிறார். மேலும் பரிசுத்தவான்களுக்கேற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும், ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும் புத்தியீனமான பேச்சும் பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரக ஆராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே

சுதந்திரமடைவதில்லை என அறிந்திருக்கிறீர்களே (எபேசியர் 5:3-5) என்று பவுல் எச்சரிக்கிறார்.

ஆதி அன்பு குறைவுபடாமல் இருக்க, நம்முடைய நடக்கை அன்புள்ளதாக இருக்க வேண்டும். அன்பிலே நடந்துக் கொள்ள வேண்டும் என்றால், வேசித்தனமும், விபச்சாரமும் மற்ற அசுத்தமும் நம்மில் காணப்படக்கூடாது; விக்கிரக ஆராதனையான பொருளாசைக்கு விலகியிருக்க வேண்டும்; வம்பும் புத்தியீனமான பேச்சும் பரியாசமும் தவிர்க்கப்பட வேண்டும்.

வேசித்தனமும் விபச்சாரமும் மற்ற அசுத்தங்களும் சபைத் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியிலும் பேசப்படுகிறதை நாம் அறிவோம். திசைமாறிச் செல்லும் அநேக சம்பவங்களை அறிந்திருந்தாலும், இவைகளைச் செய்திகளில் எழுதுகிறதற்கு தயங்கினாலும், இப்பேர்பட்ட அசுத்தங்கள் உன்னுடைய என்னுடைய வாழ்வை, சாட்சியை சிதைக்காதபடிக்கு ஜாக்கிரதையாக இருப்போம். இவை நம் வாழ்வில் காணப்பட்டால், இன்றே மனந்திரும்பி, நித்தியவேதனை அழிவிலிருந்து தப்புவிக்கப்பட நம்மை அர்ப்பணிப்போம்.

விக்கிரக ஆராதனையாகிய பொருளாசையின் பேர்முதலாக நமக்குள்ளே சொல்லப்படக்கூடாது என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. அநேகர் பொருளையும் படிப்பையும் அந்தஸ்தையும் பணத்தையும் இச்சித்து, விசுவாசத்தை விட்டு விலகி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் சுயாதீன ஊழியர் மற்றும் விசுவாசிகள் மத்தியில் பிரபலமான ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றி நம்மில் சிலர் அறிவோம். கர்த்தருக்கென்று நடந்து ஓடி உழைத்து துரிதமாக செயல்படவேண்டிய நாட்களில், நலத்திட்டங்கள் என்றப் பெயரிலே அநேகர் தேவனுடைய ஊழியத்தைச் செய்யக்கூடாமல் திசை திருப்பப்பட்டனர். தந்திரமான வார்த்தைகளினால், ஊழியர்களையும் பொருளாசைக்காரர்களாக மாற்றி, சத்துருவும் ஒரு சில தலைவர்களும் தங்களுக்கு ஆதாயத்தைத் தேடிக்கொண்டார்கள். பல ஆயிரம் விசுவாசிகளின் கோடிக்கணக்கான பணமும், ஊழியர்களின் நேரமும் விரயமாக்கப்பட்டது. விநோதத் திட்டங்கள் என்றப் பெயரில் வஞ்சித்து, ஆதி அன்பிலிருந்து நம்மைக் குறைவடையச் செய்கிற கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருப்போம். கள்ளப் போதகர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் (2 பேதுரு 2:2).

வம்பும் புத்தியீனப்பேச்சும் பரியாசமும், மிகவும் பரவலாக சபைக்

கூட்டங்களுக்கு முன்னரும் பின்னரும், ஊழியர் கூடுகைகளிலும் இடம் பெறுகிறதை நாம் அறிவோம். தேவனுடைய அன்பைக் குறித்தும் இராஜ்யப் பணிகளைப் பற்றியும், தெளிவுப் பெற்ற வேதப்பகுதிகளையும் பேசி மகிழ்வதற்கு மாறாக, ஊழியர்களின் தோற்றத்தைக் குறித்தும் அங்கு இல்லாதவர்களைப் பற்றியும், கேலியாகப் பேசி பரியாசம் பண்ணுகிறதினால் பாதிக்கப்பட்டவர்கள் அநேகருண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள் (2 தீமோ. 2:16).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய நடக்கையை தேவனுடைய இந்த வசனங்களின் வெளிச்சத்திலே ஆராய்ந்தறிந்து மனந்திரும்பி புதுப்பிக்கப்பட ஒப்புக்கொடுப்பாயா? இன்று முழுமனதோடு உண்மையாக அர்ப்பணிக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

## கனியற்ற அந்தகாரக்கிரியை (எபேசியர் 5:10-14)

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப் பாருங்கள், கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துக் கொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே (எபேசியர் 5:10-12) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

கர்த்தருக்குப் பிரியமானதைக் கர்த்தருடைய சித்தத்திற்குட்பட்டுச் செய்யாமல், தானும் கர்த்தருக்கென்று ஊழியஞ்செய்கிறேன் என்றப் போர்வையில் கனியற்றதும் அவலட்சணமுமான கிரியைகளை செய்கிறவர்களின் நிமித்தமே இந்த எச்சரிப்பு வெளிப்படுகிறது. இந்தக் கிரியைகள் அந்தகாரத்திலும் ஒளிப்பிடங்களிலும் செய்யப்படுகிறதாம். அவைகள் வெளிச்சத்தினால், கர்த்தருடைய முகப்பிரகாசத்தினால், தேவனுடைய வார்த்தையின் ஒளியினால் வெளியரங்கமாகுமாம் (எபேசியர் 5:13).

இது கர்த்தருடைய ஊழியங்கள் என்றப் பெயரில், சொந்த ஆதாயத்திற்கும் பிழைப்பிற்கடுத்தவைகளுக்காகவும் செய்யப்படும் கிரியைகளையும் ஊழியங்களையும் குறிக்கிறது. ஒரு புறம் உண்மையான நோக்கத்தோடு கர்த்தருடைய வழிநடத்துதலோடு அரசாங்கச் சலுகைகளைப் பெற்று நற்கிரியைகளைச் செய்வோர் இருக்கிறார்கள். மறுபுறம் வருமானவரிச்சலுகை, அந்நிய நாட்டு உதவி, இலவச மனைப்

போன்ற சலுகைகளை அரசாங்கம் மற்றும் பிற ஸ்தாபனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு ஒளிப்பிடத்தில் அவலட்சணமானக் கிரியைகளைத் தங்கள் சொந்த ஆதாயத்திற்காக செய்கிறவர்களும் உண்டு. அப்பேர்பட்டவர்களைக் குறித்தே பவுல்: தூங்குகிற நீ விழித்துமரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபேசியர் 5:14).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, ஆவிக்குரிய வாழ்வில், கர்த்தருக்குப் பிரியமான நற்கரியைகளைச் செய்யாமல் நீயும் தூங்கிக்கொண்டிருக்கிறாயா? நீ இப்பொழுது இருப்பது, நீ செய்யும் கிரியைகள், ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்கள், பிரகாசிப்பிக்கப்படக்கூடாதவர்கள் இருக்கும் இடம் என்பதை அறிவாயா? ஒருவனும் கிரியைச் செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது (யோவான் 9:4). ஆகையால், நீ எழுந்திரு; மனந்திரும்பு, அப்பொழுது கர்த்தருக்குப் பிரியமான அன்பின் கிரியைகளை மறுபடியும் செய்ய, ஆதி அன்பில் புதுப்பிக்கப்பட, கிறிஸ்து உன்னைத் தன்னுடைய ஒளியிலே பிரகாசிப்பிப்பார்.

## ஆவியின் நிறைவு (எபேசியர் 5:15-21)

நிறைவாக, தேவனுடைய பிள்ளைகளே வாழ்வில் ஆதி அன்பு தணிந்துப் போகாமலிருக்க, மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ள வேண்டுமாம். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் என்று பவுல் ஆலோசனையாக எழுதி வைத்திருக்கிறார்.

## ஜெயங்கொள்ளுகிறவனுக்கு ஜீவ விருட்சத்தின் கனி

கர்த்தருடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பி தேவசித்தத்தைச் செய்கிற ஜெயங்கொள்ளுகிறவனுக்கு, தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்று ஆவியானவர் கடிதத்தை நிறைவுச் செய்கிறார். பரதீசு என்பதற்கு பெர்சிய

மொழியில் தோட்டம் என்று அர்த்தமாம். இது ஏதேன் தோட்டத்தையும், பாவத்தினால் மனுக்குலம் வீழ்ச்சியடைவதற்கு முன்னர், மனிதனுக்கும் தேவனுக்கும் இருந்த பூரண உறவின் நிறைவையுங் குறிக்கிறது.

கர்த்தரால் கொடுக்கப்பட்டாலொழிய எடுக்கக்கூடாதபடி, ஜீவவிருட்சத்திற்குப்போம் வழியைக் காவல் செய்ய கேருபீன்களையும், வீசிக் கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் முன்னர் தேவனாகிய கர்த்தர் வைத்திருந்தார் (ஆதி. 3:24). மனுக்குலம் பாவத்தினால் இழந்தப் பரதீசும், தேவனோடுள்ள பூரண உறவும், இம்மட்டும் எடுக்கக்கூடாதபடி தடைச் செய்யப்பட்டிருந்த ஜீவவிருட்சத்தின் கனியும், ஜெயங் கொள்ளுகிறவனுக்குத் தந்தருளப்பட்டு அவன் நித்திய வாழ்வினைப் பெறுவான்.

## இயேசுவை சந்திக்க நீ ஆயத்தமா?

கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது என்று வேதாகமமும், இந்நாட்களில் நடைபெறும் சம்பவங்களும் நம்மை எச்சரிக்கிறது. ஒருவேளை கர்த்தருடைய வருகைத் தாமதித்தாலும், அது ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் விரும்பி நம்மேல் நீடியப் பொறுமை யுள்ளவராயிருக்கிறபடியால் தாமதிக்கிறார் (2 பேதுரு 3:9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, கர்த்தருடைய நாள் தாமதித்தாலும், நிழலைப் போன்ற மாயையான மனுஷராகிய நம் வாழ்வின் முடிவு எந்நாளில் என்று நாம் அறியோமே! ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை (பிரசங்கி 8:8). அங்கும் இங்கும் சுற்றிலும் சிறியோரும் பெரியோரும் வாலிபரும் கன்னியரும் மரணத்திற்குட்பட்டு கடந்துச் சென்றுக் கொண்டிருக்கிறார்களே!

கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. ஆம், பிரியமானவர்களே, இதற்கும் மேலாக நம் ஒவ்வொருவருடைய கடைசி நாளும் சமீபமாயிருக்க வாய்ப்பிருக்கிறது. நியாயாதிபதி இயேசுவை சந்திக்க நீ ஆயத்தமா?

# சிமிர்னா சபை

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும்,
திடன் கொள்ளுங்கள் இயேசு உலகத்தை ஜெயித்தார்!
தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.
ஆகையால் நீ பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே!

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்
திராணிக்கு மேலாக சோதிக்கப்பட தேவன் இடங்கொடார்;
சோதனையிலிருந்து தப்பிக் கொள்ள போக்கையும் உண்டாக்குவார்.

நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்,
என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்ற எலியாவுக்கு
ஏழாயிரம் பேரை மீதியாக வைத்திருக்கிறேன் என்றார் கர்த்தர்.

உண்மையுள்ளவனைக் கர்த்தர் தற்காக்கிறார்.
உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்,
நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் கர்த்தர் உண்மையுள்ளவர்;
உண்மையுள்ளவன் என்றெண்ணி நம்மை ஊழியராக்கினார்.
கொஞ்சத்தில் உண்மையாயிருந்த ஊழியன் அநேகத்தின் மேல் அதிகாரி!

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு
அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே,
கொஞ்சகாலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி
ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நிலை நிறுத்துவாராக!

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
இரண்டாவது இடம் பெறுவது
சிமிர்னா சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
சிமிர்னா ஏழ்மையும் துன்புறுத்தப்பட்டதுமான சபை.

முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர்,
சிமிர்னா சபைக்கு ஜீவகிரீடத்தைப் பெறச்சொன்ன ஆலோசனை :

**நீ மரணபரியந்தம் உண்மையாயிரு !**

*நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே*
*ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான*
*நம்முடைய கர்த்தராகிய இயேசுவை*
*மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின*
*சமாதானத்தின் தேவன்,*
*இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப்*
*பிரியமானதை உங்களில் நடப்பித்து,*
*நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய*
*உங்களைச் சகலவித நற்கிரியையிலும்*
*சீர் பொருந்தினவர்களாக்குவாராக,*
*அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக,*
*ஆமென்*
(எபிரெயர் 13:20,21)

# 3. நீ மரணபரியந்தம் உண்மையாயிரு

போதகர் ஒருவர் “நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்” (வெளி. 2:10) என்ற வசனத்தை வருடத்தின் வாக்குத்தத்த வசனமாக தனது சபைக்குக் கொடுத்தார். இதைப் பெற்றுக்கொண்ட சிலர், ஆண்டின் ஆரம்பத்திலேயே ஏன் மரணத்தை நினைவூட்டுகிறீர்கள் என்று சொல்லி அங்கலாய்த்தார்களாம்.

மரிப்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் பிறக்கிற ஒவ்வொரு மனுஷரும், தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற நாள் வரையில் வாழ்ந்து மரித்து, நியாயந்தீர்க்கப்படும்படியாக நியாயாதிபதியாக வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் முன்பாக நிறுத்தப்படுவர் என்பது வேதாகமம் போதிக்கும் உண்மை.

ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான் (யோபு:14.1) அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது (யோபு 14:5). தன்னுடைய ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை, மரணநாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை. (பிரசங்கி 8:8). அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

மனுஷராகிய நம் ஒவ்வொருவருடைய நாட்களும் முன் குறிக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு இரட்சிக்கப்பட நம்மை அர்ப்பணிப்போம்.

நாம் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மரணநாளையும் வேளையையும் நாம் அறியக்கூடாதவர்களாக இருக்கிறோம். மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து பூமியை நியாயந்தீர்க்க வரும் நாழிகையையும் நாம் அறியாதவர்களாக இருக்கிறோம். ஆகவே, வரவிருக்கும் மேசியாவாம் இயேசுகிறிஸ்துவைச் சந்திக்க, நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படுவோம்! மிகுந்த ஆவலோடே காத்திருப்போம்!

## தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (2 கொரி 5:10). எனவே, இவ்வுலகில் நாம் வாழ்கின்றபோது அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுவோம். நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:12) என்று பரிசுத்த பவுல் எழுதியிருக்கிறார்.

அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். (மத்தேயு 25:31,32) அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்படும்; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்படும் (வெளி 20:12). யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைவார்கள். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான் (வெளி 20:15).

தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார் (ரோமர் 2;6,7) ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி 21:27).

## ஜீவபுஸ்தகத்தில் உன் பெயர் இருக்கிறதா?

ஜீவபுஸ்தகம் கர்த்தருடைய புஸ்தகம் (யாத் 32:32) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கர்த்தரால் மீட்டகப்பட்டவர்களின் பெயர்கள் அதில் எழுதப்பட்டிருக்கும். இப்படியாக மீட்கப்பட்டவர்கள் தேவனுக்கு விரோதமாக மறுபடியும் பாவம் செய்யும்போது, அவர்களுடைய பேரை கர்த்தருடைய புஸ்தகத்திலிருந்து கர்த்தர் கிறுக்கிப்போடுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன் (யாத் 32:33) என்று சொன்னார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தினாலே கழுவி சுத்திகரிக்கப்பட்டு, முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். இப்படியாக ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்த்திரம் தரிப்பிக்கப்படும், ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளி 3;5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்ட நீங்களும் நானும், ஜீவபுஸ்தகத்திலிருந்து நம்முடைய பெயர்கள் நீக்கப்படாமலிருக்க, நம்முடைய ஆவிக்குரிய நிலைகளை ஆராய்ந்து அறிந்து, மனந்திரும்பி, வரவிருக்கும் அக்கினிக்கடலின் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இதற்கு பேருதவியாக அப்போஸ்தலனாகிய யோவானுக்கு கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட சபைகளுக்கான தரிசனம் உள்ளது.

## சபைகளுக்கு வெளிப்படுத்தப்பட்ட விசேஷம்

திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில், அப்போஸ்தலனாகிய யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு கர்த்தரிடத்திலிருந்து பெற்ற தரிசனம் இடம் பெற்றிருக்கிறது.

இவற்றில் இரண்டாவதாக இடம் பெற்றிருக்கும் சிமிர்னா சபைக்கு எழுதப்பட்ட கடிதம், இரட்சிக்கப்பட்ட தேவ ஜனத்திற்கு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களுக்காக எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் இவ்வுலகப் பாடுகளுக்கு ஊடாக கடந்துச் செல்லும்போது, மரணபரியந்தம் உண்மையாக விசுவாசத்தில் நிலைத்திருந்து, இரண்டாம் மரணத்தின் சேதமின்றி காக்கப்பட எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

இந்தக் கடைசி நாட்களில், இரட்சிப்பின் நிச்சயத்தோடு விசுவாசத்தில் நிலைத்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், சிமிர்னா சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தோடு, நம்முடைய ஆவிக்குரிய நிலையை ஒப்பிட்டுப் பார்க்க அழைக்கப்படுகிறோம். கொடுக்கப்பட்டிருக்கிற ஆலோசனைகளைப் பற்றிக் கொண்டு சோர்ந்துபோகாமல் நம்முடைய மரணபரியந்தம் உண்மை யாயிருந்து ஜீவகிரீடத்தை கர்த்தருடைய பாராட்டாகப் பெற்றுக் கொள்ளுவோம். ஜெயங்கொண்டு மரணத்திலிருந்து தப்பி நித்திய ஜீவனை அடைவோம், அல்லேலூயா!

## சிமிர்னா சபையின் நியாய விசாரிப்பு

சிமிர்னா மிகவும் அழகான ஒரு பட்டணமாகவும், உலக ஆஸ்தியிலும் வியாபாரத்திலும் சிறந்த ஒரு இடமாகவும், அக்காலத்தில் யூதர்கள் அதிகமாக வாழ்ந்த ஒரு பகுதியாகவும் ஆசியாவில் இருந்தது. சிமிர்னா பட்டணம் ஆசியாவின் கிரீடம், என்பதாக வருணிக்கப்படுகிறது. தற்பொழுது சிமிர்னா, இஸ்மிர் என்றப் பெயருடன் துருக்கி (Izmir in Turkey) நாட்டின் இரண்டாவது பெரிய பட்டணமாக உள்ளது.

அந்நாட்களில் இப்பகுதியில், இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் மேல் விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளின் நிமித்தம், சிமிர்னா சபையினர் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக இருந்தார்கள். ஆனாலும், ஆவிக்குரிய வாழ்வில் சிமிர்னா சபையின் ஊழியரும் விசுவாசிகளும், ஐசுவரியமுள்ளவர்களாகவே காணப்பட்டார்கள். இயேசுகிறிஸ்துவைப் பற்றிக்கொண்டதினிமித்தம், அந்தப்பட்டணத்திலிருந்த யூதர்களால் சபைக்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. இதனிமித்தமே, சிமிர்னா சபை, உலகப்பிரகாரமாக ஏழ்மையும் துன்புறுத்தப் பட்டதுமான சபை (Poor and persecuted Church) என்பதாக குறிப்பிடப்படுகிறது.

சிமிர்னா பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு, நற்செய்தியை அறிவிக்கும் ஊழியருக்கு, எழுதப்பட்ட வார்த்தைகள் வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரம் எட்டு முதல் பதினொறு வசனங்களில் வேதாகமத்தில் உள்ளது. நம்முடைய இரட்சகர் இங்கே தம்மை முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமாக வெளிப்படுத்துகிறார். சகலத்தையும் அறிந்திருக்கிறவர், மரித்து உயிர்த்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர், மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறவர், நம்மோடும் இருக்கிறார். அல்லேலூயா!

ஆகையால், கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய மரணத்தைக் குறித்தோ, பாதாளத்தைக் குறித்தோ நாம் பயப்படத்தேவையில்லை. இவைகளும் நம்முடைய கர்த்தரின் ஆளுகைக் குட்பட்டிருக்கிறது. பரிசுத்த பவுலோடுக்கூட நாமும் : மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி. 15:55,57) என்று தைரியமாகச் சொல்லலாம்.

## உன் உபத்திரவத்தையும் தரித்திரத்தையும் அறிவேன்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தால் மீட்கப்பட்ட உன்னுடைய வாழ்வில், உபத்திரவங்களையும் குறைவுகளையும், சகலவிதமான உன் தேவைகளையும் நினைத்து, மனங்கசந்து வேதனையோடு இருக்கிறாயா? மனங்கலங்காதே, நீ தனித்து விடப்படவில்லை. உலகத்தை ஜெயித்த நம் இயேசு உன்னோடிருக்கிறார். உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும் .. அறிந்திருக்கிறேன் (வெளி. 2:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கி யமாயிருந்த எலியா தீர்க்கதரிசியும் இவ்விதமாகவே நினைத்தார். நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்கள் என்றார் (1 இராஜாக்கள் 19:10). ஆனாலும் கர்த்தர் : பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார் (1 இராஜாக்கள் 19:18).

ஆம், பிரியமானவர்களே, நாம் தனித்து இந்த அவலநிலையில் விடப்படவே இல்லை. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை (1 கொரி. 10:13). தேவன் உண்மையுள்ளவர்; வாக்களித்து பாதுகாத்து வழிநடத்துபவராக நம்மோடு இருக்கிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் (சங்கீதம் 23:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சிமிர்னா சபையின் விசுவாசிகளும் ஊழியர்களும் உலகத்தின் உபத்திரவங்கள் தரித்திரத்தின் மத்தியிலும், ஆவிக்குரிய வாழ்வில் மிகுந்த ஐசுவரியவான்களாக இருந்தனர். தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன் (வெளி. 2:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விசுவாசிகள் என்றப் பெயரில், சபையிலும் குடும்பங்களிலும், விசுவாசத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடுகிறர்களைச் சாத்தானின் கூட்டம் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. இந்தக் கூட்டத்தினர் சபைக்கும், குடும்பங்களுக்கும் விசுவாசிகளுக்கும் விரோதமாக துணிந்து செயல்படுகிறதை நாம் காணலாம். இவற்றை நம்முடைய குடும்பங்களிலும்

சபையிலும் காணும்போது, பயப்படாமல் கர்த்தருக்கென்று உண்மையாக நாம் செயல்பட கர்த்தர் நம்மை அழைக்கிறார்.

பிரசித்திப்பெற்ற தேவாலயம் ஒன்றில், திருச்சபையாக தேவனுக்கு நன்றி செலுத்தும்படியாக ஆராதனையும் ஐக்கிய விருந்தும் ஒழுங்குச் செய்திருந்தார்கள். சபையின் ஆராதனையும் நிகழ்வுகளும் சிறப்பாக நடந்தது. சிறப்பு உணவும் தயாரிக்கப்பட்டு அன்பின் விருந்தாக பரிமாறப்பட்டது. முடியும் தருவாயில் எஞ்சி நின்ற சிலருக்கு துரிதமாக உணவு தயார் செய்துக்கொண்டிருந்தார்கள். ஏனோ, காத்திருந்த மூப்பர் சிலரின் ஏளனப்பேச்சும் தூஷணமும், சிமிர்னா சபையின் நெருக்க நிலையை நினைவூட்டியது. இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள் (யூதா12).

சிமிர்னா சபைக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனையின்படி தேவனுடைய பிள்ளைகளும், பொறுப்பாளர்களும், இதைப்போன்ற நிகழ்வுகளினால் கலங்கி தவிக்காமல், பயப்படாமல் கர்த்தருக்கென்று உண்மையாக செயல்பட்டு தேவசித்தத்தை நிறைவேற்றுவோம். அல்லேலூயா! கர்த்தர் நம் கிரியைகளையும் நம் உபத்திரவத்தையும் நமக்கிருக்கிற தரித்திரத்தையும் அறிந்திருக்கிறார்

## பாடுகளைக்குறித்து பயப்படாதே

நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்.. (வெளி. 2:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ பாடுபடுவாய், பிசாசானவன் உங்களை கட்டுகளுக்குட்படுத்தி காவலில் போடுவான், உபத்திரவப்படுவீர்கள் என்று வேதாகமம் முன்னெச்சரிக்கிறது. கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கும் உங்களுக்கும் எனக்கும் வேதாகமம் எடுத்துரைக்கும் மற்றுமொரு உண்மை : பாடுகளும் உபத்திரவங்களும் கட்டுகளும் தேவனுடைய பிள்ளைகளுக்கு உண்டு.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு (யோவான் 16:33); அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2தீமோ. 3:12); ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்ற ஜெயகிறிஸ்து நம்மோடிருக்கிறார். கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற நம்மை அவர் சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி

பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக (1 பேதுரு 5:10). ஆனபடியினாலே நாம் சோர்ந்துப் போகிறதில்லை, நம் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது … அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2கொரி. 4:16,17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிசாசானவன் சபையில் சிலரைக் காவலில் போடுவானாம், கட்டுகளுக்குட்படுத்துவானாம்; பத்துநாள் உபத்திரவத்திற்குட்படுவார்களாம். சபையும் விசுவாசிகளும் ஊழியர்களும் கிரியைகளை நடப்பிக்கக்கூடாதபடிக்கு கட்டப்படுகிற நிலை. சென்னையில் கர்த்தருக்கென்று ஊழியஞ்செய்யும் தேவமனிதர் ஒருவர் ஊழியத்திற்காக பிரயாணப்பட்டார். பேருந்து இரவில் சிறிது இளைப்பாற நிறுத்தப்பட்டு பயணம் தொடர்ந்தபோது, ஊழியரது இருக்கையில் வேறொருவர் அமர்ந்தார்; சிறிது நேரத்தில் பேருந்து பெரிய விபத்திற்குட்பட்டது. அநேகருக்கு பலத்த காயங்கள்; ஊழியர் முன்னர் இருந்த இருக்கையில் மாறி அமர்ந்தவர் மரித்துப் போனார். ஊழியர் காலில் முறிவு ஏற்பட்டு சிகிச்சைப் பெற்றார்.

பிசாசானவன் ஊழியர் தேவனுக்கென்று செயல்படாமல் அவரைக் கட்டுகளுக்கு உட்படுத்தினாலும், குறிப்பிட்ட காலங்கள் உபத்திரவப்படுத்தினாலும், கர்த்தர் கிருபையாக அவருடைய ஜீவனைக் காத்தார். கர்த்தர் ஊழியருக்கு இந்நாட்களை இளைப்பாறுதலின் காலமாகவும், கர்த்தருடைய பிரசன்னத்தில் காத்திருந்து கற்றுக்கொள்ளும் வேளையாகவும் ஆசீர்வதித்தருளினார். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன் (சங்கீதம் 119:71) என்று சங்கீதக்காரனோடு ஊழியர் சாட்சிப்பகரும்படியாக கர்த்தர் ஆசீர்வதித்தார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இவ்வகையான சூழ்நிலைகளிலும், மரணமே நேரிடுகிறதாக இருந்தாலும் நீ உண்மையாயிருக்க நம் இயேசு விரும்புகிறார். பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாது, கர்த்தருடைய சித்தத்தை உன் வாழ்வில் உண்மையாய் செய்ய உன்னை இன்று அர்ப்பணிப்பாயா? கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக.

**நீ உண்மையாயிரு**

வாழ்வின் உபத்திரவங்கள் காவல் கட்டுகளிலும், மரணமே நேரிடுகிறதாக இருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்து, கடைசிமட்டும் உண்மையாயிருக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் ஜீவகிரீடத்தைத் தருவேன் என்று வாக்கருளியிருக்கிறார்.

இங்கு உண்மை என்பது, நம்முடைய வாழ்விலும் தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்த பணிகளிலும், கர்த்தருடைய நம்பிக்கைக்குரியவர்களாக, கர்த்தருக்குச் சித்தமானவைகளையெல்லாம், கர்த்தர் விரும்புகிறபடிச் செய்கிறதைக் குறிக்கிறது. மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் (எபிரெயர் 3:2) என்றும்; கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்தான் (யாத் 40:16) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி. 28:20). உண்மையானவனைக் கர்த்தர் தற்காக்கிறார் (சங்கீதம் 31:23). வாழ்வில் நிறைவடைந்திருக்கும்போது உண்மையாக நம்பிக்கைக்குரியவர்களாக செயல்படுவது எளிதாக இருக்கலாம்; ஆனால், வாழ்வின் நெருக்கங்களில் குறைவுகளில் கர்த்தருடைய நம்பிக்கைக்குரியவர்களாக உண்மையாக செயல்படுபவர்களே, கர்த்தருடைய நன்மதிப்பைப் பெறுகிறார்கள். இயேசுகிறிஸ்து பரலோகராஜ்யத்தைப் பற்றிச் சொல்லிய உவமையில், கொஞ்சத்திலே உண்மையாயிருந்த உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரன், அநேகத்தின்மேல் அதிகாரியாக வைக்கப்படுகிறதை வேதாகமத்தில் மத்தேயு 25:21-ல் வாசிக்கிறோம்.

இளம்பிராயத்தில் தாவீது தன் தகப்பனுடைய ஆடுகளை, தனக் கொப்புவித்த மந்தையை, உண்மையாக மேய்த்தான், காத்துக்கொண்டான். ஒருவிசை சிங்கமும், ஒருவிசை கரடியும் ஆட்டைப் பிடித்துக்கொண்டது; தாவீது அதைத் தொடர்ந்துப்போய், அவைகளை அடித்து ஆட்டைத் தப்புவித்தான். உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிற தேவன், தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு ஆட்டுத்தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக்கொண்டு வந்தார். தாவீது அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான் (சங்கீதம் 78:70-72). தாவீதின் உண்மையைக் கண்ட தேவன் : ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்

குறித்துச் சாட்சியுங்கொடுத்தார் (அப். 13:22).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய பணியில் உறவில் ஊழியத்தில் நீ உண்மையாயிருக்கிறாயா? உள்ளத்தில் உண்மையிருக்க கர்த்தர் விரும்புகிறார். நாம் உண்மையில்லாத வர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் ... (2 தீமோ. 2:13) என்று பவுல் எழுதியிருக்கிறார். நம்மை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். உண்மையில்லாத நிலையிலும், நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம்பல் 3:22). நம்முடைய காலம் கடந்துச் செல்லும் முன்பாக, ஜாக்கிரதையாய் மனந்திரும்பி, கர்த்தருக்குள் உண்மையாய் ஜீவிக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்துவுக்குள் உண்மையாக வாழ்விலும் உறவிலும் செயல்படாமல், ஊழியர் என்றப் போர்வையில் ஆட்டுத்தோல்களைப் போர்த்திக்கொண்டு வஞ்சிக்கிற ஓநாய்கள் அநேகர் இருக்கிறார்கள். இப்பேர்பட்டவர்களால் ஏமாற்றப்பட்டு பல லட்சங்களை இழந்தவர்கள் அநேகர். இவர்களின் ஆன்மீகம் மற்றும் மாம்சீக அத்துமீறல்களால் பாதிக்கப்பட்ட அநேகரின் வேதனை வெளிப்படுத்தப்படாமல் மறைந்திருப்பதை நாம் அறிவோம்.

ஆகவே, குடும்பத்திலும் சபையிலும் மற்ற ஊழியங்களிலும் நம்மை உண்மையுள்ளவர்களென்றெண்ணி கர்த்தர் நமக்களித்திருக்கிற பங்கு சிறிதானாலும் பெரிதானாலும், மறைக்கப்பட்டதானாலும் வெளியரங்கமான பங்கானாலும், அதை இருதயத்தின் உண்மையின்படியே, தேவனுக்கென்று செய்ய அழைக்கப்படுகிறோம். அப்பொழுது கர்த்தர் நமக்கு பரிபூரண ஆசீர்வாதங்களைத் தருவார், பாதுகாப்பார்; கொஞ்சத்தில் உண்மையாயிருக்கிற நம்மை, அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பார்; மரண பரியந்தம் உண்மையாயிருக்கும்போது ஜீவகிரீடத்தை நமக்குத் தந்து நம்மையும் கனப்படுத்துவார்! அல்லேலூயா!

## ஜெயங்கொள்ளுகிறவன் சேதப்படுவதில்லை

நிறைவாக ஆவியானவர்: ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது (வெளி. 2:11) என்று கட்டளையிடுகிறார். மரித்து பிழைத்தவர், மரணபரியந்தம் உபத்திரவம் பாடுகளுக்கு மத்தியிலும் உண்மையாயிருந்து ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்கிறார். மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் (வெளி. 20:14,15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டாம் மரணத்தில் பங்குபெறுபவர்கள் நித்திய காலமும் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி. 21:8). இரண்டாம் மரணத்தினால் சேதப்படாதவர்கள் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைவார்கள். அவனவனுக்கு கர்த்தர் அளிக்கும் பலனைப்பெற்று நித்தியகாலமாய் தேவனோடு வாழும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். வாழ்வின் நிறைவுவரை, மரணபரியந்தம் உண்மையாக ஜீவித்து கடந்து செல்பவர்களின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்களாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள். அவர்கள் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான தேவஜனமே, கர்த்தரால் மீட்கப்பட்டு ஜீவபுஸ்தகத்தில் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் நம்முடைய கிரியைகளையும், உபத்திரவங்களையும், நமக்கிருக்கிற குறைவுகளையும் அறிந்திருக்கிற தேவன் நமக்குண்டு.

நம்முடைய வாழ்வின் பாடுகளையும் வேதனைகளையும் இழப்புகளையும் குறித்து கலங்கி தவிக்காது, மரணபரியந்தம் வாழ்விலும் உறவிலும் ஊழியத்திலும் உண்மையாயிருப்போம்! வாக்களிக்கப்பட்ட ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுவோம்! நம்மை அழைத்தவர், நமக்கு வாக்களித்தவர் உண்மையுள்ளவர். ஜெயங்கொள்ளுகிற நம்மை, அழிவிலிருந்து மீட்டெடுத்து நித்தியஜீவனைத் தந்தருளி, நம்முடைய நற்கிரியைகளுக்கேற்ற பலனை நமக்கு நிறைவாய் தந்தருள்வார்! ஆமென்.

# பெர்கமு சபை

திகைத்து திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடக்கிறது.
தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்;
ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்;
இப்படி இருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது;
ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? என்கிறார் கர்த்தர்.

ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல்,
சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைச் சேர்த்துக் கொண்டு,
சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச்
சாய்ந்து போகுங்காலம் வரும் - என எச்சரிக்கிறார் பவுல்.

கிறிஸ்தவ பண்புகளை வாழ்வில் கடைபிடிப்பதில் உறுதியற்றநிலை;
கற்பனைகளைக் கைக்கொள்வதில் நிர்விசாரமான போக்கு;
உலகத்தோடு இசைந்து இணக்கமாக வாழும் வாஞ்சை;
தேவன் அருவருக்கும் செயல்களைச் செய்ய ஊக்குவிக்கும் போதகம்;
பரிசுத்தம் பெற கர்த்தரை அனுதினமும் வேண்டுவதே அவசியமற்றது
போன்ற கொள்கை விபரீதங்களை நோக்கி ஓடும் சபைகள்!

தேவனுடைய வார்த்தை ஜீவனும் வல்லமையும் உள்ளது;
இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானது.
தேவனுடைய வார்த்தை கிருபையினால் இரட்சிக்கும், ஜீவனளிக்கும்;
வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை வசனமே நியாயந்தீர்க்கும்

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
மூன்றாவதாக இடம் பெறுவது
பெர்கமு சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
பெர்கமு கொள்கைகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற சபை.

சுகவாழ்வு உபதேசங்களால் வஞ்சிக்கப்படாது; கொள்கை
விபரீதங்களை இனங்கண்டு தவிர்த்து ஜெயங்கொள்ளுகிறவன்,
இயேசுகிறிஸ்துவின் வாக்கினால் வளம் பெறுகிறான்.

அந்த வார்த்தை : **இருபுறமும் கருக்குள்ள பட்டயம் !**

*கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல்*
*பிரியம் வைக்கிறார்;*
*அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும்,*
*அவர்கள் கையில் இருபுறமும்*
*கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.*
*இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள்*
*யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா*

*(சங்கீதம் 149:4,8,9).*

# 4. இருபுறமும் கருக்குள்ள பட்டயம்

ஆதியிலே தேவனிடத்திலிருந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று வேதாகமத்தில் யோவான் முதலாம் அதிகாரம் 1 மற்றும் 14 வசனங்களில் வாசிக்கிறோம்.

மேலும், யோவான் கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில், இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே என்றும்; புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது என்றும்; ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது என்றும் (வெளி. 19:13,15,16) தான் கண்ட தரிசனத்தை விவரித்திருக்கிறார்.

ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமான தேவனுடைய வார்த்தையானவர், கூர்மையான பட்டையமான தேவனுடைய வசனத்தினாலே யுத்தம் பண்ணி சத்துருக்களை சங்கரிக்கிறவராய் (வெளி.19:21) இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டு தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிற நாமுங்கூட, அவ்வாறே தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொண்டு பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி ஆலோசனைப் பெற்றிருக்கிறோம்.

## கர்த்தருடைய வார்த்தை – ஆவியின் பட்டயம்

அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய வார்த்தையை தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் என்று குறிப்பிடுகிறார். கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளான யோவான், தனக்குத் தம்மை வெளிப்படுத்தின இயேசுகிறிஸ்துவின் தோற்றத்தை விவரிக்கும்போது:....அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது (வெளி.1:16) என்று எழுதி வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவும் பெர்கமு சபையின் தூதனுக்கு எழுத வேண்டியதை யோவானுக்கு அறிவித்தபோது தம்மை, இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது என்று அறிமுகப்படுத்துகிறதைக் (வெளி 2:12) காண்கிறோம்.

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது என்று (எபிரெயர் 4:12) வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

பிசாசானவன் தந்திரமாக செயலாற்றி விசுவாசிகளாகிய நம்மையும், ஊழியர்களையும் சபையையும் வஞ்சிக்கும் காலங்களுக்குள்ளாக கடந்து வந்திருக்கிறோம். இதனிமித்தமே பரிசுத்த பவுல்: நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6: 11,12) எனத் தெளிவாக எச்சரிக்கிறார்.

## ஏதேன் தோட்டத்து வஞ்சகம்

உபத்திரவங்களினாலும் பாடுகளினாலும் துன்பங்களினாலும் விசுவாசிகளையும் ஊழியர்களையும் திருச்சபைகளையும் தங்களுடைய விசுவாசத்திலிருந்து இடறிவிழச் செய்யக்கூடாத எதிராளியான பிசாசானவன், இந்நாட்களில் புதிய யுக்திகளுடன் செயல்படுகிறதைப்போல காண்கிறோம். இவைகளைக் கூர்ந்து கவனிப்போமேயானால், புதிய யுக்திகள் என சொல்லப்படுபவைகள் யாவும் பழைய வலுசர்ப்பமாகிய சாத்தானின் ஏதேன் தோட்டத்து வஞ்சகத்தைச் சார்ந்தவைகளே என்பதை நாம் காணமுடியும்.

பாவத்தில் சிக்குண்டவர்கள் மனந்திரும்பி மீட்கப்படுவதற்கு மாறாக, தாங்கள் இருக்கிற உலகத்தோடு ஒத்த வாழ்வின் நிலைகளில் மேன்மைப்பாராட்டி செயல்பட தூண்டும் போதனைகள் தந்திரமாக வெளிப்படுகிறது. தேவஜனம் பிரியப்படுகிற உபதேசங்களையே போதிப்பதிலும், அழிவுக்கேதுவான கொள்கை விபரீதங்களை வஞ்சகமாய் நுழைப்பதிலும் வல்லுநர்கள் அநேகரையும் இந்நாட்களில் காண்கிறோம்.

## ஜனத்திற்கு பிரியமான உபதேசங்கள்

பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு, பாவத்தைக் குறித்தும்

நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கடிந்து உணர்த்தி ஆத்தும இரட்சிப்பிற்கேதுவாக விசுவாசிகளை வழிநடத்தும் போதகர்கள் உண்டு. இதைக் காட்டிலும் யாவரும் விரும்புகிற ஆசீர்வாதமான வார்த்தைகளையும், இயேசுகிறிஸ்துவில் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற சுகவாழ்வையும் பாதுகாவலையும் மட்டுமே பிரதானப்படுத்தி போதிக்கிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். இதற்கென நமக்குள் எதிர்பார்க்கப்படும் விசுவாசம் பரிசுத்தம் உண்மை அன்பு போன்ற பண்புகளை இவர்கள் இலகுவாக மறைத்து, மேலோட்டமாக வெளிப்படுத்துகிறார்கள்.

இந்நிலையைக் குறித்து எரேமியா தீர்க்கதரிசி: திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்துவருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? (எரேமியா 5:30, 31) என்று எழுதியிருக்கிறார்.

அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும் (2தீமோ 4:3,4) என்றும்; சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு (2 தீமோ 4:2) என்றும்; பரிசுத்த பவுல் எழுதியிருக்கிறார்.

திரளானப் போதகர்கள் அநேகர் விரும்புகிறது போல சுயஇச்சைகளுக்கேற்ற கட்டுக்கதைகளையும், ஏன் புராணங்களையுங்கூட பிரசங்கமேடைகளில் தைரியமாக பேசுகிறதைக் கேட்கிறோம். ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? என்ற எரேமியா தீர்க்கனின் கேள்வி தொக்கி நிற்கிறதை உணராதிருக்கிறோம்.

## வெளிப்படுத்தின விசேஷம்

திவ்ய வாசகனாகிய யோவானுக்கு கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட சபைகளுக்கான தரிசனம், வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3-ஆம் அதிகாரங்களில் உள்ளது. இந்நாட்களிலும், விசுவாசத்திற்கு புறம்பான சாதகமில்லாத சூழ்நிலையிலும், உலகத்தோடு இசைந்த இணைந்த பாவவாழ்விலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவுக்கென்று

நற்சாட்சியாக வாழ, இந்த தரிசன வார்த்தைகள் பேருதவியாக இருக்கிறது. இந்த வேதப்பகுதி காலத்தைக் கடந்து, இந்நாட்களின் திருச்சபைகளுக்கு தேவையான ஆலோசனைகளை அளிப்பதாகவும் இருக்கிறது.

இவற்றில் மூன்றாவதாக எழுதப்பட்டிருக்கிற பெர்கமு சபைக்கான கடிதம், இயேசுகிறிஸ்துவில் விசுவாசமுள்ள தேவஜனம் பிசாசின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலும், விசுவாசத்தில் நிலைத்திருந்ததை வெளிப்படுத்துகிறது. மேலும் இது கொள்கை விபரீதங்களாலும் தவறான போதனைகளாலும் வஞ்சிக்கப்பட்டு வழிவிலகிச் செல்லாது காக்கப்பட, எச்சரிப்பாகவும் எழுதப்பட்டுள்ளது.

இந்தக்கடைசி நாட்களில், இரட்சிப்பின் நிச்சயத்தோடு விசுவாசத்தில் நிலைத்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், பெர்கமு சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தோடு, நம்முடைய வாழ்வின் சூழ்நிலைகளையும், ஆவிக்குரிய வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்க்க அழைக்கப்படுகிறோம். தெளிவாக தொகுக்கப்பட்டிருக்கிற ஆலோசனைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டு, தேவனுடைய வார்த்தையாம் இயேசுவையேச் சார்ந்து ஜீவிக்க ஒப்புக்கொடுப்போம். மறைவான மன்னாவால் போஷிக்கப்பட்டு, விடுதலைக்கு அடையாளமாக அவர் தந்தருளும் வெண்மையான குறிக்கல்லையும் புதிய நாமத்தையும் பெற்றுக்கொள்ளுவோம். அல்லேலூயா!

## பெர்கமு பட்டணம்

பெர்கமு ஆசியப்பகுதியில் ரோம சாம்ராஜ்யத்தின் தலைநகர், ரோம அஞ்சல் வழியில் (Postal Route) எபேசு மற்றும் சிமிர்னாவை அடுத்து பெர்கமு, சிமிர்னாவிலிருந்து 80 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. எழுதுவதற்கேற்ற ஒருவகைத் தோலினால் செய்யப்படும் பொருள் உற்பத்திக்கு இது பிரசித்திப்பெற்ற பட்டணம். மருத்துவத்துறையில் புகழ்பெற்றிருந்த பெர்கமுவில் மருத்துவ கல்விக்கான பயிற்சிக்கூடமும், அநேக புஸ்தக சுருள்கள் அடங்கிய மிகப்பெரிய நூலகமும் இருந்தது.

இந்த பட்டணத்திற்கு பின்புறம் இருந்த மலையில் ஒரு சமமான நிலப்பகுதியில் பெரியதொரு பலிபீடம், அந்நிய தெய்வத்திற்காக இருந்தது. பலிபீடத்திலிருந்து எழும்பிய புகையும் நெருப்பும் அந்தப்பகுதியை நிரப்பியது. பார்வைக்கு இந்த பலிபீடத்தின் அமைப்பு பெரிய சிங்காசனம் போன்று மலையில் காணப்பட்டதாலேயும், பெர்கமு சாத்தானுடைய சிங்காசனம் என்று குறிப்பிடப்படுகிறது.

பெர்கமுவில் மருத்துவத்துறையில் சுகமளிக்கும் தெய்வத்திற்கென கோவில் கட்டி வழிபட்டனர். கொம்பை சுற்றியுள்ள சர்ப்பத்தை அங்கு

அடையாளமாக வைத்திருந்தார்கள். இந்நாளிலுங்கூட மருத்துவத்துறையின் அடையாளமாக இது இருக்கிறது. தங்களை ஆளும் மன்னரை வழிபடும் விபரீதமும் பெர்கமுவில் காணப்பட்டது. தேசாதிபதியான இராயனுக்கு (சீசருக்கு) கோவில்கட்டி வழிபட்டனர். வருடத்திற்கொருமுறை குடிமக்கள் அங்கு சென்று வழிபட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

## பெர்கமு சபையின் நியாய விசாரிப்பு

பெர்கமு சபையின் தூதனுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகள் வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரம் 12 முதல் 17 வசனங்களில் உள்ளது. உலக வழக்கின்படி செயல்படாது, இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்ததினிமித்தம், பெர்கமு சபை உபத்திரவங்களுக்குட்பட்டு துன்புறுத்தப்பட்டது. விசுவாசத்தை விட்டு வழுவிச்செல்ல, சத்துருவானவன் உபத்திரவங்களாலும் துன்பங்களினாலும் செய்யக்கூடாததை, தவறான போதனைகள் மூலம் செய்ய முற்பட்டான்.

கள்ளப்போதகர்களின் மூலம் தந்திரமான பொய்யான உபதேசங்களைச் சத்துருவானவன் நுழையச்செய்தான். கிறிஸ்தவ வாழ்வு முறையின் நற்பண்புகளை கடைபிடிப்பதில் உறுதியற்ற நிலை காணப்பட்டது. இதனிமித்தமே பெர்கமு சபை – கிறிஸ்தவ கொள்கைகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற சபை (Doctrinally Compromising Church) என்று அழைக்கப்படுகிறது.

## இருபுறமும் கருக்குள்ள பட்டயம்

பெர்கமு சபைக்கு இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவராக இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:12). ஒரு புறம் தேவனுடைய வார்த்தைக்கும் ஆலோசனைக்கும் எச்சரிப்புக்கும் கீழ்படிந்து மனந்திரும்பி செயல்படும்போது, தேவனுடைய கிருபையினால் வாக்களிக்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுகிறோம். விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம் (எபிரெயர் 4:3). மறுபுறம், எச்சரிப்புக்குச் செவிகொடாது பாவத்திற்குட்பட்டு வாழும்போது (யோவான் 12:48) அழிவுக்கு ஒப்புகொடுக்கப்படுகிறோம். அவர்கள் கேட்ட வசனம், விசுவாசமில்லாமல் கேட்டபடியால் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை (எபிரெயர் 4:2).

ஒருபுறம் தேவனுடைய வார்த்தை கிருபையினால் இரட்சிக்கிறது; மறுபுறம் ஆக்கினைக்குட்படுத்தி அழிவுக்கேதுவாக்குகிறது. கர்த்தருடைய வசனம் ஜீவனும் வல்லமையுமுள்ளதாக வாழ்வளிக்கிறது; மறுபுறம் சத்துருக்களை அழிக்கிறது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் (வெளி. 19:13,15) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

## நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதை அறிவேன்

உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் (வெளி 2:13) என்று கர்த்தர் பெர்கமு சபையின் விசுவாசத்தைக் கண்டு அதைப் பாராட்டினார், எத்திசை நோக்கினாலும் விக்கிரக வழிபாடுகளும், மன்னர் வழிபாடும், பலிபீடங்களும் நெருப்பும் புகையும், பாவமும் பெருகியிருந்தாலும், இயேசுகிறிஸ்துவைப் பற்றின விசுவாசத்தில் பெர்கமு சபை வழுவாது அவருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருந்தது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இயேசுகிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசத்தில் நிலைத்து நிற்கும் நீயும் உன் குடியிருப்பின் எல்லைகளைக்குறித்து, சுற்றுப்புற சூழ்நிலைகளை நினைத்து கலங்கி தவிக்கிறாயா? விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசாயா 28:16) என்று எழுதப்பட்டிருக்கிறது. மனங்கலங்காதே, மிகவும் பாதகமான நிலையிலிருந்த பெர்கமு சபையினர் இயேசுவின் நாமத்தைப் பற்றிக் கொண்டிருந்தனராம். மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார் (அப். 17:26) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

உன் குடியிருப்பின் எல்லையும் காலங்களும் கர்த்தரால் முன் தீர்மானிக்கப்பட்டது, குறிக்கப்பட்டது. இலங்கையில் இதைப்போலொத்த சூழ்நிலையில் ஒரு சிங்களப்போதகர் இருந்தார். அவருடைய சபைக்கூடிவரும் தேவாலயத்திற்கு அருகே ஒரு விக்கிரகத்தோப்பு இருந்தது.

எதிர்ப்புகளினிமித்தம் மனங்கலங்காது, பதறாமல் போதகர் விசுவாசத்துடன் சூழ்நிலை மாற ஜெபித்தார். ஒரு நாள் இரவு கர்த்தருடைய ஆலோசனையின்படி, விக்கிரகத்தோப்பிற்கு முன் சென்று, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அங்கு செயல்பட்ட பொல்லாத ஆவிகளை, போதகர் அதட்டி விரட்டி ஜெபித்தாராம். ஜீவனுள்ள தேவன் ஜெபத்தைக் கேட்டு விசுவாசத்தைக் கண்டு, பலத்த கிரியைகளை நடப்பித்தார். ஆச்சரியப்படும்படியாக, அந்த விக்கிரகத்தோப்பின் பொறுப்பாளர்கள் தாமாகவே அந்த இடத்தைக் காலி செய்து வேறு இடத்திற்கு சென்றனராம். அதற்கு அவர்கள், அந்த இடம் தங்கள் கடவுளுக்கு ஏற்றதல்ல என்பதாக காரணம் சொன்னார்களாம். அதே இடத்தில் அந்த ஊழியர் தற்போது பல ஆயிரம் விசுவாசிகள் கூடி ஆராதிக்கும் மாபெரும் தேவாலயம் கட்டி கர்த்தருக்குச் சாட்சியாக செயல்படுகிறார்.

ஆம் பிரியமானவர்களே, நம்முடைய குடியிருப்பு எந்த வகையான விக்கிரகக் கோட்டையில் இருந்தாலும், கர்த்தரால் முன் தீர்மானிக்கப்பட்ட எல்லைகளும் காலங்களுமாக இருக்கையில், அங்கும் நம்மைப் பாதுகாத்து சாட்சியாக நிறுத்த நம் தேவன் வல்லவராயிருக்கிறார்; போதுமான வராயிருக்கிறார். அல்லேலூயா!

## விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததை அறிவேன்

பெர்கமு சபையைப் பாராட்டி நம்முடைய இரட்சகர் மேலும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப்பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன் (வெளி. 2:13) என்றார்.

உபத்திரவங்களும் துன்பங்களும் நெருக்கங்களும் பெர்கமு சபைக்கு ஏற்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக அந்திப்பா, இரத்தசாட்சியாக மரிக்கிறார், ஆனாலும் அந்தச் சபையினர் விசுவாசத்தை மறுதலியாதிருந்தார்கள்; இயேசுவினால் அறியப்பட்டு நற்சாட்சியும் பெற்றார்கள். பெர்கமுவில் தேசாதிபதியான இராயனுடைய (சீசர்) கோவிலுக்கு குடிமக்கள் வருடத்திற்கொருமுறைச் சென்று தூபங்காட்டி சீசர் தெய்வம் என அறிக்கையிட நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்தச் சூழ்நிலையில் இயேசுவே தெய்வம் என்று அந்திப்பா வெளிப்படையாக அறிக்கையிட்டதினிமித்தம், உலோகத்தால் (வெண்கலம்) செய்யப்பட்ட எருது (Brass Bull) ஒன்றில் அவரை அடைத்து, தீக்கொளுத்தினார்கள் என்பது வரலாறு. இந்தக் கோர கொடிய சம்பவத்திற்குப் பின்னரும் பெர்கமு சபையினர் இயேசுவைப் பற்றிய விசுவாசத்தை

மறுதலியாமலிருந்ததால், பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றனர்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்வின் நெருக்கங்களில், நம்முடைய நிலை என்ன? உபத்திரவங்களும் துன்பங்களும் நம்முடைய எல்லைகளில் வெளிப்படும்போது கர்த்தரையே உறுதியாக பற்றிக்கொள்ள ஒப்புக்கொடுப்போமா? என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத்தேயு 5:11,12) என்று நம்முடைய இரட்சகர் முன்னதாகவே சொல்லிவைத்திருக்கிறார்.

## வஞ்சிக்கப்படாதிருங்கள்

உபத்திரவத்திலும் துன்பங்களிலும் விசுவாசத்தில் நிலைத்திருந்து நற்சாட்சி பெற்ற பெர்கமு சபையில், சிலர் சத்துருவின் வஞ்சகத்திற்குட்பட்டு தேவனுக்கு விரோதமான பாவசெயல்களுக்குட்பட்டதின் நிமித்தம் சபை எச்சரிக்கப்படுகிறதைக் காண்கிறோம்.

முந்தின நாட்களில், கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிந்த சத்துருவானவன், சபையை நெருக்கங்களுக்குட்படுத்தி பயமுறுத்த முயற்சித்தான். அது பலனளிக்காதப்பட்சத்தில், பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பமானது, ஜனங்களை மோசம் போக்கும்படி வஞ்சித்து செயல்பட விளைகின்றது.

பெர்கமு சபையில் நடந்ததுபோல, இந்தக் கடைசி நாட்களிலும் கிறிஸ்தவ பண்புகளை வாழவில் கடைபிடிப்பதில் ஒரு உறுதியற்ற நிலையைக்காண்கிறோம். கற்பனைகளைக் கைக்கொள்வதில் ஒரு நிர்விசாரமான போக்கு, மனப்பான்மை; உலகத்தோடு இசைந்து இணக்கமாக வாழும் ஒரு வஞ்சிக்கப்பட்ட நிலையை எங்கும் காணமுடிகிறது. என்ன வஞ்சகம்? பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு: அதை நான் வெறுக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

# பிலேயாமுடைய போதகம்

பெர்கமு சபையின் நற்பண்புகளை அடையாளங்கண்டு பாராட்டின கர்த்தர், அவர்களிடையே காணப்பட்ட தேவன் அருவருக்கும் காரியங்களையும் தெளிவாக எடுத்துரைத்து எச்சரிக்கிறார். ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு (வெளி.2:14) என்று இயேசுகிறிஸ்து குறைகளை உணர்த்தி எச்சரிக்கிறார்.

பிலேயாமின் போதகம் என்பது தேவஜனத்தை மாம்ச இச்சைக்குட்படுத்தி, ஒழுக்கக்கேடான வாழ்வுக்கும் விக்கிரக வழிபாட்டிற்கும் திசை திருப்பச்செய்யும் தவறான உபதேசங்கள். விசுவாசிகள் தேவனோடுள்ள உறவிலிருந்து வழிவிலகச்செய்யும் தந்திரமான போதகங்களே இவையாகும்.

பாலாக் என்கிற மோவாபிய ராஜா, தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்த பிலேயாமை கூலிக்கு அமர்த்தி இஸ்ரவேலரை மேற்கொள்ள வகைதேடினான். மூன்று முறை முயற்சித்தும் தேவஜனத்தை சபிக்க இயலாதபோது, அவர்களுடைய ஒழுக்கத்தைக் கெடுத்து, தேவனுக்கு விரோதமான பாவங்களுக்குட்படுத்தி, அவர்கள் ஆசீர்வாதத்தை இழந்து சாபத்தைச் சவதரித்துக்கொள்ள ஆலோசனை சொன்னான். இந்த நிகழ்வை மோசே: பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக்காரணமாயிருந்தவர்கள் இவர்கள் தானே என்று குறிப்பிடுகிறதை எண்ணாகமம் 31:16-ல் காண்கிறோம்.

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள். இப்படி இஸ்ரவேலர் பாகால் பேயோரைப் பற்றிக்கொண்டார்கள். அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம்மூண்டது (எண். 25:1,3). இஸ்ரவேலர் மோவாபிய பெண்களோடு கலந்து சோரம் போனபோது, மோவாபின் தேவர்களைப் பணிந்துகொண்டு கர்த்தர் அருவருக்கும் செயல்களில் ஈடுபட்டனர்.

# அழிவுக்கேதுவான கொள்கை விபரீதங்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இந்நாளிலும் தேவன் அருவருக்கும் செயல்களை துணிந்து செய்ய ஊக்குவிக்கும் போதகங்கள் எங்கும் பரவலாக இருப்பதை நீ அறிவாயா? ஒருமுறை பாவங்கள் மன்னிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு இரட்சிப்படைந்தவர்கள், அனுதினமும் பரிசுத்தம் பெற கர்த்தரிடத்தில் காத்திருப்பது அவசியமற்றது என்று எண்ணி செயல்பட்டு, மற்றவர்களுக்கும் போதிக்கிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். அறியாமையினாலே விசுவாசத்தில் பலவீனமானவர்கள் இதை வரஇருக்கும் நாட்களில் செய்யவிருக்கும் பாவங்களுக்கும் ஒரு அனுமதியாக எண்ணி வஞ்சிக்கப்படுகிறதையும் காண்கிறோம். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை; நம்முடைய அக்கிரமங்களே நமக்கும் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது (1 யோவான் 1:8).

பாரம்பரிய சபைகளைப் பழித்துப்பேசும் போதகர் சிலர், தங்களுடைய சாதுரியமான பேச்சினாலே அநேகரை வஞ்சிக்கிறதைக் காண்கிறோம். ஜெபத்திலும் உபவாசத்திலும் காணிக்கை கொடுப்பதிலும் ஒழுங்கும் கிரமுமாக செயல்பட்டு ஆராதனைகளில் தவறாமல் கலந்துக்கொள்ளும் பழக்கமுடைய எளிய விசுவாசிகள், இவற்றால் கலங்கடிக்கப்பட்டிருப்பதையும் அறிவோம். ஜெபமும் உபவாசமும், தெய்வபயமும் பக்தியும், உதாரத்துவமாகக் கொடுப்பதும் குறைவுபட்டு செய்வதறியாது திகைத்து நிற்கும் குடும்பங்களையும் கூட்டங்களையுங்கூட காண்கிறோம்.

அழிவுக்கேதுவான கொள்கை விபரீதங்களும் போதகங்களும் பரவிவரும் இந்நாட்களில் ஜாக்கிரதையாக செயல்படுவோம். ஒழுக்கக்கேடும் பேராசையும் உள்ள கள்ளப்போதகர்கள், விசுவாசத்தில் பலவீனருக்கு தவறாக போதித்து, வஞ்சித்து செயல்படுகிறார்கள். கள்ளப்போதகர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்டநடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும் (2 பேதுரு 2:1,2).

தேவவசனத்தை உங்களுக்குப்போதித்து உங்களை நடத்துகிறவர்களை நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து,

அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள் (எபிரெயர் 13:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. போதகர்களின் சாதுரியமான பேச்சுத் திறமைகளையும் மற்ற பல ஆற்றல்களையும் மாத்திரம் கண்டு மயங்கி அந்த போதகத்தால் வஞ்சிக்கப்படாமல், அவர்களுடைய நடக்கையையும், நடக்கையின் முடிவையும் கண்டுணர்ந்து, பின்னர் அவர்களுடைய விசுவாசத்தையும் போதகத்தையும் பின்பற்றுவோம்.

இதனிமித்தமே பரிசுத்த பவுல் : தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனார்கள் (1 தீமோ. 6:20,21) என்று எச்சரிக்கிறார்.

## நிக்கொலாய் மதஸ்தருடைய போதகம்

நிக்கொலாய் என்னும் ஒரு மதப்பிரிவினர், தேவனுடைய ஊழியர்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்ற எண்ணத்தோடு விக்கிரகவழிபாட்டிலும் ஒழுக்கக் கேடுகளிலும் ஈடுபட்டிருந்தனர். அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன் (வெளி. 2:15) என்றெழுது என யோவானுக்கு கர்த்தர் கட்டளையிட்டார்.

அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் என்றும்; கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் என்றும்; ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றும் (மத்தேயு 24:11,24,4) இயேசு நம்மை எச்சரிக்கிறார்.

பரிசுத்த பவுலும்: ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் (1 தீமோ 4:1) என்று எச்சரிக்கிறார். கவர்ச்சியான மொழிநடையில், அற்புத அடையாளங்களோடு நாம் இருக்கும் அவல நிலையிலும் நம்மைச் சீராட்டி பாராட்டி பெருமிதங்கொள்ளச் செய்யும், மாயமான உபதேசங்களால் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து நமக்கு மாதிரியான இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க அர்ப்பணிப்போம்.

## நீ மனந்திரும்பு

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரனே சகோதரியே, பவுல் பிற்காலம் என்று குறிப்பிடுகிற நம்முடைய தற்காலத்தில், வஞ்சிக்கிற ஆவிகளும் பிசாசுகளின் உபதேசங்களும் உன்னையும் விசுவாசத்தைவிட்டு புறம்பேத்தள்ள முயற்சிக்கிறதை நீ அறிவாயா? தெளிந்த புத்தியோடு மனந்திரும்பி, தீமையை வெறுத்து பாவத்திற்கு விலகி, இயேசுவையே நோக்கிப் பார்த்து கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற நற்காரியங்களைச் செய்ய உன்னை அர்ப்பணிப்பாயா?

நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன் (வெளி. 2:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். பெர்கமு சபையில் சில காரியங்களில் காணப்பட்ட குறைவுகளினிமித்தம், கர்த்தர் சபைக்கு விரோதமாக வருகிறார். சபை மனந்திரும்பாத பட்சத்தில், வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவார். அவர்கள் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு அழிவுக்கு நியமிக்கப்படுவார்கள். இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தின் மறுபுறமான நியாயத்தீர்ப்பு கடந்து வரும்.

கள்ளப்போதகமும் வஞ்சகமான உபதேசமும் சபைகளில் காணப்படும்போது, நாம் அவற்றை பொறுத்துக்கொண்டு, சகித்துக்கொண்டு சாவதனமாக இருக்கலாகாது. இருந்தால், சபைக்கு விரோதமான தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படும்போது நாமும் குறைவுள்ளவர்களாகக் காணப்படுவோம். சபையைப் பரிசுத்தப்படுத்தும்படியாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரவிருக்கிறது. இதனிமித்தமே நம்முடைய போதகர்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும், வழி நடத்துபவர்களுக்காகவும் அனுதினமும் நாம் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## ஜெயங்கொள்ளுகிறவனுக்கு மறைவான மன்னா

கர்த்தருடைய ஆலோசனைகளுக்குக் கீழ்படிந்து, மனந்திரும்பி தேவசித்தத்தைச் செய்கிறவனே ஜெயங்கொள்ளுகிறவன். ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக்கல்லின்மேல் எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் (வெளி. 2:17) என்று கர்த்தர் சொன்னார்.

வனாந்திர பிரயாணத்தில் தேவஜனத்துக்கு உணவாக கர்த்தர் வானத்திலிருந்து அப்பத்தைத் தந்தருளினார். மன்னா என்று பேரிடப்பட்ட அப்பத்தைப் பின்சந்ததியார் பார்க்கும்படிக்கு, ஒரு கலசத்தை எடுத்து அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப்போட்டு கர்த்தர் கட்டளையிட்டபடியே, ஆரோன் சாட்சி சந்நிதியில் வைத்தான் (யாத். 16:32-34). எருசலேம் பட்டணம் கி.மு.586-ல் எதிரிகளால் தாக்கப்பட்டபோது, இது ஒழித்துவைக்கப்பட்டு பின்னர் தேவதூதரால் பரலோகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது யூதரின் நம்பிக்கை. மேசியா வருமட்டும் மறைக்கப்பட்ட மன்னா அங்கேயே இருக்குமாம். எது எவ்வகையில் இருந்தாலும், நாம் அறிந்தபடி மேசியாவாம் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது: ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்; என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் (யோவான் 6:35) என்றார்.

வெண்மையான குறிக்கல் போன்ற விலையுயர்ந்த அருமையான கற்கள், அந்நாட்களில் அடையாளங்களுக்காக உபயோகப்படுத்தப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெறுவர்களை குறிப்பதற்கும், நீதிபதிகள் நீதிவிசாரணையின் முடிவை வெளிப்படுத்தவும் இவ்வகையான கற்களை ஒரு கலசத்திலே போட்டுவைப்பார்களாம். வெண்மையான குறிக்கல்லை விடுதலைக்கு அடையாளமாக வைத்திருந்தனர்.

ஜெயங்கொள்ளுகிறவன், வானத்திலிருந்திறங்கி தன் ஜீவனையே நமக்குக் கொடுத்த இயேசுகிறிஸ்துவின் வார்த்தையால் போஷிக்கப்பட்டு, விடுதலைக்கு அடையாளமாக, வெண்மையான குறிக்கல்லையும் புதிய நாமத்தையும் பெற்றுக்கொள்ளுகிறான்.

## முடிவிலே என்ன செய்வீர்கள்?

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, மாறுபட்ட இந்த வாழ்வின் நிலைகளில் இயேசுகிறிஸ்துவை உறுதியாக பற்றிக்கொண்டு, நம்முடைய விசுவாசத்தை மறுதலியாது, முடிவுபரியந்தம் நிலைத்திருக்க ஒப்புக்கொடுப்போம். இயேசுகிறிஸ்துவைப் பற்றிய கொள்கை விபரீதங்களை இனங்கண்டு, அவற்றைத் தவிர்த்து, உலகத்தைச் சார்ந்த சுகவாழ்வு உபதேசங்களால் வஞ்சிக்கப்படாது, கிறிஸ்துவுக்குள் ஜெயங்கொள்ள நம்மை அர்ப்பணிப்போம். ஆமென்.

# தியத்தீரா சபை

இயேசுவின் கண்கள் அக்கினி ஜுவாலை போலிருந்தது.
அவர் பாதங்கள் பிரகாசமான வெண்கலம் போலிருந்தது.
கண்கள் இருதயத்தை சோதித்து கிரியைகளின்படி பலன் அளிக்கிறது.
நம் கிரியைகளின்படி பலனளிக்க கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார்.
தேவகுமாரனின் பாதங்கள், வருகையின் நாளில் ஒலிவமலையில் நிற்கும்.

நம்மைக் காண்கிற தேவன் நமக்கு உண்டு.
நம்மேல் அவர் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுகிறார்.
அன்பையும் அர்ப்பணிப்பையும் கிரியைகளையும் ஆராய்ந்தறிகிறார்;
நிறைவாக இருப்பின் பாராட்டி, கர்த்தர் வருமளவும்
உள்ளதைப் பற்றிக்கொண்டிருங்கள் என்கிறார்.

செத்த ஈக்கள் பரிமள தைலத்தை நாறிக் கெட்டுபோகப் பண்ணும்.
கனம் பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்,
கர்த்தரின் நன்மதிப்பைப் பெற்ற சபையிலும் மதியீனம் உண்டாம்:
இந்த மதியீனத்தினால் சபை வஞ்சகத்திற்கு இடமளிக்கிறது.
எனவே, வஞ்சகத்திலிருந்து விடுபட்டு மனந்திரும்ப எச்சரிப்பு தரப்பட்டுள்ளது.

சமுதாய நிர்ப்பந்தங்கள் பாவ வாழ்வை நியாயப்படுத்துகிறது.
மத நல்லிணக்கம் என்ற போர்வையில் விக்கிரக ஆராதனை உட்புகுகிறது.
நாகரீக வாழ்வு முறை வஞ்சகத்திற்குட்படுத்தி வாழ்வை சிதைக்கிறது
வேலை ஸ்தல விருந்தும் உபசரிப்பும், களியாட்டுகளுக்கும் இடமளிக்கிறது.
நவீன செல்போன் இன்டர்நெட் மூலமும் பாவம் விரைவில் பரவுகிறது.

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
நான்காவதாக இடம் பெறுவது
தியத்தீரா சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
தியத்தீரா சபை ஒழுக்க நெறிகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற சபை.

கள்ள உபதேசங்களை அடையாளங்கண்டு விலகி நிற்கவும்,
மாம்சீக பாவங்களுக்கும் விக்கிரக ஆராதனைக்கும் தப்புவிக்கவும் நம்மேல்
கர்த்தர் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுகிறார் . அந்தக் கண்கள் :

**அக்கினி ஜுவாலை போன்ற கண்கள்**

*எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே*
*திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.*
*அதை அறியத்தக்கவன் யார்?*
*கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும்,*
*அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும்*
*தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும்*
*உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.*

*(எரேமியா 17:9,10)*

# 5. அக்கினி ஜுவாலை போன்ற கண்கள்

கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளான அப்போஸ்தலனாகிய யோவான், மனுஷகுமாரனுக்கு ஒப்பான மகிமையுள்ள தேவனைக் காண்கிறார். தான் கண்ட தரிசனத்தை விவரிக்கும்போது: அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது... (வெளி. 1:14,15) என்று எழுதிவைத்திருக்கிறார்.

## நம்மைக் காண்கிற தேவன்

ஆபிராமுடைய மனைவியாகிய சாராய்க்கு, ஆகார் என்னும் பேர்கொண்ட ஒரு அடிமைப்பெண் இருந்தாள். சாராய் தனக்கு பிள்ளையில்லாதிருந்ததினால் ஆகாரைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள். ஆகார் கர்ப்பவதியானபோது, தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். அப்பொழுது சாராய் அவளைக் கடினமாக நடத்தினபடியால், ஆகார் அவளைவிட்டு ஓடிப்போனாள். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை வனாந்தரத்திலே கண்டு, அவளைத் தன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், சாராய் கையின்கீழே அடங்கியிரு என்றார். மேலும், அவள் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன் என்றும் வாக்களித்தார். அப்பொழுது ஆகார் தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள் (ஆதி.16:13).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான தேவஜனமே, நம்முடைய வாழ்வின் எல்லா நிலைகளிலும் நம்மைக் காண்கிற தேவன் நமக்கு உண்டு. இன்னும் சிறப்பாக துன்பம் சஞ்சலம் தவிப்பு வேதனையோடு கைவிடப்பட்ட நிலைகளிலும் நம்முடைய தேவன் நம்மைக் கண்டு, தாமே வந்து நம்மை இரட்சிக்கிறவராக, நமக்கு உதவிச்செய்கிறவராக இருக்கிறார். நம்மைக் காண்கிற தேவன், இப்படியாக தம்முடைய அன்பை வெளிப்படுத்தி தேவனுடைய பிள்ளைகளாக நம்மை ஏற்படுத்தி, இரட்சிப்பை நமக்கு அருளினபடியால் அவருக்கு நன்றி செலுத்துவோம். அல்லேலூயா!

## காண்கிற தேவன் வழி நடத்துகிறார்

இரட்சிக்கப்பட்ட தேவஜனம், முடிவுபரியந்தம் விசுவாசத்திலே நிலைத்திருந்து, நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள கர்த்தர் நமக்கு

போதித்து நாம் நடக்க வேண்டிய வழியை நமக்குக் காட்டுகிறார். நம்மேல் தம்முடைய கண்ணை வைத்து, நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர் (ஏசாயா 28:29). கர்த்தருடைய ஆலோசனையும் வழிநடத்துதலும் பல வழிகளில் நமக்கு கிடைக்கிறது. வேத வசனங்கள் மூலமாகவும், சொப்பனங்கள் வெளிப்பாடுகளினாலும், தேவ மனிதர்கள் வார்த்தையினாலும், சில வேளை பிரத்தியட்சமாக கர்த்தராலும் நாம் வழிநடத்தப்படுகிறோம்.

கனநித்திரை மனுஷர்மேல் இறங்கி அவர்கள் படுக்கையின் மேல் அயர்ந்திருக்கையில், தேவன் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷனுடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்துகிறார். அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரை போட்டு, மனுஷன் தன்னுடைய செய்கையை விட்டு நீங்கவும், மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார். தேவன் மனுஷடைய ஆத்துமாவைப் படுகுழிக்கு விலக்குகிறதற்கும், அவனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப்பிக்கிறதற்கும், அவர் இவைகளையெல்லாம் அவனிடத்தில் பலமுறை நடப்பிக்கிறார் (யோபு 33:15-17, 29,30). ஆம், பிரியமானவர்களே, கர்த்தர் நம்மைக்கண்டு ஆராய்ந்தறிந்து வழி நடத்துகிறார்.

## இருதயத்தை சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதி

தேவனுடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபிரெயர் 4:13) என்று எழுதப்பட்டிருக்கிறது. இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமான நம்முடைய தேவனுடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. இவ்விதமாக நம்மை சோதித்தறிகிற கர்த்தர், நம்முடைய வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக்கொடுக்கிறார். கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன் (எரேமியா 17:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நன்மை செய்தால் நம்முடைய கிரியைகளைப் பாராட்டி கர்த்தர் நமக்கு மேன்மை அருளுகிறார். தீமையை நடப்பிக்கும் போது, மனுஷனுடைய ஆத்துமாவை படுகுழிக்கு விலக்குகிறதற்காக மனுஷருக்கு

கர்த்தர் அவனுடைய குறைகளை உணர்த்தி எச்சரிக்கிறார். இருதயத்தை சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதி: இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது (வெளி. 22:12) என்கிறார்.

இந்தக் கிருபையின் நாட்களில் சபையின் காலத்தில், நம்மை ஆராய்ந்தறிந்து வழி நடத்தும்படியாக, கிரியைகளுக்கேற்ற பலனருளும்படியாக, அக்கினை ஜுவாலை போன்ற கண்களுடையவராக நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்துகிறார்.

## அக்கினி ஜுவாலை போன்ற கண்கள்

தியத்தீரா சபையின் தூதனுக்கு, தலைமைப்பொறுப்பிலிருந்த ஊழியருக்கு எழுதப்பட்ட கடிதத்திலும், அக்கினி ஜுவாலை போன்ற கண்களும்; பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் என்று நம்முடைய இரட்சகர் தம்மை வெளிப்படுத்துகிறதைக் காண்கிறோம். இதைத் தொடர்ந்து, தியத்தீரா சபையின் குறைகளை வெளிப்படுத்தியும் மனந்திரும்பாத பட்சத்தில், வரவிருக்கிற நியாயத்தீர்ப்பைக் கூறி அறிவிக்கும்போதும் கர்த்தர்: அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துக்கொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன் (வெளி. 2:18,23) என்று எச்சரிக்கிறார்.

அக்கினி ஜுவாலை போன்ற கண்களுடைய தேவகுமாரன், நம்முடைய குறைகளையும் இந்நாளில் வெளிப்படுத்தி மனந்திரும்ப அழைக்கிறார். மனந்திரும்பாத பட்சத்தில் நீதியுள்ள நியாயாதிபதியாக நம்முடைய கிரியைகளின்படியே பலனளிக்க சீக்கிரமாக வரவிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இந்தக் கடைசி நாட்களில் உன்னுடைய ஆவிக்குரிய நிலையை தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து, வஞ்சகங்களிலிருந்தும் அழிவிலிருந்தும் தப்பித்துக்கொள்ள உன்னை ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கிற உனக்கு கிரியைகளுக்கேற்ற நற்பலனையருளி கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

## தியத்தீரா சபையின் நியாய விசாரிப்பு

திவ்ய வாசகனாகிய யோவான், ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு கர்த்தரிடத்திலிருந்து பெற்ற தரிசனத்தில், தியத்தீரா சபைக்கான கடிதம்

நான்காவதாக இடம் பெற்றுள்ளது. இந்தக் கடிதம் மற்ற சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்கள்போன்றே, அந்த சபையின் நிறைவு மற்றும் குறைவுகளை ஆராய்ந்தறிந்து, கர்த்தருடைய பாராட்டு ஆலோசனை மற்றும் எச்சரிப்புகளை தொகுத்து அளிக்கிறது. இது ஒரு இடைக்கால ஆவிக்குரிய தேர்ச்சி அறிக்கையைப் போன்று (Interim Spiritual Progress Report) காட்சியளிக்கிறது.

பெர்கமு சபையைப் போன்றே தியத்தீரா சபையும் தவறான கள்ளப் போதகங்களாலும், பொய்யான உபதேசங்களாலும் பாதிக்கப்பட்டிருந்தது. தியத்தீரா சபை, ஒழுக்கநெறிகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற சபை (Morally Compromising Church) என்று அநேகரால் விமர்சிக்கப்படுகிறது. தியத்தீரா சபை பாவத்தை, கள்ள போதகத்தை சகித்துக்கொண்ட சபை. இதனிமித்தம், ஒழுக்கக்கேட்டிற்கும் விக்கிரக வழிபாட்டிற்கும் ஊழியர்களும் சபையினரும் வழித்தப்பிச் சென்றனர். மேலும், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு இந்தக்கடிதத்தை தியானிக்கும்போது, இதில் பிரதானமாக சபையின் தலைமைத்துவம் மற்றும் பொறுப்பான ஊழியர்களின் அஜாக்கிரதையினால், கவனக்குறைவினால், ஊழியர்கள் வஞ்சிக்கப்பட்டிருப்பதை கர்த்தர் வெளிப்படுத்துகிறதை உணரமுடிகிறது.

## தியத்தீரா பட்டணம்

தியத்தீரா ஒரு சிறிய பட்டணம். இது முன்னர் ஆசியப்பகுதியில் ரோம சாம்ராஜ்யத்தின் தலைநகரான பெர்கமுவை சேர்ந்திருந்தது. சபைகளுக்காக எழுதப்பட்ட ஏழு கடிதங்களில் பெரிய கடிதம் சிறிய பட்டணமான தியத்தீராவுக்கே எழுதப்பட்டிருக்கிறது. அன்றைய நாட்களில், அரை வட்டம் (Semi Circle) போன்று காட்சியளிக்கும் ரோம அஞ்சல் வழியில் (Postal Route) எபேசு சிமிர்னா பெர்கமுவை அடுத்து, பெர்கமுவிலிருந்து தென் கிழக்கே 60 கிலோமீட்டர் தூரத்தில் தியத்தீரா இருந்தது.

வணிக ஸ்தலமான தியத்தீராவில், தொழில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனுக்காக அநேக சங்கங்கள் (Unions) இருந்தனவாம். இவற்றில் சபையினரும் உறுப்பினர்களாக இருந்தனர். இவ்வகையான அமைப்புகளில், ஆண்டு விழா போன்ற பொதுவான நிகழ்வுகளும் மற்ற கொண்டாட்டங்களும் நடைபெறுவதை நாம் அறிவோம். பல வேளைகளில் இந்த கொண்டாட்டங்கள், கேளிக்கை களியாட்டம் கேலி கூத்து என்று சிதைக்கப்படுகிறதைக் காண்கிறோம். சில வேளைகளில், மேலாளரையும் உடன் ஊழியரையும் திருப்தி செய்யும்படியாக, மறைவான ஒழுக்கக்கேடுகளும், விக்கிரகத்தைச் சார்ந்த அருவருப்புகளுங்கூட நுழைந்து விடுகிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இவ்வகையான முறைகேடுகளையும் அத்துமீறல்களையும், சமுதாய நிர்ப்பந்தங்கள் (Social Compulsions) என்றும், வேலை ஸ்தல பாதகங்கள் (Professional Hazards) என்றும் சொல்லி நம்மையே சமாதானப்படுத்திக் கொள்ளாமல், கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைக்குச் செவிகொடுத்து இன்றே மனந்திரும்ப அழைக்கப்படுகிறோம்.

## இனி காலம் செல்லாது

தியத்தீரா சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட கடிதம் வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 2-ஆம் அதிகாரம் 18 முதல் 29 வசனங்களில் உள்ளது. அக்கினி ஜுவாலை போன்ற கண்களும் பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் என்று நம் இரட்சகர் தம்மை இங்கு வெளிப்படுத்துகிறார். அக்கினி ஜுவாலை போன்ற கண்கள், நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் சபையின் ஊழியர் மற்றும் விசுவாசிகளின் உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிந்து (எரேமியா 11:20) ஒவ்வொருவனுக்கும் கிரியைகளின்படியே பலனளிக்கும் (வெளி 2:23) தன்மையை வெளிப்படுத்துகிறது.

பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுள்ள தேவகுமாரன் என்பது சீக்கிரமாய் மறுபடியும் வரவிருக்கிற இயேசு கிறிஸ்துவின் வருகையை நினைவூட்டுகிறது. தரையில் நடப்பதுபோல் கடலின்மேல் நடந்த இயேசுவின் பாதங்கள் படகில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. சீஷர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி இயேசுவைப் பணிந்துக்கொண்டார்கள் (மத்தேயு 14:33) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது. .. அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவ மலையின் மேல் நிற்கும்..(சகரியா 14: 1,4).

ஆம் பிரியமானவர்களே, இனி காலம் செல்லாது. வெண்கலம் போன்ற தேவகுமாரனுடைய பாதங்கள், கர்த்தர் சீக்கிரமாய் வரவிருக்கிறதை வெளிப்படுத்துகிறது. அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக நம்முடைய கிரியைகளுக்கேற்ற பலனை அருளும்படி சீக்கிரமாய் வருகிறார். ஆதலால் நாமும் ஆயத்தமாயிருப்போம். மாரநாதா!

## உன் கிரியைகள் அதிகமாயிருக்கிறது

அக்கினி ஜுவாலை போன்ற தேவகுமாரனின் கண்களால் ஆராய்ந்தறியப்பட்டும், மிகச்சிறந்த பாராட்டுகளை தியத்தீரா சபை

பெற்றிருந்தது. உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் (வெளி. 2:19) என்று கர்த்தர் தியத்தீரா சபையைப் பாராட்டினார்.

கர்த்தரால் பாராட்டைப் பெற்ற தியத்தீரா சபையின் நற்பண்புகள், பவுல் அப்போஸ்தலனின் ஊழியப் பிரயாணத்தில் சந்தித்த தியத்தீரா ஊராளான லீதியாள் வாழ்வில் நற்சாட்சியாக விளங்குகிறதைக் காணலாம்.

ஓய்வுநாளில் பவுலும் அவனோடிருந்தவர்களும், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தார்கள். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் அவர்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று அவர்களை வருந்திக் கேட்டுக் கொண்டாள் (அப்போஸ்தலர் 16:13-15).

லீதியாளின் வாழ்வில் விசுவாசமும் அன்பும் அன்பின் நற்கிரியைகளும் காணப்பட்டன. தான்மட்டுமல்லாமல் வீட்டாரோடு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதின் நிமித்தம் ஊழிய வாஞ்சையையும், அப்போஸ்தலரையும் வருந்தி தன் வீட்டிற்கு அழைத்ததில் பொறுமையையும், வசனத்தை ஏற்று ஞானஸ்நானம் பெற்றபின்பு செய்த கிரியைகள் அதிகமாகயிருக்கிறதையும் காண்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய விசுவாசமும் வாழ்வும் சாட்சியும் கிரியைகளும், அக்கினி ஜுவாலை போன்ற கண்களால் தேவகுமாரன் கண்டு பாராட்டும்படியாக உள்ளதா? கர்த்தரால் பாராட்டப்படும்படியாக, கனிநிறைந்த வாழ்வு வாழ உன்னை மறுபடியும் கர்த்தருக்கு அர்ப்பணிப்பாயா? அர்ப்பணிக்கிற உன்னை, கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

## உன் பேரில் எனக்குக் குறை உண்டு

அக்கினி ஜுவாலை போன்ற கண்களுடையவரான நம் இரட்சகர், தியத்தீரா சபையின் நற்பண்புகளை பாராட்டினதோடு, சபையின்

குறைவையும் அடையாளங்கண்டு எச்சரிக்கிறார். தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்தீரியானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும், அவர்களுக்குப் போதித்து அவர்களை வஞ்சிக்கும்படியாக நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய் (வெளி 2:20) என்று சொல்லுவதாக எழுதப்பட்டிருக்கிறது. சபையின் தலைமைத்துவம் தவறிவிழ இடங்கொடுக்கிறது; ஊழியர் கூட்டம் வஞ்சிக்கப்படுகிறது; சபையின் விசுவாசிகள் சிதறடிக்கப்படுகின்றனர்.

## வஞ்சிக்கும்படி இடங்கொடுத்தது குறை

தியத்தீரா சபையின் தூதன், அதாவது சபையின் தலைமை ஊழியக்காரன், சபையில் கர்த்தரின் ஊழியக்காரர் வஞ்சிக்கப்படும்படியாக தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லுகிற யேசபேலுக்கு இடங்கொடுத்தபடியால், கர்த்தரால் குற்றப்படுத்தப்பட்டு குறைவோடு காணப்படுகிறார்.

உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்து கொள்; உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு (நீதி 27:23) என்றும், மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் (மத்தேயு 26:31) என்றும் எழுதியிருக்கிறபடி, சபையின் தலைமை பொறுப்பிலும், ஊழியர் குழுவிலும் உள்ளவர்கள் கவனமாக ஜாக்கிரதையுடன் செயல்பட எச்சரிக்கப்படுகிறார்கள். இங்கு மணவாளனாம் இயேசுகிறிஸ்து, தனக்கு பரிசுத்தமுள்ள மணவாட்டியாக ஆயத்தப்படுத்தப்பட்டுவரும் சபை எவ்விதமாக கண்காணிக்கப்படவேண்டும், பராமரிக்கப்படவேண்டும் என சபையின் தூதனுக்கு அறிவுறுத்துகிறார்.

சிறப்பான பண்புகளையும் ஊழியரையும் உடைய சபையிலும், கிறிஸ்துவுக்குள் ஆவிகளைப் பகுத்தறிந்து, தங்களை கர்த்தரின் ஊழியர் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களை ஆராய்ந்தறியாது, அவர்களின் வெளித்தோற்றத்தைப் பார்த்து தவறாய் சிலவேளை நிதானிக்கிறார்கள். அப்படிப்பட்ட கள்ளப்போதகர்களுக்கு சபையில் வாய்ப்பளிப்பதின் மூலம் தலைமைத்துவமும், ஊழியர்களும் சபையும் பாதிக்கப்படுகின்றன.. செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும் (பிரசங்கி 10:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. பரிமளதைலம் போன்ற சபையை, கள்ளப்போதனையால் வஞ்சிக்கப்பட ஊழியர்கள் குறைகளுக்குட்படுத்துகிறார்கள், நாறிபோகப்

பண்ணுகிறார்கள்.

## ஊழியக்காரர் தவறான போதகத்தால் வஞ்சிக்கப்படுகிறார்கள்

தியத்தீராவில் தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லுகிற யேசபேல் என்ற பெண்ணைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. முந்நாளின் இஸ்ரவேலின் ராஜாவான ஆகாபின் மனைவி யேசபேலைப் போன்ற குணங்கள் இருந்ததினால், இந்தப் பெண் யேசபேல் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக வேதப்பண்டிதர்கள் கருதுகிறார்கள். ஆகாபின் மனைவி யேசபேல் விக்கிரக வழிபாட்டில் வைராக்கியமுள்ளவளாக இருந்தாள். இதனிமித்தம் இஸ்ரவேல் தேசம் ஒழுக்கக்கேடான வாழ்விற்கும் விக்கிரகவழிபாட்டிற்கும் வழுவிச் சென்றது. தியத்தீரா சபையில் யேசபேல் தேவனுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் போதித்து வஞ்சித்தாள்.

இந்நாளிலும் தேவனுடைய ஊழியர்களிடையே மாம்சீக இச்சைகளுக்கடுத்த ஒழுக்கக்கேடுகளும், விக்கிரக வழிபாட்டிற்கடுத்த செயல்களும், நாகரீக வாழ்வு என்றும் மத நல்லிணக்கம் என்றும் பரவலாக பல நிலைகளில், சபையிலும் சமுதாயத்திலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நாகரீக வாழ்வுமுறை உடை அலங்காரம் போன்றவை எந்நிலையிலும் ஒழுக்கக்கேட்டில் முடிவுறாதபடி கிறிஸ்துவுக்குள் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். பிறமதத்தினருடனும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பது, அவர்களுடைய சடங்காசாரங்களை பின்பற்றி அவர்களை முகம்கோணாது மகிழ்விப்பது அல்ல என்பதை உணரவேண்டும்.

விக்கிரகங்களுக்கு படைத்தவைகள் என்பதில் பொருளாசையும் பண ஆசையும் உலகத்தின் இச்சையும் உள்ளடங்கியே இருக்கிறது. எந்த ரூபத்தில் வந்தாலும், அதிநவீன இன்டர்நெட் மூலமாகவோ செல்போன் மூலமாகவோ வந்தாலும், மாம்சீக இச்சையைத் தூண்டும் எல்லா செயல்களும் பாவமே.

## விசுவாசிகள் சிதறடிக்கப்படுகிறார்கள்

யேசபேல் போன்ற கள்ளத்தீர்க்கதரிசிகளின் போதகத்தால் வஞ்சிக்கப்பட்ட ஊழியக்காரரின் நடக்கையினால் சபையின் விசுவாசிகள் சிதறடிக்கப்படுகிறார்கள். இவற்றில் சிக்குண்டவர்கள் மட்டுமல்ல, இவற்றை அறிந்திருந்தும் காணாதவர்போல சகித்துக் கொண்டிருக்கிற சபையும், கர்த்தரால் எச்சரிக்கப்படுகிறது.

## கிரியைகளின்படியே பலன்

அறியாமையினாலே இவ்வகையான வேசித்தனம் மற்றும் விக்கிரகத்தின் கட்டுகளுக்குட்பட்டோர், மனந்திரும்பும்படியாக கர்த்தர் தவணைக் கொடுத்திருக்கிறார். மனந்திரும்ப விருப்பமில்லாத யேசபேலைப் போன்றோர், கட்டில் கிடையாக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். அவளுடைய உபதேசத்திற்கு செவிகொடுத்து வஞ்சிக்கப்பட்டவர்கள் மனந்திரும்பாவிட்டால், அவர்களை மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி, கொல்லவே கொல்லுவேன் என்று கர்த்தர் எச்சரிக்கிறார், அன்றியும் ஒவ்வொருவனுக்கும் அவர்கள் கிரியைகளின்படியே கர்த்தர் பலனளிப்பார்.

தியத்தீராவிலே யேசபேலின் போதகத்தைப் பற்றிக் கொள்ளாமலும், சாத்தானின் ஆழங்களை அறிந்து கொள்ளாமலுமிருக்கிற மற்றவர்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன் என்று கர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

பரிசுத்த பவுல் தேவனுடைய ஆழங்கள் (1 கொரி. 2:10) என்று குறிப்பிடுகிறது போல, சாத்தானின் ஆழங்கள் (வெளி 2: 24) என்று அவனைச் சார்ந்தவர்கள் சொல்லிக்கொண்டார்கள். கர்த்தத்துவத்திற்கடுத்த காரியங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் நேர் எதிராக சாத்தானின் கிரியைகள் காணப்படுகிறது. சாத்தானின் ஆழங்கள் என்பது கர்த்தர் அருவருக்கும், கர்த்தருடைய தன்மைக்கு உகந்ததல்லாத அசுத்தத்தின் உச்சக்கட்ட செயல்களாகும்.

## உங்களுக்குள்ளதை பற்றிக்கொண்டிருங்கள்

தியத்தீரா சபையின்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன் என்றும், கர்த்தரால் ஆராயப்பட்டு பாராட்டைப்பெற்ற நற்பண்புகளை கர்த்தர் வருமளவும் பற்றிக்கொண்டிருக்கவும், தியத்தீரா சபைக்குக் கர்த்தர் ஆலோசனையாகச் சொன்னார்.

கர்த்தருடைய ஆலோசனையை ஏற்று ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் அவருடைய கிரியைகளை கைக்கொள்ளுகிறவனுக்கு ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுப்பேன் என்றும்; விடிவெள்ளி நட்சத்திரத்தையும் கொடுப்பேன் என்றும் கர்த்தர் வாக்களித்திருக்கிறார். கள்ளப்போதகங்களுக்கு இடங்கொடாமல், ஜாக்கிரதையாக கர்த்தரையேப் பற்றிக்கொண்டு நற்கிரியைகளை நடப்பிக்கிறவர்கள், பிசாசின் கிரியைகளை அழித்து வெற்றிச்சிறந்த இயேசுகிறிஸ்துவின் ஆளுகையில்

பங்கடைவார்கள்; விடிவெள்ளி நட்சத்திரத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

## ஜெயங்கொள்ளுகிறவனுக்கு விடிவெள்ளி நட்சத்திரம்

இயேசுகிறிஸ்துவே பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் (வெளி 22:16). பொழுது விடியும் போது, விடிவெள்ளி நட்சத்திரம் தோன்றி புதிய நாளை அறிவிப்பதுபோல, பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமான இயேசுகிறிஸ்து, நம்முடைய வாழ்விலும் தோன்றி, நித்திய புதுவாழ்வின் மகிமையான ஆரம்பத்தை வெளிப்படுத்துவார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய விசுவாச வாழ்வையும் அன்பையும் கிரியைகளையும், தியத்தீரா சபையின் பண்புகளோடு ஒப்பிட்டு பார்க்க அர்ப்பணித்திருக்கிற உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. உன்னுடைய வாழ்விலும் சபையிலும் ஊழியத்திலும், கர்த்தருடைய ஆவியானவரின் ஒத்தாசையோடு கள்ள உபதேசங்களை அடையாளங்கண்டு அவற்றிற்கு விலகி உன்னைக் காத்துக்கொள்ளவும்; அப்பேர்பட்ட போதகங்கள் சபையையும் ஊழியர்களையும் வஞ்சியாதபடிக்கு அவர்களுக்காக விழித்திருந்து ஜெபிக்கவும் நீ அழைப்பைப் பெற்றிருக்கிறாய்.

ஜெயங்கொள்ளுகிற நீ, மரணத்தை ஜெயித்து உயிர்த்து எழுந்த இயேசுவோடு ஆளுகைச் செய்வாய்! பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாம் இயேசுகிறிஸ்து, இன்றே உன் வாழ்விலும் தோன்றி, உன்னுடைய நித்திய புதுவாழ்வின் மகிமையான ஆரம்பத்தையும் கூறி அறிவிப்பார். அல்லேலூயா! ஆமென்.

# சர்தை சபை

ஆவிக்குரிய வாழ்வில் செத்தநிலையில் உள்ள சபைகளிலும், வஸ்திரம் அசுசிப்படாத சிலர் உண்டு - அவர்கள் வெண்வஸ்திரம் பெறுவர்; உயிருள்ளவனென்று பெயர் கொண்ட ஆவியில் செத்தவர் அழிவிற்குட்படுவர்; சாகிறதற்கு ஏதுவான அநேகர் - மனந்திரும்ப ஆலோசனைப் பெறுவர்.

பரிசுத்த ஆவியானவரின் முழுமையான செயல்பாடுகள் சபைகளில், சபைத்தூதரின் பங்கேற்போடு நடந்தேறுகிறது. ஆவியானவர், ஆவிக்குரிய வாழ்வில் சாகிறதற்கு ஏதுவானவர்களை தேற்றுகிறார்.
அவர்கள் இரட்சிக்கப்பட்ட வகையை நினைப்பூட்டி,
மனந்திரும்புகிறதற்கு ஏதுவாக பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார்.

கர்த்தருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு மனந்திரும்புகிற ஜெயங்கொள்ளுகிறவனுக்கு, வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்.
ஜீவபுஸ்தகத்தில் அவனுடைய நாமத்தைக் கிறுக்கிப் போடாமல்,
பிதா முன்பாக இயேசு அவன் நாமத்தை அறிக்கையிடுவார்.

வெண்வஸ்திரம் இரட்சிப்பின் வஸ்திரம்;
மனமகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகிறது.
ஜீவ புஸ்தகம் கர்த்தருடைய புஸ்தகம்;
கர்த்தரால் மீட்கப்பட்டவரின் பெயர்கள் இதில் எழுதப்பட்டிருக்கும்.
ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டவர்கள் நித்திய ஜீவனடைவார்கள்.
பேர் எழுதப்படாதவன் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான்.

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
ஐந்தாவதாக இடம் பெறுவது
சர்தை சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
சர்தை ஆவிக்குரிய நிலையில் செத்தசபை என குறிப்பிடப்படுகிறது.

பரிசுத்த ஆவியானவரின் முழுமையான தன்மைகள்,
சபையின் தூதருடைய பங்களிப்போடு சபையில் வெளிப்படும் போது
ஆலோசனைக்கேட்டு மனந்திரும்பி ஜெயங்கொள்ளுகிறவனுக்கு,
வெண்வஸ்திரமும் ஜீவ புஸ்தகத்தில் பெயரும் வாக்கருளப்படுகிறது.

**ஜெயங்கொள்ளுகிறவனுக்கு வெண் வஸ்திரம் !**

*இருக்கிறவரும் இருந்தவரும்*
*வருகிறவருமானவராலும்;*
*அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற*
*ஏழு ஆவிகளாலும் ; உண்மையுள்ள சாட்சியும்,*
*மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும்,*
*பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய*
*இயேசுகிறிஸ்துவினாலும்,*
*உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்*
*உண்டாவதாக ஆமென்.*

*(வெளி 1:4,5)*

# 6. ஜெயங்கொள்ளுகிறவனுக்கு வெண்வஸ்திரம்!

வேதாகமத்தில் வெண்வஸ்திரம் என்பது ஆவிக்குரிய வாழ்வின் பிரித்தெடுக்கப்பட்ட நிலையையும், பரிசுத்தத்தையும் நீதியையும் வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9). வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிறவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் (வெளி 7:14) என்றும்; சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே (வெளி 19:8) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

வெண்வஸ்திரம் இரட்சிப்பின் வஸ்திரம்; இது மனமகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவதாகவும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக (பிரசங்கி 9:7,8) என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் (ஏசாயா 61 : 10) என்று தன் மன மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் தீர்க்கதரிசி வெளிப்படுத்துகிறார்.

அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் பல இடங்களில் வெண்வஸ்திரம் பற்றி குறிப்பிடுகிறதை வேதாகமத்தில் காண்கிறோம். தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ, இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, சிங்காசனங்களில் உட்கார்ந்திருக்கக் கண்டார் (வெளி 4:4). தேவ வசனத்தின் நிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியின் நிமித்தமும் கொல்லப்பட்ட ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது (வெளி 6:9,11) என்றும்; பரலோகத்தில் உள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி, தேவனுடைய வார்த்தையானவருக்குப் பின் சென்றார்கள் (வெளி 19 : 14) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

மேலும், சர்தை சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில் யோவான் : தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு ;

அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடே கூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும் ; ... (வெளி 3:4,5) என்று கர்த்தரிடமிருந்து பெற்ற வார்த்தைகளை எழுதியிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்ட நீங்களும் நானும், முடிவு பரியந்தம் பரிசுத்தத்திலும் விசுவாசத்திலும் நிலைத்திருந்து, இரட்சிக்கப்பட அழைப்பைப் பெற்றிருக்கிறோம். அழைப்பை ஏற்று கடைசி மட்டும் நிலைத்திருந்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். மாறாக, பாவத்திலும் உலகத்தின் மாயையிலும் இச்சைகளிலும் சிக்குண்டு, உணர்வற்ற மரித்த நிலைக்கு சென்று கொண்டிருப்போமேயானால், விழித்தெழுந்து, வார்த்தைக்குக் கீழ்படிந்து மனந்திரும்ப எச்சரிக்கப்படுகிறோம். இவ்வகையான தருணங்களில், நம்முடைய ஆவிக்குரிய நிலைகளை தெளிவாக ஆராய்ந்து அறிந்து செயல்பட, அப்போஸ்தலனாகிய யோவானுக்கு கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட சர்தை சபைக்கான தரிசனம், செய்தி நமக்கு பேருதவியாக அமைந்துள்ளது.

## சர்தை சபையின் நியாய விசாரிப்பு

திவ்ய வாசகனாகிய யோவான், ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு கர்த்தர் இடத்தில் இருந்து பெற்ற தரிசனத்தில் சர்தை சபைக்கு எழுதப்பட்ட கடிதம், ஐந்தாவதாக இடம் பெற்றுள்ளது. சர்தை சபைக்கான செய்தி மற்ற சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களிலிருந்து சற்று மாறுபட்டு காணப்படுகிறது. சர்தை சபையைக் குறித்து நிறைவாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை ; வெளிப்படையான பாராட்டுகளும் காணவில்லை. இந்தக் கடிதம் சர்தை சபையின் ஆவிக்குரிய நிலையை ஆராய்ந்தறிந்து, கர்த்தருடைய ஆலோசனைகளை எச்சரிப்புகளுடன் தொகுத்து அளிக்கிறது. இது ஒரு இடைக்கால ஆவிக்குரிய தேர்ச்சி அறிக்கையைப் போன்று (Interim Spiritual Progress Report) காட்சியளிக்கிறது.

சர்தை சபை உலகப் பிரகாரமாக உயிருள்ள சபை என்று பெயர் கொண்டிருந்தாலும், ஆவிக்குரிய நிலையில் செத்த சபை (Dead Church) என்பதாக குறிப்பிடப்படுகிறது. சர்தை சபையினர் ஆவிக்குரிய நிலையில் மீட்கப்படாமல், பாவத்திலும் அக்கிரமத்திலும் செத்த நிலையில், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு மற்றவர்களுக்கு தங்களை உயிருள்ள சபையாக காண்பித்துக் கொண்டிருந்தனர்.

சர்தை சபை கிரியைகளினாலும் வெளியரங்கமான செயல்பாடுகளினாலும் ஒரு உயிருள்ள சபையாக மனிதருக்கு முன்பாக காணப்பட்டது. ஆனாலும் தேவனுக்கு முன்பாக அது செத்த சபையாகவே அறியப்பட்டிருந்தது. வெளிப்புறத் தோற்றங்களை ஆவிக்குரிய வாழ்வின் சரியான அறிகுறிகளாக எல்லா நேரங்களிலும் எடுத்துக் கொள்ள முடியாது. சர்தை சபையின் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவைகளாக காணப்படவில்லை.

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரனே சகோதரியே, உன்னுடைய வெளிப்புறத் தோற்றம், உண்மையான உன் ஆவிக்குரிய நிலையை வெளிப்படுத்துகிறதா? உன்னுடைய ஆடையும் அலங்காரமும், பாடலும் ஆராதனையும், காணிக்கையும் பங்களிப்பும், மனிதருக்கு முன்பாக உன்னை உயிருள்ளவராக உயர்த்திக் காட்டலாம். உன் கிரியைகளை ஆராய்ந்து அறிந்திருக்கிற தேவனுக்கு முன்பாக, உன்னுடைய தோற்றமும் கிரியைகளும் நிறைவுள்ளவைகளாக காணப்படாவிட்டால் பந்தயப்பொருளை இழந்து நிற்பாயே!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, சர்தை சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தோடே, நம்முடைய ஆவிக்குரிய நிலையை ஒப்பிட்டுப் பார்த்து, விழித்துக் கொண்டு மனந்திரும்புவோம்! வாக்களிக்கப்பட்ட வெண்வஸ்திரம் தரித்தவர்களாக, இயேசுவோடே நடக்க அர்ப்பணிப்போம்! அல்லேலூயா!

## சர்தை பட்டணம்

சர்தை பண்டைக்கால லிதியா அரசின் தலைநகராகவும், பெர்சிய சாம்ராஜ்யத்தின் மேற்கு பகுதியில் ஒரு முக்கியமான பட்டணமாகவும் இருந்தது. சர்தை சபைக்கான கடிதம் எழுதப்படும் போது, சர்தை ஆசியப்பகுதியில் ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. செல்வம் மிகுந்த ஒரு வணிக ஸ்தலமாக, கம்பள தொழில் மையமாக, பாவம் நிறைந்த பகுதியாக சர்தை பட்டணம் இருந்தது. அந்நாட்களில் ரோம அஞ்சல் வழியில் (Postal Route) எபேசு சிமிர்னா பெர்கமு மற்றும் தியத்தீராவை அடுத்து, தியத்தீராவிலிருந்து தெற்கு திசையில் 50 கிலோமீட்டர் தூரத்தில் சர்தை இருந்தது. இன்றைய நாளில் இப்பகுதி துருக்கி நாட்டில், சிதைந்து நிற்கும் பண்டைய நகரின் அருகே சிறு குடியிருப்புகளாக உள்ளது.

சர்தை மூன்று புறமும் மலைகளால் சூழப்பட்ட ஒரு பீடபூமி; நான்காவது புறம் மிகவும் சரிவான மலைப்பகுதி செழிப்பான

சமவெளியைச் சென்றடைகிறது. எளிதில் எதிரிகள் தாக்கக்கூடாமல், இயற்கையாகவே மிகவும் பாதுகாப்பாக சர்தை அமைந்திருந்தது. நினையாத நாழிகையில், பட்டணமே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த போது, இருமுறை இரவில் எதிரிகளால் பிடிக்கப்பட்டது (கி.மு.549 மற்றும் கி.மு. 219). பின்னர் முதலாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பூமி அதிர்ச்சியினால் பட்டணம் சிதைக்கப்பட்டு மறுபடியும் கட்டப்பட்டது.

அப்போஸ்தவனாகிய பவுல் எபேசு பட்டணத்தில் தங்கி ஊழியஞ்செய்த நாட்களில் (அப்.19:1,10) சர்தை சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என வேதப்பண்டிதர்கள் கருதுகிறார்கள். இயற்கையாகவே மலைப்பகுதியில் பாதுகாவலோடே இருந்த பட்டணம், இரவில் தூங்குகையில் எதிரிகளால் பிடிக்கப்பட்டது போலவே, ஆவிக்குரிய வாழ்வில் அழிவிற்குட்படாதபடிக்கு, சர்தை சபை தூங்காமல் விழித்திருக்கும்படி எச்சரிக்கப்படுகிறதைக் காண்கிறோம். நீ விழித்திராவிட்டால், திருடனைப் போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் (வெளி 3:3) என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

## தேவனுடைய ஏழு ஆவிகள்

தேடிவந்து இரட்சிக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, சர்தை சபைக்கு தம்மை, தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் (வெளி 3:1) என்று வெளிப்படுத்துகிறார். ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைகளின் தூதர்கள் (வெளி 1:20) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய ஏழு ஆவிகள் என்பது எல்லாவற்றையும் போதித்து, எல்லாவற்றையும் நினைப்பூட்டுகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனைக் குறிக்கிறது (யோவான் 14:26).

யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளையும் வாழ்த்தி எழுதும் போது பரிசுத்த ஆவியானவரை தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிற ஏழு ஆவிகள் (வெளி 1:4) என்று குறிப்பிடுகிறார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில், பரிசுத்த ஆவியானவர் என்று எங்குமே குறிப்பிடாமல், ஆவியானவர் என்றும், பரிசுத்த ஆவியானவரின் முழுமையான செயல்பாடுகளை வெளிப்படுத்தும் வண்ணமாக, தேவனுடைய ஏழு ஆவிகள் என்றுமே குறிப்பிடுகிறார். மேலும், பரிசுத்த ஆவியானவரை, தேவனுடைய ஏழு ஆவிகள் என்று வெளி 4:5 மற்றும் வெளி 5:6 வசனங்களில் ஒரு பரிபூரணமானவராக, எல்லாவற்றையும் போதித்து எல்லாவற்றையும் நினைப்பூட்டுகிற ஒரு முழுமையானவராக, தேற்றரவாளனாக குறிப்பிடுகிறார்.

மறுபடியும், பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய ஏழு ஆவிகள் என்று குறிப்பிடப்படுகிற பரிசுத்த ஆவியானவரின் முழுமையான தன்மைகள், சபைக்கான தூதர்களின் பங்களிப்போடு, இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் சர்தை சபையில் நடந்தேற இருப்பதையே இந்த அறிமுகம் வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர், தேற்றரவாளனாக சாகிறதற்கு ஏதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்துவதிலும்; எல்லாவற்றையும் நினைப்பூட்டுகிறவராக, கேட்டுப்பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூருவதிலும்; பின்னர் மனந்திரும்புகிறதற்கு ஏதுவாக, பாவத்தையும் நீதியையும் நியாயத் தீர்ப்பையும் குறித்து கண்டித்து உணர்த்துவதிலும், செயல்படுவதைக் காண்கிறோம். இயேசுவின் எச்சரிப்பைக் கேட்டு, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு விழித்தெழுந்து, கீழ்படிந்து (கைக்கொண்டு) மனந் திரும்புவது சர்தை சபைக்கு, சபையோருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பாவத்தில் சாகிறதற்கு ஏதுவானவைகளையும் நேசித்து, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடனும், சபைத் தூதரின் பங்களிப்போடும், அவர்களையும் மீட்டெடுத்து வெண்வஸ்திரம் தரிப்பிப்பது, நமது நேசரால் வடிவமைக்கப்பட்ட உன்னத இரட்சிப்பின் திட்டமாகும்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, ஒருவேளை நீயும் அந்த சாகிறதற்கு ஏதுவானவைகள் பட்டியலில் இருந்தாலும் மனங்கலங்காதே! இயேசு உன்னையும் என்னையும் மிகவும் நேசிக்கிறார், உனக்கென்று சிறப்பானதொரு இரட்சிப்பின் திட்டத்தைத்தீட்டி, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு நிச்சயமாகவே உன்னையும் மீட்டெடுப்பார். இன்றே இபபொழுதே, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு, வார்த்தைக்கு நீ கீழ்ப்படிந்து மனந்திரும்ப உன்னை ஒப்புகொடுப்பாயா? அர்ப்பணிக்கிற உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பார்! அல்லேலுயா!

## உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்

வேதாகமத்தில் சர்தை சபையைக் குறித்து நிறைவாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை; எந்த ஒரு பாராட்டும் இடம் பெறவில்லை என்பதாக சற்று முன்னர் பார்த்தோம். எல்லாருடைய இருதயங்களையும் சிந்தைகளையும் அறிந்திருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நிறைவாக ஒன்றும் இல்லாத நிலையில், குறைகளை வெளிப்படுத்துகிறார்.

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ உயிருள்ளவன் என்று பெயர் கொண்டிருந்தும், செத்தவனாயிருக்கிறாய் (வெளி 3:1) என்று எச்சரிக்கிறார்.

சபையின் பெயரும் பிரஸ்தாபமும், புகழும் குணாதிசயங்களும், வெளித்தோற்றத்தில் உயிருள்ள சபையாக, தெளிவான தரிசனம் திட்டம் தீர்மானங்களோடு செயல்படும் சபையாக அநேக வேளைகளில் ஒரு பொய்யான தோற்றத்தை உண்டு பண்ணுகிறது. சர்தை சபை மனுஷருடைய பார்வையில் உயிருள்ள சபை என்று பெயர் கொண்டிருந்தது; ஆனாலும், உள்ளாக தேவனுடைய பார்வையில், ஆவிக்குரிய வாழ்வில், செத்த சபையாக இருந்தது. அவர்கள் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தார்கள் (எபேசியர் 2;1) என்று பவுல் இந்த செத்த நிலையை குறிப்பிடுகிறார்.

எந்த சபை தன்னுடைய கடந்த காலத்தையும், பாரம்பரியத்தையும், மேன்மைகளையும் மட்டுமே நினைத்து புகழ்பாடுகிறதோ, அது தன்னுடைய ஆவிக்குரிய அழிவுக்கு ஏதுவாக செயல்படுகிறது என்பதாக அறியலாம். இந்த சபையின் தலைவரும், மூப்பரும், பொறுப்பாளர்களும், வசனத்திற்கும் ஜெபத்திற்கும் மனந்திரும்புதலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, இயேசுவின் வருகைக்கு சபையை ஆயத்தப்படுத்துவதற்கு தவறுகிறார்கள். மாறாக இவர்கள், சமுதாய நல திட்டங்களுக்கும், விழாக்களுக்கும், விருந்துக்கும், போட்டிகளுக்கும், கேளிக்கைகளுக்கும், இன்ப சுற்றுலாவிற்கும் முக்கியத்துவம் கொடுத்து சபையின் கவனத்தை வேறு திசையில் திருப்புகிறார்கள்.

சபையின் பிரசங்கமேடைகளில், சபையை உயிர்ப்பிக்கும் செய்தியினால், பாவத்தை உணர்த்தி, சபையை தட்டி எழுப்பும் செய்திகள் கேட்பது அரிதாக இருக்கிறது. மாறாக ஆவியில் செத்தப் பிரசங்கியாரால், சபையின் வெளிப்புறமான செத்தக்கிரியைகளை புகழ்ந்துபாடி, சபை இறுமாப்பில் இளைப்பாற, தொடர்ந்து தூங்க வைக்கும் செய்திகளே அதிகமாக இருக்கிறது. ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் என்று சொல்லியிருக்கிறார் (எபேசியர் 5:14).

இவ்வகையான செத்தக் கிரியைகளை உடைய செத்த சபையின் தூதனை மூப்பர்களை பொறுப்பாளர்களை, விழித்தெழும்பும்படியாக கர்த்தர் கட்டளையிடுகிறார். விழித்துக்கொண்டு சாகிறதற்கு ஏதுவாகயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்தும்படி கர்த்தர் விரும்புகிறார். முன்னர் கேட்டுப் பெற்றுக் கொண்ட வகையை நினைவுகூறவும், அந்த வழிமுறைகளை, வசனத்தைக் கைக்கொண்டு, கீழ்ப்படிந்து மனந்திரும்பவும் கட்டளையிடுகிறார். நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்: நான் உன் மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் (வெளி 3:3) என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

இது இரண்டாவது வருகையை மாத்திரம் குறிப்பதாக இல்லாமல், அதற்கு முன்னருங்கூட மனந்திரும்பாவிட்டால் அழிவு உண்டு என்று எச்சரிக்கிறது. ஆவிக்குரிய உயிர்மீட்சி இல்லாது, கிறிஸ்துவின் அன்பு இல்லாது, வெளித் தோற்றத்தில் செயல்படுகிறவர்களாக காட்டிக்கொள்ளும் எல்லா சபைகளுக்கும் இது எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

## சாகிறதற்கு ஏதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து

உலகளவில் நாடுகளுக்கு இடையே காவல் துறையின் கூட்டு முயற்சிகளை கண்காணிக்கும் ஒரு நிறுவனம், பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு அறிக்கையை வெளியிட்டது. எல்லா சமுதாயத்திலும் குறிப்பிட்ட சதவிகித மக்கள், நாட்டின் விதிமுறைகளை சரியாக கடைபிடிக்கிறவர்களாக இருக்கிறார்களாம். அதேபோல், விதிமுறைகளுக்கு எதிராகவே எப்பொழுதும் செயல்படும் ஒரு கூட்ட மக்களும் உண்டாம், பெரும்பாலான மற்றவர் (சுமார் 80%), மதில் மேல் உள்ள பூனைக்கு ஒப்பானவர்களாம். நாட்டில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு, மீறிநடப்போர் தண்டிக்கப்பட்டால், இந்த 80% மக்கள் விதிமுறைகளை கடைபிடிப்பவர்களாக "நல்லவராக" மாறிவிடுவார்களாம். கண்காணிப்பும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பும் இல்லாத இடங்களில், இவர்களும் விதிமுறைகளை மீறுபவர்களாக மாறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்தது.

எவ்வளவு உண்மை! சமுதாயத்தின் அங்கமான திருச்சபையிலும் இதே அவல நிலை காணப்படுகிறதை, சர்தை சபைக்கு எழுதப்பட்ட செய்தியில் வாசிக்கிறோம். சர்தை சபையின் தூதனுக்கு, பொறுப்பான ஊழியருக்கும் அவருடன் இணைந்து சபையை வழிநடத்தும் மூப்பருக்கும் பொறுப்பாளர்களுக்கும், கொடுக்கப்பட்டிருக்கும் தெளிவான ஆலோசனையை இந்த கடிதத்தில் காண்கிறோம். தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உண்டு (வெளி 3:4). உயிருள்ளவனென்று பெயர் கொண்டும் செத்தவர்களுமுண்டு. சாகிறதற்கு ஏதுவாயிருக்கிற ஒரு திரள் கூட்டமுமுண்டு.

சபையில் திரள் கூட்டமான சாகிறதற்கு ஏதுவாயிருக்கிறவர்களே, கர்த்தருடைய திட்டத்தில், ஆலோசனையின் மையத்தில், பிரதானமாக இருக்கிறார்கள். இவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக, இவர்கள் கர்த்தர்பேரில் உள்ள விசுவாசத்தில் பலப்படும்படியாகச் செய்ய, கர்த்தர் கட்டளையிடுகிறார். வஸ்திரங்களை அசுசிப்படுத்தாதவர்கள் வெண்வஸ்திரம் பெறுகிறார்கள், உயிருள்ளவனென்று பெயர் கொண்ட செத்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

சர்தை சபையில், சாகிறதற்கு ஏதுவாயிருக்கிறவர்களும், முந்தையை நாட்களில் கர்த்தரிடத்தில் கேட்டு இரட்சிப்பின் வஸ்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், ஜீவபுஸ்தகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டவர்கள்

என்பதை நினைவில் கொள்ளுவோம். இந்தத்திரள் கூட்டத்தினருக்கு இரட்சிப்பின் நற்செய்தி புதிதாக அறிவிக்க வேண்டியதில்லை. இதனிமித்தமே அவர்கள் கர்த்தரிடத்தில் முன்னதாக கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுக் கூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்ப ஆலோசனைப் பெறுகிறார்கள்.

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட வகை வித்தியாசமாக இருப்பதை நாம் அறிவோம். முன்னே தூஷிக்கிறவனும் துன்பப்படுத்துகிறவனும் கொடுமை செய்கிறவனுமாயிருந்த பவுலை தமஸ்கு பாதையில் கர்த்தர் சந்தித்தார். காட்டத்தி மரத்திலிருந்த சகேயுவை இயேசு கண்டு அவன் வீட்டிற்கு சென்றதால், அந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. பின்வாங்கிப் போன நிலைகளிலும், முதலாவதாக எந்த வகையில் இயேசு நம்மை இரட்சிக்கும்படியாக இடைப்பட்டார் என்பதை நினைவுகூர்ந்து, மறுபடியும் அதைப்போன்றே அவருடைய அழைப்புக்கு செவி கொடுத்து கீழ்ப்படிந்து, மனந்திரும்ப விரும்புகிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரனே சகோதரியே, எவ்வகையில் உன்னை மீட்டெடுக்கும்படியாக, உன்னை ஆசீர்வதிக்கும்படியாக, உனக்கு நன்மை செய்யும்படியாக, உன்னை சுகப்படுத்தும்படியாக, கர்த்தர் உன் வாழ்வில் இடைப்பட்டார் என்பதை நீ மறந்திருக்க வாய்ப்பில்லை. இந்நாளிலும், அந்த சூழ்நிலையை, அந்த வகையை நினைவுகூர்ந்து, இயேசுவோடு நடக்க மறுபடியும் உன்னை ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கின்ற உன் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமாம். அல்லேலுயா!

## ஜெயம் கொள்ளுகிறவனுக்கு வெண்வஸ்திரம்

கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும் ஆலோசனை களையும் ஏற்றுக் கொண்டு, விழித்தெழுந்து அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து மனந்திரும்புகிறவனே, ஜெயங்கொள்ளுகிறவன். ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளி 3:5) என்று யோவான், கர்த்தரிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட சர்தை சபைக்கான வாக்குத்தத்தத்தை எழுதி வைத்திருக்கிறார்.

கர்த்தரால் மீட்கப்பட்டவர்களின் பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் (வெளி 13:8). ஜீவபுஸ்தகத்தில் தங்கள் பேர் எழுதப் பட்டவர்களே நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எவனோ, அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் (வெளி 20:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு, அவன் இரட்சிப்படைந்து, பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தத்துடன் தேவநீதியைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தைக் கர்த்தர் கிறுக்கிப்போடாதபடியால், அவன் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பான். ஜெயங்கொள்ளுகிறவனுடைய நாமத்தை பரிசுத்த பிதாவின் முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும் கர்த்தர் அறிக்கையிடுகிறார். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக்கா 15:7) அல்லேலூயா! ஆமென்!

# பிலதெல்பியா சபை

கொஞ்சம் பெலன் உடைய ஒரு சிறிய சபை,
சோர்ந்து போகாமல் பொறுமையுடன் நற்கிரியைகளைச் செய்தது.
இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மறுதலியாமல்,
வேதவசனத்தைக் கைக்கொண்டு உண்மையாக செயல்பட்டது.

கொஞ்சம் பெலன், நிறைவான கிரியைகளைக் கண்ட கர்த்தர்,
ஒருவரும் பூட்டக்கூடாத திறந்தவாசலை அதற்கு முன்பாக வைத்தார்.
கர்த்தர் சபைக்கு அளிக்கும் ஆத்தும இரட்சிப்பையும்
நித்திய ஜீவனையும் இது உறுதிப்படுத்தி உற்சாகப்படுத்துகிறது.

சபை நற்கிரியைகளுடன் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தியது;
சபைக்கு விரோதமாக எழும்பி செயல்பட்ட கூட்டத்தாரும்,
இயேசு சபையை நேசிக்கிறதை அறிந்து,
சபையோடு ஒப்புரவாகி, அவர்களைப் பணிந்து கொண்டார்கள்.

சபை பரிசுத்தமும் கறையற்றதும் பிழையற்றதுமாய் காணப்பட்டது.
கர்த்தர் இதினிமித்தம், உபத்திரவத்தின் நாட்களுக்கு முன்பாக,
பரிசுத்தவான்களின் கூட்டமாகிய சபை மறுரூபப்பட்டு,
இயேசுவுடனிருக்க எடுத்துக் கொள்ளப்படும் என வாக்கருளினார்.

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
ஆறாவதாக இடம் பெறுவது
பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
பிலதெல்பியா, சத்திய வசனத்தைச் சார்ந்த உண்மையுள்ள சபை.

குறைவேதுமின்றி நிறைவே காணப்பட்ட சபை, தனக்குள்ளதைப்
பற்றிக் கொண்டிருக்க ஆலோசனைப் பெற்றது.
உண்மைக்கும், இயேசுவின் நாமத்தை மறுதலியாமல்
வேதவசனத்தைக் கைக்கொண்டதற்கும், கர்த்தர் அவர்களுக்கருளின வாக்கு:

**திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் !**

*சகோதரரே, கர்த்தர் வருமளவும்*
*நீடிய பொறுமையாயிருங்கள்.*
*இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை*
*அடைய வேண்டுமென்று*
*முன்மாரியும் பின்மாரியும் வருமளவும்,*
*நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.*
*நீங்களும் பொறுமையோடிருந்து*
*உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்;*
*கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே*

*(யாக்கோபு 5:7,8).*

# 7. திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்!

திறந்த வாசல் என்பது வேதாகமத்தில், கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கேற்ற சூழ்நிலைகளையும், நற்செய்தி அறிவிப்பதற்கான வாய்ப்புகளையும், கோணலானவைகள் செவ்வையாக்கப்பட்டு வாழ்வும் ஊழியமும் வளம் பெறுவதற்காக தந்தருளப்படும் கிருபைகளையும் குறிக்கிறது. தடைகள் நீக்கப்பட்டு, எதிர்ப்புகள் நிர்மூலமாக்கப்பட்டு, எளிதாக கர்த்தருக்கென்று செயல்பட தூண்டும் ஆசீர்வாத நிலையே திறந்த வாசல்.

அப்போஸ்தலனாகிய பவுல், திருவசனம் சொல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 4:4) என்று எழுதியிருக்கிறார். மேலும் நற்செய்தி அறிவிப்பதற்கான வாய்ப்புகளைக் குறித்து பவுல் : பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன். ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 16:8,9) என்றும் எழுதி வைத்திருக்கிறார். பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுக்கு முன்பாக கர்த்தர் திறந்த வாசல்களை வைத்து, கோணலானவைகளைச் செவ்வையாக்கினார். வெண்கல கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் கொடுப்பேன் என்று வாக்களித்தார் (ஏசாயா 45:1-4).

திவ்யவாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில், பிலதெல்பியா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தம்மை, தாவீதின் திறவுகோலை உடையவர் என்றும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவர் என்றும் ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவர் (வெளி 3:7) என்றும் வெளிப்படுத்துகிறார். மேலும் பிலதெல்பியா சபையின் கிரியைகளின் நிமித்தம் அதைப் பாராட்டி : இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான் என்றார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டு, மனந்திரும்பி பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப்பட்டிருக்கும் நாம் ஒவ்வொருவருங்கூட பிலதெல்பியா சபையினரைப் போன்று நற்கிரியைகளைச் செய்யவும் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளவும் அழைப்பைப் பெற்றிருக்கிறோம். அழைப்பையேற்று நம்முடைய அர்ப்பணிப்பைக் கர்த்தருக்கு வெளிப்படுத்தும்போது, நமக்கு முன்பாகவும் திறந்த வாசலை கர்த்தர் வைப்பார்; அதை ஒருவனும் பூட்டமாட்டான். அல்லேலூயா!

## பிலதெல்பியா சபையின் நியாய விசாரிப்பு

இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உடன் பங்காளனாயிருக்கிற யோவான், ஆசியாவில் உள்ள ஏழு சபைகளுக்கு கர்த்தரிடத்திலிருந்து பெற்ற தரிசனத்தில் பிலதெல்பியா சபைக்கு எழுதப்பட்ட கடிதம் ஆறாவதாக இடம் பெற்றுள்ளது. இந்தக் கடிதம் பிலதெல்பியா சபையின் ஆவிக்குரிய நிலையை ஆராய்ந்தறிந்து, கர்த்தருடைய பாரட்டுகளையும் வாக்குறுதிகளையும் ஆலோசனைகளுடன் தொகுத்து அளிக்கிறது. இது ஒரு இடைக்கால ஆவிக்குரிய தேர்ச்சி அறிக்கையைப் போன்று (Interim Spiritual Progress Report), சபை தனக்குள்ளதைப் பற்றிக்கொண்டு, நற்கிரியைகளைத் தொடர்ந்து நடப்பிக்க உற்சாகப்படுத்துகிறது.

பிலதெல்பியா சபைக்கான இந்த நியாய விசாரிப்பு, சபையின் பொறுப்பான ஊழியரையும் மூப்பரையும் விசுவாசிகளையும் உற்சாகப்படுத்தி, அவர்களில் காணப்பட்ட நற்பண்புகளை பற்றிக் கொண்டிருக்க, பாராட்டி எழுதப்பட்டிருக்கிறது. ஆசியாவின் ஏழு சபைகளில் எந்த ஒரு குறைவும் இல்லாது எல்லாம் நிறைவாக, கர்த்தரால் பாராட்டைப்பெற்று பிலதெல்பியா சபை தனித்து நிற்கிறது. பிலதெல்பியா சபை ஆவிக்குரிய நிலையில் சத்திய வசனத்தைச் சார்ந்த உண்மையுள்ள சபை (Faithful Church) என்று குறிப்பிடப்படுகிறது.

வெளித்தோற்றத்தில் உலகக் கண்ணோட்டத்தில், பிலதெல்பியா சபை கொஞ்சம் பெலன் உடைய ஒரு சிறிய சபையாக இருந்தது. இயேசுகிறிஸ்துவின் நாமத்தை உறுதியாக பற்றிக்கொண்டு, வேதவசனத்தைச் சார்ந்து, உண்மையாக இந்த சபை செயல்பட்டது. பிலதெல்பியா பட்டணத்தில், சபையை சுற்றியுள்ள உலகத்தாரின் எண்ணிக்கையையும் பொருளாதார வலிமையையும் மற்ற ஆற்றலையும் ஒப்பிடும்போது, சபை குறைவுள்ளதாகவே காணப்பட்டது. ஆனாலும் ஆவிக்குரிய நிலையிலே பிலதெல்பியா சபையை, நற்கிரியைகள் நிறைந்ததாகவும் மிகவும் வலிமை வாய்ந்ததாகவும் கர்த்தர் கண்டார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய ஆவிக்குரிய வாழ்வின் நிலை என்ன? உலகத்தின் பார்வையில் உன் வாழ்வும் ஊழியமும் சபையும் பங்களிப்பும் அற்பமாக எண்ணப்படுகிறதா? மனங்கலங்காதே! உலகமும் மனுஷரும், உன் வெளித்தோற்றத்தை, முகத்தை மட்டுமே பார்க்கிறார்கள்; கர்த்தரோ உன் இருதயத்தைப் பார்க்கிறார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து,

மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிற உனக்கு கர்த்தர் நித்திய ஜீவனை அளிப்பார் (ரோமர் 2:7).

இன்றே பிலதெல்பியா சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தோடு உன்னுடைய ஆவிக்குரிய நிலையை ஒப்பிட்டுப்பார்த்து, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆராய்ந்து அறிந்து உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு. தேவன் பேரிலும் அவருடைய வசனத்திலும் உள்ள உன் விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும், அன்பையும் உண்மையையும் காத்துக்கொண்டிரு. நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இரு; தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்பாய்! அல்லேலூயா !

## பிலதெல்பியா பட்டணம்

தியத்தீரா மற்றும் சர்தை பட்டணங்களை அடுத்து தென்கிழக்கு திசையில் ரோம அஞ்சல் வழியில் (Roman Postal Route) 50 கிலோமீட்டர் தூரத்தில் பிலதெல்பியா பட்டணம் இருந்தது. இந்நாளில் இப்பகுதி துருக்கி நாட்டில் அலாசெகிர் (Alasehir) என்று அழைக்கப்படுகிறது. கி.மு. 189 ஆம் ஆண்டில் இந்த பட்டணத்தைக் கட்டின அரசன், தன் சகோதரன் பேரில் இருந்த அன்பை வெளிப்படுத்தும்படியாக அதற்கு பிலதெல்பஸ் என்று பெயரிட்டான். பிலதெல்பஸ் என்ற சொல்லுக்கு "சகோதர சிநேகம்" (Brotherly Love) என்று அர்த்தமாம்.

மலைகளை அடுத்து திராட்சைத் தோட்டங்களால் நிரம்பிய செழிப்பான சமவெளியில் இந்த பட்டணம் இருந்தது. தலைநகரமான ரோமிலிருந்து ரோம சாம்ராஜ்யத்தின் கிழக்கு பகுதிக்குச் செல்லும் பிரதான சாலையில் இருந்த பிலதெல்பியா, "கிழக்கேச் செல்லும் வாசல்" (Gateway to East) என்றும் அழைக்கப்பட்டது. பண்டைய காலத்தில் கிரேக்க கலாச்சாரத்தையும் மொழியையும் பிறபகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் வாசலாகவும் பிலதெல்பியா இருந்தது. பூமி அதிர்ச்சிகளினால் அடிக்கடி பாதிக்கப்பட்ட பிலதெல்பியா, கி.பி. 17 ஆம் ஆண்டும் இதைத் தொடர்ந்து பல ஆண்டுகளும் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினாலும், அதிர்வுகளினாலும், அதிகம் பாதிக்கப்பட்டது. இதனிமித்தம் அநேகமுறை மக்கள் பட்டணத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. மேலும், பட்டணம் மறுபடியும் கட்டப்பட்டபோது புதிய பெயர்களுடன் விளங்கியது.

## தாவீதின் திறவுகோலை உடையவர்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிலதெல்பியா சபைக்கு தம்மை, பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை

உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் (வெளி 3:7) என்று அறிமுகப்படுத்துகிறார். வேதாகமத்தில் வெளி 6:10 ஆம் வசனத்தில் பரிசுத்தமும் சத்தியமும் உள்ள ஆண்டவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தாவீதின் திறவுகோலை உடையவர் என்ற அறிமுகம் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் எலியாக்கீம் என்ற ஊழியக்காரனுக்கு கர்த்தர் கொடுத்த பொறுப்பை நினைவூட்டுகிறது. அந்நாளிலே அரண்மனை விசாரிப்புக்காரனும் பொக்கிஷக்காரனுமாக எலியாக்கீம் என்னும் என் ஊழியக்காரனை வைப்பேன் என்று கர்த்தர் உரைத்தார். தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின் மேல் வைப்பேன். ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு அவன் திறப்பான். ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு அவன் பூட்டுவான் (ஏசாயா 22:22) என்றார்.

தாவீதின் திறவுகோலை உடைய இயேசுகிறிஸ்து ஒருவரே பரிசுத்த பிதாவினிடத்தில் செல்ல வாசலை திறக்கிறார். பிலதெல்பியா சபையினரும் பரிசுத்த பிதாவினிடத்திற்குச் சென்று நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறந்த வாசலை அவர்களுக்கு முன்பாக வைத்தார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) என்றும்; நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் (யோவான் 10 :9) என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவனிடத்திற்குச் செல்லவும், அவர் அருளும் ஆத்தும இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளவும் கர்த்தர் திறந்த வாசலை வைத்திருக்கிறார். கர்த்தர் பரிசுத்தமும் சத்தியமுமுள்ளவராய், சத்திய வசனத்தைக் கைக்கொண்ட பிலதெல்பியா சபையை, சத்திய வசனத்தினாலேயே பரிசுத்தப்படுத்துகிறார் (யோவான் 17:17). தாவீதின் திறவுகோலை பிரயோகித்து, பிதாவினிடத்திற்குச் செல்லும் திறந்த வாசலை ஏற்படுத்தி தருகிறார். அல்லேலூயா!

## கொஞ்சம் பெலன், நிறைவான கிரியை

பரிசுத்தமும் சத்தியமுமுள்ள கர்த்தரால் ஆராய்ந்தறியப்பட்டு குறைவுகளேதும் குறிப்பிடப்படாமல் நிறைவான பாராட்டுகளையே பிலதெல்பியா சபைப் பெற்றிருந்தது. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல்,

என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அதை ஒருவனும் பூட்டமாட்டான் (வெளி 3:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தாவீதின் திறவுகோலை உடையவரான இயேசுகிறிஸ்து, பிலதெல்பியா சபையின் கிரியைகளை அறிந்திருந்தார். பிலதெல்பியா சபை கொஞ்சம் பெலனுள்ள ஒரு சிறிய சபையாக, நெருக்கங்களுக்கு மத்தியிலும் நற்சாட்சியோடு செயல்பட்டது. அந்தப் பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத யூதர்கள் நிமித்தம், அவர்கள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டனர்; விசுவாசத்தில் சோதிக்கப்பட்டனர்; கலாச்சாரம் மற்றும் பல பொருளாதார தாக்கங்களுக்கும் உட்பட்டனர்.

பிலதெல்பியா சபைக்கு கொஞ்சம் பெலன் இருந்தும், இயேசுவின் நாமத்தை மறுதலியாமல், வசனத்துக்குக் கீழ்ப்படிந்து நிறைவான கிரியைகளை நடப்பித்ததால், சபை கர்த்தரால் பாராட்டப்பட்டது. ரோம சாம்ராஜ்யத்தின் பெரும்பாதையில் பிலதெல்பியாவுக்கு முன்னர் வடதிசையில் சர்தையும், இதற்கு கீழே தென்கிழக்கு பகுதியில் லவோதிக்கேயாவும் இருந்தது. இந்த இரு சபைகளும் எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் வெளித்தோற்றத்திலும் மிகவும் பெரிய சபைகள். ஆனால், சர்தை உயிருள்ள சபை என்று தன்னை வெளியே பிரசித்தப்படுத்தின செத்த சபை; லவோதிக்கேயா தன்னிறைவைப் பெற்று, பெருமையும் அகங்காரமுமாக செயல்பட்ட சபை என்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இவை இரண்டிற்கும் இடைப்பட்ட பிலதெல்பியா சபை, எண்ணிக்கையிலும், பொருளாதாரத்திலும் வசதிகளிலும் வாய்ப்பிலும் குறைவுற்ற சபையாகவே இருந்தது. இந்த சபை அருகிலிருந்த சபைகளைக் கண்டு, அந்த கிரியைகளைச் செய்து உலகரீதியான மேன்மைகளைப் பெற்றுக்கொள்ளத் துணியாமல், கர்த்தருடைய வசனத்துக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவை உறுதியாக பற்றிக்கொண்டு நிறைவான கிரியைகளை வெளிப்படுத்தியது. கர்த்தரால் ஆறுதலைப் பெற்று உற்சாகப்படுத்தப்பட்டது; பாராட்டைப் பெற்றது. கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி (மத்தேயு 25:21) என்று எஜமானின் நன்மதிப்பையும் பெற்றது.

## பிலதெல்பியாவுக்கு திறந்த வாசல்

சபைக்கான இந்த கடிதத்தின் நோக்கம், இவ்வகையான நெருக்கமான நிலைகளில் சபைக்கு ஆறுதல் அளிக்கும்படியாகவும்,

விசுவாசத்தில் நிலைத்திருந்து தேவனுடைய வசனங்களைச் சார்ந்து செயல்பட அவர்களை ஊக்குவிக்கும்படியாகவும் உற்சாகப்படுத்தும் படியாகவுமே இருந்தது. சபைக்கு இருந்த கொஞ்சம் பெலனையும் வசதிகளையும் வாய்ப்புகளையும் உபயோகித்து, நற்செய்தி அறிவிக்கவும் ஊழியங்கள் செய்யவும் சாட்சிப்பகரவும் திறந்தவாசலைக் கர்த்தர் ஏற்படுத்தித் தந்தார். இதற்கு மேலாக, இங்கு திறந்தவாசல் என்னும் வாக்குத்தத்தம், பிலதெல்பியா சபையின் நெருக்கங்களில் இயேசுகிறிஸ்துவின் மூலம் வாக்களிக்கப்பட்ட ஆத்தும இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் உறுதிப்படுத்தி உற்சாகப்படுத்துகிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான் என்ற வாக்கை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அடிக்கடி அறிக்கையிட்டு நமக்கு சொந்தமாக்கி கொள்ளுகிறோம். திறந்தவாசல் என்கிறபோது, பொதுவாக நாம், எளிய இலகுவான வழிமுறைகளில் நிறைவான வளர்ச்சியையும், ஊழிய ஸ்தலங்களில் மேலான வசதிகளையும் வாய்ப்புகளையும், புதிய எல்லைகளில் ஊழிய விரிவாக்கங்களையும் எதிர்பார்த்து காத்திருக்கிறோம். மிகவும் நல்லது.

ஆனாலும், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். இந்த கர்த்தருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, ஆத்தும இரட்சிப்பையும் நித்திய ராஜ்யத்தின் நிச்சயத்தையும் நமக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற திறந்தவாசல் வழியாக தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள அர்ப்பணிப்போம். அப்பொழுது இரட்சிப்பும் நித்திய ஜீவனும் நமக்கு தந்தருளப்படுவதோடு, வாழ்வும் ஊழியமும் வளம்பெற நன்மையான பல ஆசீர்வாதங்களையும் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொள்ளுவோம். அல்லேலூயா!

## இயேசு சபையின் மேல் அன்பாயிருக்கிறார்

செத்த சபை என்று பெயர் பெற்ற சர்தை சபையிலும், தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் இருந்தார்கள். இதைப் போன்றே, விசுவாசமும் உண்மையும் உள்ள பிலதெல்பியா சபையிலும், யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலர் இருந்தார்கள். இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல்

அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன் (வெளி 3:9) என்று கர்த்தர் சபைக்கு வாக்களித்தார்.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேலர், பல வேதவசனங்கள் தங்களுக்கென்று வாக்களிக்கப்பட்டதாக எண்ணி, அவைகள் தங்கள் வாழ்வில் நிறைவேற காத்திருந்தனர். உன்னுடனே மாத்திரம் தேவன் இருக்கிறார் என்றும், அவரையல்லாமல் வேறே தேவன் இல்லையென்றும் சொல்லி, உன்னைப் பணிந்து கொண்டு, உன்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 45:14) என்ற வாக்கும், அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக் கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 8:23) போன்றதான வாக்குகளும் தங்களுக்கே சொந்தமானதாக இஸ்ரவேலர் நம்பினர்.

ஆனால், யூதரானாலும் கிரேக்கரானாலும் மற்ற எந்த இனத்தவரானாலும், இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாக அவரை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளுக்கே இவ்வகையான ஆசீர்வாத நிலை கர்த்தரால் அருளப்படுகிறது. இதையே நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து : தேவனுடைய இராஜ்யம் அவர்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்கு, சபைக்குக் கொடுக்கப்படும் (மத்தேயு 21:43) என்றார். பரிசுத்தமும் உண்மையுமுள்ள திருச்சபை, தேவனுடைய புதிய இஸ்ரவேலாக இந்த வாக்குத்தத்தங்களின் நிறைவைக் காண நியமிக்கப்பட்டிருக்கிறது.

சாத்தானின் கூட்டத்தார் என்று விவரிக்கப்படுகிற, அவிசுவாசிகளாயிருந்தும் தங்களை விசுவாசிகளும் பரிசுத்தருமென்று பொய் சொல்லுகிறவர்களும், இயேசுவைத் தங்கள் இரட்சகராக, மேசியாவாக ஏற்றுக்கொள்ளாதவரும், அவர்கள் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, கர்த்தர் சபையின் மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வார். இஸ்ரவேலரை புறஜாதியார் வந்து பணிந்து கொள்வார்கள் என்ற நிலை மாறி, அவர்கள் இயேசுவை மேசியாவாக அறிந்து ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்பட்டு, இயேசு சபையின்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்வார்கள். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (ரோமர் 11:26) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்நாளிலும் அநேக ஆவிக்குரிய சபைகளிலும், ஒரு கூட்டத்தார் தேவனுக்கும் தேவனுடைய ராஜ்யத்திற்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் அவர்களின் சாட்சிக்கும்

விரோதமாக அவதூறான வார்த்தைகளைப் பேசி சாத்தானின் கூட்டமாக செயல்படுகிறதைக் காண்கிறோம். சபையின் ஊழியரும் மூப்பரும் விசுவாசிகளும் தொடர்ந்து வாழ்வில் நற்கிரியைகளை செய்து சாட்சியோடு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்திச் செயல்படும் போது, கடினமான மனதுடைய அந்தக் கூட்டத்தாரும், இயேசு சபையின் மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து உணர்ந்து கர்த்தரோடும் சபையோடும் ஒப்புரவாகி பணிந்து கொள்வார்கள். அல்லேலூயா!

## சோதனை காலத்திற்குத் தப்புவிப்பேன்

பிலதெல்பியா சபையைப் பாராட்டி கர்த்தர் தந்த மூன்றாவது வாக்கு: என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வெளி 3:10) என்றார்.

கர்த்தருடைய பொறுமையைக் குறித்து பேதுரு : ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி கர்த்தர் நம்மில் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9) என்று எழுதியிருக்கிறார். மேலும், தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் என்றும்; இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்திதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3 : 12,14) என்றும் எழுதியிருக்கிறார். யாக்கோபும் தன் நிருபத்தில் : சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள் (யாக்கோபு 5:7) என்று ஆலோசனை சொல்லுகிறார்.

பிலதெல்பியா சபையினர், கர்த்தருடைய பொறுமையின் எதிர்பார்ப்பை அறிந்து உணர்ந்து, பரிசுத்தமுள்ளவர்களாக, கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாக காணப்பட்டார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தவறுசெய்கிறவர்கள் வெட்கி மறைந்து கொள்வதுபோல் இல்லாமல், கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை உடையவர்களாக, சமாதானத்துடன் மிகுந்த ஆவலோடு அவரை சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருந்தார்கள். மேலும், தங்களுடைய நெருக்கங்களுக்கு மத்தியிலும் நீடிய பொறுமையோடு, குறைவுகளைப் பாராமல், தாமதத்தினால் தொடரும் பாடுகளையும் சகித்து, கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்திருந்தார்கள்.

இதனிமித்தம் பூமியில் வரப்போகிற சோதனை காலத்திற்கு பரிசுத்தவான்களின் கூட்டத்தை, சபையை தப்புவிப்பேன் என்று கர்த்தர் வாக்கருளினார். சோதனை காலம் என்பது கர்த்தர் எச்சரிக்கும் மிகுந்த

உபத்திரவத்தின் காலம் என்பதாக வேதப் பண்டிதர்கள் கருதுகிறார்கள். இது கடைசி கால நிகழ்வுகளில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. கர்த்தருடைய பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தைக் காத்துக்கொண்ட பிலதெல்பியா சபையை, வரப்போகிற மிகுந்த உபத்திரவத்தின் காலத்திற்கு தப்பும்படி கர்த்தர் காப்பேன் என்று வாக்கருளியிருக்கிறார். அல்லேலூயா!

## கடைசிகால நிகழ்வுகள்

இயேசுவின் இவ்வுலக ஊழிய நாட்களில் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து : கடைசிகால நிகழ்வுகள் எப்பொழுது சம்பவிக்கும்? இயேசுவினுடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளங்கள் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக : ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று துவங்கி கடைசி காலத்தில் சம்பவிக்க வேண்டிய காரியங்களை விளக்கிச் சொன்னார் (மத்தேயு 24:3-39). ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும், அப்பொழுது முடிவு வரும் என்றும், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:14,21) என்றும் சொன்னார்.

பூமியின் மீதெங்கும் வரப்போகிற மிகுந்த உபத்திரவத்தின் நாட்களுக்கு முன்பாக, மனுஷகுமாரனுடைய வருகைக்கு ஆயத்தமாக இருக்கும் சபையாகிய பரிசுத்தக் கூட்டம், மறுரூபப்பட்டு மேகங்களின் மேல் ஆகாயத்தில், எப்பொழுதும் கர்த்தரோடே கூட இருக்கும்படியாக எடுத்துக் கொள்ளப்படும். சபை மறுரூபப்பட்டு கர்த்தரிடத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதை இரகசிய வருகை (Rapture) என்பதாக வேதப்பண்டிதர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்வண்ணமாக நாம் மறுரூபப்பட்டு கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, விழித்திருக்கவும் ஆயத்தமாயிருக்கவும் கர்த்தர் நம்மை எச்சரித்திருக்கிறார். உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள் என்றும்; நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44) என்றும் இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

பரிசுத்தவான்களின் சபை மறுரூபப்பட்டு கர்த்தரிடத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது நடைபெறவிருக்கிற வேதாகமத்தில்

குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசி கால நிகழ்வுகளை தொகுத்து தியானிப்பது நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு பிரயோஜனமாக இருக்கும். ராஜ்யத்தினுடைய சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும் (மத்தேயு 24:14). கேட்டின் மகனாகிய பாவமனுஷன் என்கிற அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான் (2 தெச 2:3). சபை மறுரூபப்பட்டு, பரிசுத்தவான்கள் கர்த்தரிடத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1தெச 4:17,18; 1 கொரி 15:50-54). தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான் (2 தெச 2: 6,7).

இங்கு பவுல் அந்திக்கிறிஸ்துவை அக்கிரமக்காரன் என்றும், பரிசுத்த ஆவியானவரை அக்கிரமக்காரனை தடைசெய்கிறவராகவும் குறிப்பிடுவதாக வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். சபையின் காலம் முடிவுக்கு வரும்; தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் நாட்கள் நிறைவு பெறும். பூமியெங்கும் வரப்போகிற சோதனைகாலம் (வெளி 3:10) என்கிற மிகுந்த உபத்திரவத்தின் காலம் உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21).

## உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நீங்கள் நினையாத நாழிகையிலே இயேசுகிறிஸ்து வரும்போது, சபையாகிய பரிசுத்தவான்களின் கூட்டம் மறுரூபப்பட்டு கர்த்தரிடத்தில் எடுத்துக் கொள்ளப்படும். அந்த பரிசுத்தர் கூட்டத்தில் நிற்பதற்கு, எண்ணப்படுவதற்கு ஆவிக்குரிய வாழ்வில் நீங்கள் ஆயத்தமா? இன்றே பிலதெல்பியா சபையின் ஆவிக்குரிய நிலையோடு, நற்பண்புகளோடு கிரியைகளோடு உங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ந்தறிந்து, கிறிஸ்துவுக்குள் சீர்படுத்திக் கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். கர்த்தருடைய அழைப்பை ஏற்று அர்ப்பணிக்கிற உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

இன்றைக்கு அருளப்படும் இந்த வாய்ப்பை நீங்களும் நானும் அசட்டைச் செய்து நழுவவிடும்போது, ஒரு அரிய வாய்ப்பை இழந்து போகிறது மட்டுமல்லாமல், மிகுந்த உபத்திரவங்களுக்குட்பட்டு நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வேண்டிய உபத்திரவத்தின் காலத்திற்குள் தள்ளப்படுவோம். ஒருபுறம் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையின் நெருக்கங்களும் உபத்திரவங்களும் ஏற்படுத்தும் தாக்கங்கள்; மறுபுறம் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு பழகின தேவஜனம், ஆவியானவரின் முழுமையான ஆதரவின்றி தவித்து, சாட்சியைக் காத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம். உபத்திரவத்தின் காலங்களில் இரட்சிப்படைய, இரத்தசாட்சியாகவும் மரிக்க நேரிடலாம் என்று சொல்லப்படுகிறது.

ஆம், பிரியமானவர்களே, காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வோம். எருசலேம் நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுத நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து : உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் (லூக்கா 19:42) என்று உங்களினிமித்தமும் என்னிமித்தமும் அங்கலாய்க்கிறார். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெளி 3:13). அல்லேலூயா!

## உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு

பிலதெல்பியா சபை, கர்த்தரால் உற்சாகப்படுத்தப்பட்டு, சபைக்கு உண்டான நற்பண்புகளையும், கர்த்தரின் பாராட்டோடு பெற்றுக்கொண்ட கிரீடத்தையும் பற்றிக்கொண்டிருக்க ஆலோசனைப் பெற்றது. கர்த்தர் தந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, தனக்குள்ளதைப் பற்றிக்கொண்டு செயல்படுபவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்; அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை, என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன் என்றார்.

கர்த்தருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு செயல்படுபவன், ஜெயங்கொள்ளுகிறவன் என்று அழைக்கப்படுகிறான். ஜெயங்கொள்ளுகிறவன் வாக்களிக்கப்பட்ட மூன்று மேன்மைகளையும் பெற்று தேவனுடைய ஆலயத்திலே நாட்டப்படுகிறான். பூமி அதிர்ச்சிகளினால் பாதிக்கப்பட்டு இப்பூமியிலே நிலையின்றி இருந்தவன், ஒருக்காலும் நீங்காது தேவாலயத்தில் நிலைநாட்டப்படுகிறான். இயற்கையின் சீற்றத்தால் பலமுறை சேதமுற்று, மறுபடியும் கட்டப்பட்ட போதெல்லாம் புதிய பெயரை பெற்றுக் கொண்ட நிலைமாறி, என்றும் அழியாத நித்திய ராஜ்யத்தைப் பெற்று, பரிசுத்தப்பிதாவின் நாமத்தையும், அவருடைய விலாசமான அவருடைய நகரத்தின் நாமத்தையும், இரட்சகரும் ஆட்டுக்குட்டியானவருமாகிய இயேசுகிறிஸ்துவின் புதிய பொறுப்புக்கேற்ற புதிய நாமத்தைத் தரித்துக் கொண்டு இயேசுவுக்காய் என்றென்றும் வாழும் சிலாக்கியத்தைப் பெறுகிறான்.

என்னதொரு உன்னதமான வாய்ப்பு! பிலதெல்பியா சபையினரைப் போன்று நற்கிரியைகளை நடப்பித்து, கர்த்தருடைய நாமத்தை எந் நிலையிலும் மறுதலியாமல், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க அர்ப்பணித்திருக்கிற நம் ஒவ்வொருவருக்குங்கூட, கர்த்தர் இப்பேர்ப்பட்ட மேன்மைகளை தந்தருள்வாராக! ஆமென். அல்லேலூயா!

# லவோதிக்கேயா சபை

நல்லதொரு ஆவிக்குரிய சபையாக துவங்கினாலும்,
துரிதமான வளர்ச்சியும் செல்வ செருக்கும், பல வேளைகளில்
பெருமைக்கும் அகங்காரத்திற்கும் இடமளிக்கிறது;
காலப்போக்கில் சபை சிதைந்து தேவமகிமையை இழந்து போகிறது.

தாம் நேசிக்கிறவர்களை இயேசு கடிந்து கொண்டு சிட்சிக்கிறார்;
ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்ப அழைக்கிறார்.
குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாய் இருப்பவர்களைக்
கர்த்தர் வாந்திப் பண்ணிப் போடுவேன் என எச்சரிக்கிறார்.

வாசற்படியிலே இயேசு நின்று தட்டுகிறார்
இது இயேசுகிறிஸ்து அதிசீக்கிரமாய் மறுபடியும்
வரவிருக்கிறதைக் காட்டுகிறது.
இனி காலம் செல்லாது.

கர்த்தருடைய அழைப்பின் குரலுக்கு செவிகொடுத்து,
இயேசுவை மறுபடியும் வாழ்வில் ஏற்றுக்கொள்ளும் போது,
பாதிக்கப்பட்ட உறவின் நிலை சீரடைகிறது;
இயேசுவோடு சிங்காசனத்தில் உட்கார கிருபை கிடைக்கிறது.

யோவான் பெற்ற சபைகளுக்கான தரிசனத்தில்
ஏழாவதும் கடைசியுமாக இடம் பெறுவது
லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு எழுதப்பட்ட வார்த்தைகளாகும்.
லவோதிக்கேயா பெருமையும் அகங்காரமுமுள்ள சபை.

எந்த ஒரு பாராட்டையும் கர்த்தரிடத்தில் பெறாமல்,
கடிந்துரைக்கப்பட்டு லவோதிக்கேயா சபை தனித்து நிற்கிறது.
இழந்து போனதைத் தேடி இரட்சிக்கவே மனுஷகுமாரன் வந்தார்.
இது தேடிவந்த நம் நேசரின் சத்தம் :

**இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் !**

*குமாரனாகிய இயேசுகிறிஸதுவுக்குள்,*
*அவருடைய இரத்தத்தினாலே,*
*பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.*
*அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானார்;*
*கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்*
*(கொலோசெயர் 1:14,18;3:11).*
*ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை*
*ஏற்றுக்கொண்டபடியே,*
*அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும்,*
*அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்,*
*அவருக்குள் நடந்துகொண்டு,*
*நீங்கள் போதிக்கப்பட்டபடியே,*
*விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே*
*அதிலே பெருகுவீர்களாக (கொலோசெயர் 2:6,7).*

# 8. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்!

சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியில் 2014-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்று நாட்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க தேவனுடைய பிள்ளைகள் சிலர் ஜெபித்து செயல்பட்டார்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினால், மொத்தம் உள்ள சுமார் 45,000 குடியிருப்புகளில், 30,000 இடங்களுக்கு செல்ல முடிந்தது. அவற்றில் 15,000 குடும்பங்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சுவிசேஷ பகுதிகளையும் சாட்சியோடுள்ள கைப்பிரதிகளையும் கொடுக்கவும் கர்த்தர் கிருபைச்செய்தார் மீதமுள்ள 15,000 வீடுகளில் பல பூட்டப்பட்டிருந்தது; எஞ்சியுள்ள வீடுகளில் கதவு தட்டப்பட்டபோது, திறக்கப்பட்டாலும், ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் கதவடைக்கப்பட்டது.

இதைப்போன்றே, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும் வாசற்படியிலே நின்று தட்டுகிறார். இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன்; அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் (வெளி 3:20) என்று இயேசு சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்துவை இரட்சகராக மீட்பராக தெய்வமாக அறிந்தும் அவரைத் தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ளாதவர்களது உள்ளக்கதவையும்; இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்னர், உலகத்தின் மாயையில் சிக்கி இச்சைகளுக்குட்பட்டு பின்வாங்கி பாவ வாழ்விற்கு வழுவிச் சென்றவர்களது உள்ளத்தின் வாசற்படியிலும் நின்று இயேசு தட்டுகிறவராய் இருக்கிறார்.

இயேசுவின் அழைப்பை, சத்தத்தைக்கேட்டு ஒருவன் கதவைத் திறந்தால், அவரை ஏற்றுக்கொண்டால், இயேசுகிறிஸ்துவோடு நல்லதொரு உறவு ஏற்படுகிறது. இயேசுகிறிஸ்து அடைக்கப்பட்டுள்ள உள்ளங்களை தட்டுகிறார்; திறக்கப்படுகையில் உட்பிரவேசித்து அவர்கள் வாழ்வின் பங்காளராக மாறுகிறார்.

கர்த்தருடைய கரத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளும், கேட்கிற வாசிக்கிற தேவனுடைய வார்த்தைகளும், அனுதினமும் நம் வாழ்வில் அவருடைய அழைப்பின் சத்தமாக தொனிக்கிறது. கர்த்தருடைய ஆலோசனைக்கும் வழிநடத்துதலுக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும் ஆவியின் உணர்த்துதலுக்கும் செவிகொடுத்து உணர்வடைந்து, அழைப்பிற்கு அர்ப்பணிப்போமேயானால், கர்த்தருடைய ஆவியானவர் நம்முடைய வாழ்வில் இடைபட்டு, இவ்வுலக வாழ்விலேயே தேவனோடு சஞ்சரிக்கும் உன்னத வாழ்வை நமக்கு தந்தருளுவார். அல்லேலூயா!

## இயேசு சீக்கிரமாய் வருகிறார்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நாம் வாழும் இந்தக் காலக்கட்டத்தில், வாசற்படியிலே இயேசு என்பது, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அதிசீக்கிரமாய் மறுபடியும் வரவிருக்கிறதைக் காட்டுகிறது. பிலதெல்பியா சபைக்கு எழுதிய கடிதத்தில், இதோ சீக்கிரமாய் வருகிறேன் (வெளி 3:11) என்று சொன்னவர், லவோதிக்கேயா சபைக்கு எழுதிய கடிதத்தில், வாசற்படியிலே நிற்கிறவராக தம்மை வெளிப்படுத்துகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நாட்களின் ஏழு சபைகளின் தன்மைகளும், பெந்தெகொஸ்தே நாளில் உருவாக்கப்பட்ட ஆதித்திருச்சபையின் நாட்கள் துவங்கி, இன்றைய நாட்கள் வரை உள்ள சபை சரித்திரத்தின் ஏழு காலக்கட்டங்களை விளக்குவதாக வேதப்பண்டிதர்கள் கருதுகிறார்கள்.

இந்தக் கண்ணோட்டத்திலே பார்ப்போமேயானால், நாம் வாழும் இந்தக்காலம், பிலதெல்பியா சபையின் காலம் நிறைவுபெற்று லவோதிக்கேயா சபையின் தன்மைகள் பரவலாக வெளிப்படும் நாட்களாக இருக்கிறது. ஆகவே இந்நாட்களில் நமக்கு வாசற்படியிலே இயேசு என்பது, இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் வரவிருப்பதை உறுதிச்செய்கிறதாய் காணப்படுகிறது. இதனிமித்தமே, லவோதிக்கேயா சபையின் ஆவிக்குரிய நிலையையும், கர்த்தர் அந்த சபைக்கு தந்தருளின ஆலோசனைகளையும் எச்சரிப்புகளையும் தெளிவாக கற்றறிந்து, நம்முடைய வாழ்வை சீர்படுத்தி, கர்த்தருடைய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்.

## லவோதிக்கேயா சபையின் நியாய விசாரிப்பு

சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இயேசு தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம் வேதாகமத்தின் கடைசி புஸ்தகமாக இடம் பெற்றுள்ளது. ஆசியாவிலிருந்த ஏழு பட்டணங்களிலுள்ள சபைகளுக்கு கர்த்தர் சொன்னவைகள் வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3-ஆம் அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றில் லவோதிக்கேயா சபைக்கான கடிதம், ஏழாவது கடைசி கடிதமாக, 3-ஆம் அதிகாரம், வசனங்கள் 14 முதல் 22-ல் உள்ளது.

கடைசியாக இடம்பெற்றுள்ள இந்தக் கடிதம், லவோதிக்கேயா சபையின் ஆவிக்குரிய மோசமான நிலையைக் கண்டறிந்து, கர்த்தருடைய கடிந்து கொள்ளுதலையும் வாக்குறுதியையும் ஆலோசனைகளுடன் தொகுத்து அளிக்கிறது. இது ஒரு இடைக்கால ஆவிக்குரிய தேர்ச்சி அறிக்கையைப் போன்று (Interim Spiritual Progress Report) சபை ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்ப ஆலோசனையருளி எச்சரிக்கிறது.

லவோதிக்கேயா சபைக்கான இந்த நியாய விசாரிப்பு, சபையின் பொறுப்பான ஊழியரையும் மூப்பரையும் விசுவாசிகளையும் எச்சரித்து, அவர்களில் காணப்பட்ட குறைகளை வெளிப்படுத்தி மனந்திரும்ப ஆலோசனையாக எழுதப்பட்டிருக்கிறது. அந்நாட்களின் ஏழு சபைகளில், எந்த ஒரு பாராட்டும் கர்த்தரிடத்தில் பெறாமல், கடிந்துரைக்கப்பட்டு லவோதிக்கேயா சபை தனித்து நிற்கிறது. லவோதிக்கேயா சபை ஆவிக்குரிய நிலையில் பெருமையும் அகங்காரமுமுள்ள சபை (Proud and Arrogant Church) என்று அறியப்பட்டிருந்தது.

வெளித்தோற்றத்திலும் செல்வாக்கிலும் எண்ணிக்கையிலும் லவோதிக்கேயா சபை மிகவும் பெரிய சபையாக இருந்தது. இது எல்லா நிலையிலும் தன்னிறைவைப் பெற்று பெருமையோடும் அகங்காரத்தோடும் செயல்பட்டசபை என்பதாக குறிப்பிடப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்தில் தங்கி ஊழியஞ் செய்த நாட்களில், பவுலின் உடன் ஊழியராக இருந்த எப்பாப்பிராவின் போதகத்தினால் லவோதிக்கேயா கொலோசெ எராப்போலியா (கொலோசெயர் 4:13) மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் இயேசுகிறிஸ்துவை அறிந்து (கொலோசெயர் 2:1; 4:15,17) அவரை ஏற்றுக்கொண்டார்கள். கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் (கி.பி. 61-ஆம் ஆண்டு) லவோதிக்கேயா சபையைக்குறிப்பிடும் போது பவுல் எந்த ஒரு பாதகமான செய்கையையும் தனிப்படுத்தி குறிப்பிடவில்லை. லவோதிக்கேயா சபை நல்லதொரு ஆவிக்குரிய சபையாக துவங்கி, பின்னர் துரிதமான வளர்ச்சியினாலும் செல்வச்செருக்கினாலும் சடிதியாக இந்நிலைக்கு (கி.பி.70-95) 20, 25 ஆண்டுகளில் சீரழிந்திருக்கலாம் என தேவமனிதர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய ஆவிக்குரிய வாழ்வின் நிலையை நீ இந்நாளில் ஆராய்ந்தறிந்து கர்த்தரிடத்தில் உன்னை அர்ப்பணிப்பாயா? உன் வாழ்வில் குடும்பத்தில் வேலை ஸ்தலத்தில் ஊழியத்தில் நீ பெற்றடைந்த மேன்மைகள் ஆசீர்வாதங்கள், பரத்திலிருந்து உண்டாகி, பிதாவாகிய தேவனிடத்திலிருந்து இறங்கி வந்தது என்றுணர்ந்து அவருக்கே நன்றி செலுத்துவாயா? மாறாக, இதை கவனியாமல் இருப்பாயானால், இந்த

மேன்மைகளே உன் வாழ்வின் பெருமைக்கும் அகங்காரத்திற்கும் வழிவகுத்து, அழிவிற்கு காரணமாகிவிட அதிக வாய்ப்புகள் உண்டு. பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள் (கொலோசெயர் 3:2). அல்லேலூயா!

## லவோதிக்கேயா பட்டணம்

சர்தை மற்றும் பிலதெல்பியா பட்டணங்களை அடுத்து ரோம அஞ்சல் வழியில் (Roman Postal Route) 70 கிலோ மீட்டர் தூரத்தில் தென் கிழக்கு திசையில் லவோதிக்கேயா பட்டணம் இருக்கிறது. இதன் பழங்கால சிதைவுகள் துருக்கி நாட்டில் எஸ்கி ஹிசார் (Eskee Hizar) என்ற இடத்திற்கு அருகில் காணப்படுகிறது. இது ரோமாபுரிக்குச் செல்லும் பெரும்பாதையில் லிகஸ் (Lycus) ஆற்றின் பள்ளத்தாக்கில், முக்கியமான வணிக ஸ்தலமாகவும் செல்வாக்குள்ள பட்டணமாகவும் இருந்தது. கி.பி.60-ஆம் ஆண்டில் லவோதிக்கேயா பூமி அதிர்ச்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டபோது, ரோம அரசின் நிதி உதவியை ஏற்க மறுத்து; தங்களுடைய முயற்சியினாலும் செல்வத்தினாலும் நகரத்தை புதுப்பித்துக்கட்டினார்களாம்.

லவோதிக்கேயா செல்வம் மிகுந்த வணிகஸ்தலமாகவும், மென்மையும் பளபளப்புமான கருமைநிற கம்பளங்களுக்கும் ஆடைகளுக்கும் பிரசித்திப்பெற்ற இடமாகவும் இருந்தது. இப்பகுதியில் இருந்த மருத்துவ பள்ளியில் தயாரிக்கப்பட்ட கண் நோய்களுக்கான சிறப்பு மருந்தும் பிரபலமானதாக இருந்ததாம். லவோத்திக்கேயா லிகஸ் ஆற்றின் கரையிலிருந்தாலும், தண்ணீர் தேவைகளுக்கு பிறப்பகுதிகளின் நீர்நிலைகளையே சார்ந்து இருந்தது. இதன் தென்கிழக்கே 16 கிலோ மீட்டர் தூரத்தில் கொலோசெ பட்டணத்தில் வற்றாத குளிர்ந்த நீரோடைகள் இருந்தது. வடக்கே 10 கிலோ மீட்டர் தூரத்தில் எராப்போலியா (Hierapolis) என்ற இடத்தில் சரீரத்திற்கு இதமளிக்கும் சுகமளிக்கும் சூடான நீருற்றுகள் இருந்தன. லவோதிக்கேயாவில் குளிர்ச்சியான தண்ணீரும் சூடான நீருற்றுகளும் இல்லாத நிலையில் அது, பூமிக்கு அடியில் புதைக்கப்பட்ட குழாய்கள் மூலம் கொண்டுவரப்பட்ட நீரையே சார்ந்திருந்தது. அந்த நீர் விரும்பி குடிப்பதற்கு ஏற்றதல்லாமல் இருந்தது.

## ஆமென் என்பவரின் உண்மையும் சத்தியமுமான சாட்சி

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து லவோதிக்கேயா சபைக்குத் தம்மை; உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய

சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது (வெளி. 3:14) என்று அறிமுகப்படுத்துகிறார். ஆமென் என்கிற எபிரெய வார்த்தை. மெய்யாகவே என்றும் சத்தியம் உண்மை என்றும் பொருள்பட வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. இது இயேசுகிறிஸ்துவினால் லவோதிக்கேயா சபைக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகளின் நிச்சயத்தையும், அந்த வசனங்கள் அப்படியே நிறைவேற இருப்பதையும் வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரி. 1:20) என பவுல் எழுதியிருக்கிறார்.

ஆமென் என்ற பெயரைத் தொடர்ந்து, உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி என்பதும், அவருடைய வார்த்தையிலுள்ள நம்பகத்தன்மையையும் நிச்சயத்தையும் உறுதிச்செய்கிறது. அதாவது, கடிதத்தில் எழுதப்பட்டிருந்த சபையின் ஆவிக்குரிய நிலையின் நிச்சயத்தையும், ஆமென் என்பவர் அருளின வாக்குத்தத்தங்களின் உறுதியையும் நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்துகிறது. இயேசுவால் சொல்லப்பட்ட யாவும் சத்தியம் என்றும், எச்சரிப்புகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மனந்திரும்பாத பட்சத்தில், நிச்சயமாகவே நடந்தேறும் என்றும் உறுதியாக வெளிப்படுத்தப்படுகிறது.

தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர் என்பது, இயேசுகிறிஸ்துவே சிருஷ்டிப்பிற்கு காரணமானவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. அந்நாட்களில் லவோதிக்கேயா மற்றும் கொலோசெ பகுதிகளில் இயேசுவின் தெய்வீகத்தைப் பற்றி எழும்பின கேள்விகள் மற்றும் பொய்யான தகவல்கள் நிமித்தம் இயேசு இவ்விதமாகத் தன்னை வெளிப்படுத்தியிருக்கலாம். இதையே அப்போஸ்தலனாகிய பவுல்: இயேசுகிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்றும்; சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது; அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்; எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது; அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் (கொலோசெயர் 1:15-18) என்றும் எழுதியிருக்கிறார்.

## நீ குளிருமல்ல அனலுமல்ல!

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திப்பண்ணிப்போடுவேன் (வெளி 3:15,16) என்று கர்த்தர் சொல்லுகிறார். லவோதிக்கேயாவிற்கு புறம்பேயிருந்து

குழாய்களில் கொண்டுவரப்பட்ட நீர், குளிருமின்றி அனலுமின்றி குடிப்பதற்கு ஏற்ற நிலையில் இல்லாமலிருந்தது. அவர்கள் நன்றாக அறிந்திருந்த சத்தியத்தை உண்மை நிலையைக்கொண்டு, இங்கு இயேசு அவர்களின் ஆவிக்குரிய நிலையை ஒப்பிட்டு எச்சரிக்கிறார்.

குளிர் என்பது இயேசுவை முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத வாழ்வையும்; அனல், ஆவிக்குரிய வாழ்வில் உயிர்ப்பிக்கப்பட்டு அக்கினியாக ஆர்வத்துடன் செயல்படும் வாழ்வையும் வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவை அறிந்து, அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு அவரில் நிலைத்திருந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அனலாயிருப்பவர்களை நாம் அறிவோம். ஆவியிலே அனலாயிருங்கள் (ரோமர் 12:11) என்றும்; ஆவியை அவித்துப்போடாதிருங்கள் (1 தெச. 5:19) என்றும் பவுல் குறிப்பிடுகிறார். மறுபுறம், இயேசுவை அறிந்தும் அவரைத் தங்கள் இரட்சகராக மீட்பராக தெய்வமாக ஏற்றுக் கொள்ளாதோரும் அநேகர் உண்டு. மற்றுமொரு பிரிவினர், இயேசுவை அறிந்தும், பெயரளவில் அவரை தெய்வமாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், சபையின் பாரம்பரியத்திற்கும், வீண் பெருமைக்கும், சடங்குகளுக்கும் சம்பிரதாயத்திற்கும், கேளிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, தாங்கள் முற்றிலும் வஞ்சிக்கப்பட்டு மற்றவர்களையும் ஏமாற்றிக்கொண்டிருக்கும் மாய்மாலக்காரர்களே.

இவர்களைக்குறித்து இயேசு: பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: ...உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத்தேயு 7:21-23) என்றார். இப்படிப்பட்டவர்களைக்குறித்து பவுல்: தேவபக்தியின் வேஷத்தைத்தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள் (2 தீமோ. 3:5) என்று எழுதியிருக்கிறார். இவர்களின் செய்கைகள், இயேசு வெறுத்துத் தள்ளும்படியாக, வாந்திப்பண்ணிப்போடும்படியாக இருந்து இயேசுவை வேதனையடையச் செய்கிறது.

கிறிஸ்தவர்கள் என்று பெயரளவில் தங்களை உலகுக்கு வெளிப்படுத்தி, மாய்மாலமான பொய்யான வாழ்விற்குட்பட்டவர்களே, கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்வதற்கு மிகவும் கடினமான ஜனக்கூட்டமாயிருக்கிறார்கள். இந்நாட்களில் அநேக சபைகள் லவோதிக்கேயா

சபையின் தன்மைகளோடேயே இருப்பதாக தேவமனிதர்கள் குறிப்பிடுகிறார்கள். இப்படி குளிருமின்றி அனலுமின்றி வெது வெதுப்பாயிருக்கிறவர்களைக் கர்த்தர் வாந்தி பண்ணிப்போடுவேன் என எச்சரிக்கிறார்.

இந்தக் கடைசி நாட்களில், உண்மையும் பரிசுத்தமுமுள்ள விசுவாசிகளின் கூட்டம் சபையாக மறுரூபப்பட்டு இயேசுவோடு இருக்கும்படியாக சீக்கிரமாய் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. கிறிஸ்தவர் என்றும் விசுவாசிகள் என்றும் சொல்லிக்கொண்டு, லவோதிக்கேயா சபையைப் போன்று குளிருமின்றி அனலுமின்றி உள்ள கூட்டத்தினர், கர்த்தரால் வாந்திப்பண்ணப்பட்டு பூமியிலே கைவிடப்பட்டு, நியமிக்கப்பட்டிருக்கிற உபத்திரவத்தின் காலங்களுக்கு உட்படுவார்கள்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இனி காலம் செல்லாது. இம்மட்டும் பாவமன்னிப்பின் நிச்சயமின்றி ஆத்தும இரட்சிப்பு பூரணப்படாமல், நித்திய ராஜ்யத்தின் உறுதியற்று இருப்பாயேயானால், இன்றே மனந்திரும்பி இயேசுவை நோக்கிப்பார்த்து பரிசுத்தமடைய உன்னை ஒப்புக்கொடுப்பாயா? உணர்வடைந்து அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் இரட்சிப்பார், ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

## நீ நிர்ப்பாக்கியமுள்ளவன் பரிதபிக்கப்படத்தக்கவன்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பிரதானமான நோக்கம், இழந்துபோனவர்களை, இயேசுவின் அன்பை உணராது தவித்து நிற்போரை, தேடி இரட்சிப்பதேயாகும் (லூக்கா 19:10). நிர்ப்பாக்கியமுள்ளவரும் பரிதபிக்கப்படத்தக்கவருமாக இருந்த லவோதிக்கேயா சபையினரையும் கர்த்தர் நேசித்தபடியால், அவர்கள் கர்த்தரிடத்தில் இரக்கம் பெற்று, மறுபடியுமாக கிறிஸ்துவுக்குள் கட்டப்பட நிலைவரப்பட ஆலோசனைப்பெற்றார்கள்.

தனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், தான் ஐசுவரியவானென்றும் திரவியசம்பன்னனென்றும் (வெளி 3:17) மனமேட்டிமையோடும் ஆணவத்தோடும் செயல்பட்ட லவோதிக்கேயா சபையினரின் ஆவிக்குரிய வாழ்வு, அஸ்தமித்த நிலையிலேயே காணப்பட்டது. தான் தரித்திரன் நிர்வாணி குருடன் என்ற அவலநிலையை உணராத சபைக்குக் கர்த்தர் தம்முடைய அளவற்ற அன்பினாலும் இரக்கத்தினாலும் அவர்களை மீட்டெடுக்க, மறுபடியும் கட்டப்பட ஆலோசனை சொல்லுகிறார்.

தரித்திரன் வறுமை நீங்கி வாழ்வு வளம் பெற, ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை

வாங்கிக்கொள்ளும்படி இயேசு சொன்னார். உலகத்தின் ஐசுவரியமும் மேன்மைகளும் நிறைவாக இருந்தாலும், கர்த்தரோடுள்ள உறவும், அவர் அருளும் வார்த்தைகளும், அதனால் வரும் இரட்சிப்பும் இல்லாத பட்சத்தில், நம்முடைய வாழ்வு பரிதபிக்கப்படத்தக்கதே. கர்த்தருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோசெயர் 2:3). கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார் (சங்கீதம் 18:30). அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது (சங்கீதம் 19:10). மேலும் பணமுமின்றி விலையுமின்றி வந்து வாங்கிச் சாப்பிடுங்கள் என்று (ஏசாயா 55:1) கர்த்தர் சொல்லுகிறார்.

அடுத்து, உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு, நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக்கொள் (வெளி 3:18) என்று கர்த்தர் ஆலோசனை சொல்லுகிறார். வெண்வஸ்திரம் என்பது ஆவிக்குரிய வாழ்வில் பிரித்தெடுக்கப்பட்ட நிலையையும், பரிசுத்தத்தையும் நீதியையும் குறிக்கிறது. வெண்வஸ்திரம் இரட்சிப்பின் வஸ்திரம்; அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் (ஏசாயா 61:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் குருடராய் உள்ளவர்கள் பார்வையடையும்படிக்கு, கண்களுக்கு கலிக்கம் போடவேண்டுமென்றார். தேவன் உங்களுக்குப் பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன். (எபேசியர் 1:19) என்று பவுல் எழுதியிருக்கிறார். இது கர்த்தர் நமக்கருளும் ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைக் குறிப்பதாக உள்ளது .

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, லவோதிக்கேயரின் ஐசுவரியமும் மேன்மையும், அவர்களின் ஆவிக்குரிய தரித்திரத்தை நீக்கவில்லை; சிறந்த கம்பள ஆடைகள் நிர்வாணத்தை மறைக்கவில்லை; தலைசிறந்த கண்மருத்துவ கிசிச்சை இருதய குருட்டாட்டங்களை நீக்கவில்லை. ஆகையால் கர்த்தருடைய ஆலோசனையின்படி நம்முடைய தரித்திரம் நீங்கும்படி, நெருப்பிலே புடமிட்ட பொன்னாக, கர்த்தருடைய வார்த்தைகளையும் விலையேறப்பட்ட விசுவாசத்தையும் (1 பேதுரு 1:7), ஞானம் அறிவு போன்ற பொக்கிஷங்கள் எல்லாவற்றையும் அவரிடத்தில் விலையுமின்றி வாங்கிக் கொள்ள அழைக்கப்படுகிறோம். நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு உடுத்திக்கொள்ள இரட்சிப்பை, இரட்சிப்பின் ஆடையைப்பெற்றுக் கொள்ளவும்; கண்கள் தெளிவடைந்து பார்வையடையும் படிக்கு, கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டு சாட்சியாக வாழவும், கர்த்தர் அழைக்கிறார்.

## நேசிக்கிறவர்களுக்கு சிட்சை

நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு (வெளி 3:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆலோசனைக்கும் வழிநடத்துதலுக்கும் செவிகொடாதவர்களையும், செவிகொடுத்தும் கீழ்படியாதவர்களையும் கர்த்தர் கடிந்து கொண்டு சிட்சிக்கிறார். தம்முடைய வார்த்தைக்குக் கீழ்படியாதவர்கள் வாழ்வில், கர்த்தர் அவர்கள் வாழ்வு சீரடைய ஆலோசனை அருளுகிறார்; கடிந்துரைக்கிறார்; தண்டனைகளைக் கூட அனுமதிக்கிறார். தேவனுக்குப் பிரியமில்லாதவற்றைச் செய்ய முற்படும் போதும், செய்யும் போதும், கர்த்தர் தாமே நம்முடைய வாழ்வில் இடைபட்டு, நம்முடைய ஆத்துமாவை அழிவுக்கு விலக்கி மீட்க நடப்பிக்கும் செயல்களே சிட்சை எனலாம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் (I கொரி 11:32).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, லவோதிக்கேயா சபை வாந்திப்பண்ணிப்போடும் நிலையில் இருந்தாலும், கர்த்தர் அவர்களை நேசித்தார்; அதினிமித்தமே சபையைக் கடிந்து கொண்டு சிட்சித்தார். இதினிமித்தமே, கர்த்தர் கடிந்து கொள்ளும் போது சோர்ந்து போகாதே; தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் (நீதி 3:11,12) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## ஜெயங்கொள்ளுகிறவனுக்கு சிங்காசனம்

கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டு அர்ப்பணித்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பி செயல்படுபவனே ஜெயங்கொள்ளுகிறவன். கர்த்தருடைய அழைப்பின் சத்தத்திற்கு செவிகொடுத்து, இயேசுவை வாழ்வில் ஏற்றுக் கொள்ளும் போது, பாதிக்கப்பட்ட உறவின் நிலை சீரடைகிறது. ஜெயங்கொள்ளுகிறவன் இயேசுகிறிஸ்துவின் சிங்காசனத்தில் அவரோகூட உட்காரும்படிக்கு, இயேசு அருள்செய்வேன் என வாக்கருளியிருக்கிறார். இந்த வாக்குறுதி, இயேசுவோடு சிங்காசனத்தில் உட்காரும் சிலாக்கியம், லவோதிக்கேயா சபைக்கு சிறந்த வெகுமதியாக அருளப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, வாசற்படியில் நிற்கும் இயேசுவின் சத்தம், மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ள

விடுக்கப்படும் இந்த அழைப்பு, இயேசுவோடு ஐக்கியப்பட உறவுக்கொள்ள கொடுக்கப்படும் இந்த வாய்ப்பு, ஒரு வேளை நம் வாழ்வில் அருளப்படும் கடைசி அழைப்பாகவும், வாய்ப்பாகவும் இருக்கலாம். ஆதலால் அழைப்பை ஏற்று, ஆலோசனைக்குச் செவிகொடுத்து, மனந்திரும்பி வார்த்தைக்குக் கீழ்படிந்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44) என்று கர்த்தர் எச்சரிக்கிறார். இவ்வேளையில் இயேசுவின் சத்தம்கேட்டு அர்ப்பணிக்கும் உங்களுக்கும் எனக்கும் கூட, இதே கிருபை அருளப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சிங்காசனத்தில் இயேசுவோடுக் கூட அமர்ந்திருந்தது. நித்திய நித்திய காலமாக அவரோடே ஆளுகை செய்வோம். அல்லேலூயா. ஆமென்!

*சமாதானத்தின் தேவன் தாமே*
*உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக.*
*உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும்,*
*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது*
*குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*
*உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்,*
*அவர் அப்படியே செய்வார்.*
*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய*
*கிருபை உங்களுடனே கூட இருப்பதாக.*
*ஆமென்*

*(1 தெசலோனிக்கேயர் 5:23,24,28).*

# ௯. நீங்கள் நினையாத நாழிகையில் இயேசு!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் நம்மைப்போலொத்த மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், தம்முடைய சீஷருடனே எருசலேம் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின்மேல் உட்கார்ந்திருந்தார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும், அப்பொழுது தனித்து வந்து: உம்முடைய (இயேசுவின்) வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்கு தம்முடைய வருகையைக் குறித்து விளக்கமாகவும், பரலோக ராஜ்யத்தைக்குறித்து உவமைகள் மூலமாகவும் தெரிவித்தார்.

ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று அறியாதிருக்கிற படியினால் விழித்திருங்கள் என்றும், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றும் தம்முடைய சீஷர்களுக்கு இயேசு சொன்னார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன் என்ற இயேசு, இந்த கடைசி நாட்களில், வாசற்படியிலே நின்று தட்டுகிறார்; மிகவும் சீக்கிரமாய் வரவிருக்கிறார். மேலும், இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டமாகிய சபையை, உலகமெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்கு தப்பும்படி காப்பேன் என்று இயேசு வாக்கருளியிருக்கிறார்.

மீட்கப்பட்ட ஜனமாகிய சபை மறுரூபமடைந்து மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனேக்கூட இருக்க நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நிறைவடைந்து இரட்சிப்பின் நற்பலனை அடைய, பின்மாரியைப் போன்று பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும் கடைசி காலங்களில் நாம் இருக்கிறோம் என்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்.

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுதியிருக்கிறபடி, சபைகளுக்கு கர்த்தர் தந்தருளின ஆலோசனைகளையும் எச்சரிப்புகளையும் கேட்டறிந்து செயல்பட அழைக்கப்படுகிறோம். மேலும், வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் தரிசன வார்த்தைகள் அங்கும் இங்கும் பரவலாக நிறைவேறுகிறதைக் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறிகிறோம். அல்லேலூயா!

# நீங்களும் ஆயத்தமாயிருங்கள்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்ததான இயேசுவின் உபதேசங்கள், வேதாகமத்தில் மத்தேயு 24 மற்றும் 25ஆம் அதிகாரங்களிலும், மாற்கு 13ஆம் அதிகாரத்திலும், லூக்கா 21ஆம் அதிகாரத்திலும் தொகுத்து எழுதப்பட்டிருக்கிறது. தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய நாமும் வஞ்சிக்கப்படாமல் இயேசுவின் வருகையை எதிர்நோக்கி ஆயத்தத்துடன் விழித்திருக்க வேண்டும் என்பதே, இந்த வேதப்பகுதிகளில் இயேசு நமக்கு வெளிப்படுத்தும் எச்சரிப்பின் செய்தியாகும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு உபதேசிக்கையில் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:4,24). உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44) என்றார்.

நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்கிற வார்த்தைகள், அந்நாட்களில் குறிப்பாக சீஷர்களுக்கும், இந்நாட்களில் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் சபைத் தலைவர்களுக்கும் இதை வாசிக்கிற நமக்கும் எச்சரிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எச்சரிப்பு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் வருகை தாமதிப்பதினால், எச்சரிப்பின் உண்மையை உணராது நிர்விசாரமாக செயல்படுவோருக்கு, பேதுரு அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிவைத்திருப்பதை வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில் கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுயஇச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? என்று சொல்லுவார்கள். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:3,4,9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## மணவாளன் வருகிறார்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாக அவரை ஏற்றுக்கொண்டு தங்கள் பாவங்கள் மன்னிக்கபட்டு, இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிப்பையும் மீட்பையுமடைந்த தேவஜனத்தின் எண்ணம் ஏக்கம் எதிர்பார்ப்புகள் யாவும், நித்திய ஜீவனை அடைகிறதையும் பரலோக ராஜ்யத்தையும் சார்ந்தே இருக்கிறதை நாம் அறிவோம். பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வதற்கு ஆயத்தத்துடன் விழித்திருக்க வேண்டியதன் அவசியத்தை இயேசு ஒரு உவமையின் மூலம் தம்முடைய சீஷர்களுக்கு விளக்கினார்.

பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப்புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் என்று இயேசு சொன்னார். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள்; தங்கள் தீவட்டிகளுடன் அவர்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள். மணவாளன் வரத்தாமதித்தபோது அவர்கள் பத்துபேரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே இதோ மணவாளன் வருகிறார்; அவருக்கு எதிர்கொண்டுபோகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. புத்தியில்லாத ஐந்து பேரின் தீவட்டிகள் அணைந்து போகிறதினால், விற்கிறவர்களிடத்தில் எண்ணெய் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. இதைப்போன்றே, மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (மத்தேயு 25:13) என்றார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்மில் அநேகர் ஆவலோடு எதிர்நோக்கி காத்திருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையுங்கூட இவ்விதமாகவே இருக்குமாம். மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவின் வருகை தாமதிக்கும்போது, அதைக்குறித்து நினையாது இருக்கும் நாட்களில், வேளையில், இயேசு வரவிருக்கிறார். ஆயத்தமாயிருக்கிறவர்கள் மட்டுமே அவரோடேகூட எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

இயேசுகிறிஸ்துவினால் முன்னுரைக்கப்பட்டு, பேதுருவினால் தெளிவுப்படுத்தப்பட்ட எச்சரிப்பை நாம் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் வருகையில், கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் நாம் சமாதானத்தோடே அவர் சன்னிதானத்தில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருப்போம்; ஆயத்தமாய் விழித்திருப்போம்! அல்லேலூயா!

## வாசற்படியில் நின்று தட்டும் இயேசு

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம் பெற்றுள்ள கடிதங்கள், அந்நாட்களில் ரோமசாம்ராஜ்யத்தின் ஆசியப்பகுதியிலிருந்த ஏழு சபைகளுக்கு இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்ட வார்த்தைகளின் தொகுப்பு என்பதை நாம் அறிவோம். இயேசுகிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் காலங்களைக் கடந்து, மீட்கப்பட்ட தேவஜனம் தங்களுடைய வாழ்வை இந்நாட்களிலும் இவ்வார்த்தைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து சீர்படுத்திக்கொள்ள உதவுகிறது. ஆதித்திருச்சபையின் நாட்கள் துவங்கி இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலான காலத்தை, கிருபையின் நாட்கள் என்றும் சபையின் காலம் என்றும் குறிப்பிடுகிறார்கள். மற்றொரு பரிமாணத்தில், இந்த சபையின் காலம், சபை சரித்திரத்தின் ஏழு காலக்கட்டங்களாக, ஏழு சபைகளின் தன்மைகளையும் ஆவிக்குரிய நிலைகளையும் அதே வரிசையில் ஒத்திருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தப் பரிமாணத்தின் அடித்தளமாக, முதலாம் நூற்றாண்டில் பெந்தெகொஸ்தே நாளில் துவங்கிய ஆதித்திருச்சபையின் கிரியைகளும் தன்மைகளும் ஆவிக்குரிய முதிர்ச்சியும் அமைந்துள்ளது. விசுவாசிகளெல்லாரும் அப்போஸ்தல உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத்துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42,46,47).

## ஏழு சபையின் காலங்கள்

ஆதித்திருச்சபையின் காலத்தைத் தொடர்ந்து கி.பி.170-ஆம் ஆண்டுவரையிலான நாட்களை, எபேசு சபையின் அன்பு தணிந்த காலமாக குறிப்பிடுகிறார்கள். இந்நாட்களில் ஆதிஅப்போஸ்தலர் ஐக்கியமும் அந்நியோந்நியமும் அன்பும் சபையில் குறைவுபட துவங்கியது. இதையடுத்து, மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரை பத்து ரோமப் பேரரசர்களின் ஆட்சி காலங்களில் சபை ஒடுக்கப்பட்டது; கிறிஸ்தவர்கள் பாடுகளுக்குட்படுத்தப்பட்டார்கள். இந்த நாட்கள் (கி.பி.170-312) துன்புறுத்தப்பட்ட சிமிர்னா சபையின் காலம் என குறிப்பிடப்படுகிறது.

இதற்கு பின்னர் கான்ஸ்டன்டைன் என்ற ரோமப்பேரரசன் (கி.பி.306-337) கிறிஸ்தவத்தைத் தழுவி, கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவதை தடுத்து

நிறுத்தினார். ரோமசாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவம் முதன்மைப்படுத்தப்பட்டது. அதே காலத்தில், அந்த ராஜ்யத்தின் பிறவழிபாட்டுமுறைகளும், பண்டிகை நாட்களும், சடங்காச்சாரங்களும் சம்பிரதாயங்களும் சபைக்குள் புகுந்து மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்த காலம் (கி.பி.312-606) கிறிஸ்தவ வாழ்வு முறையின் நற்பண்புகளை கடைபிடிப்பதில் உறுதியற்ற பெர்கமு சபையின் காலம் என்று அழைக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து கி.பி.606 முதல் 1520 ஆண்டுவரையிலான நீண்ட காலத்தை சபையின் இருண்ட காலம் எனவும் சாத்தானின் ஆழங்கள் - 1000 வருடங்கள் என்றும் குறிப்படுகிறார்கள். இது ஒழுக்கநெறிகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற தியத்தீரா சபையின் காலம் என அறியப்பட்டிருக்கிறது. சபையில் பாவம் பெருகி, சபை கள்ளப்போதகத்தைச் சகித்துக்கொண்டு, ஒழுக்கக்கேட்டிற்கும் விக்கிரக வழிபாட்டிற்கும் வழிவிலகிச் சென்றது. தியத்தீரா சபைக்காலத்தில் மதத்தலைவர் தன்னை மிகவும் உயர்த்திக்கொண்டு அரசர்களுக்கும். அரசாங்கங்களுக்கும் மேலாக ஆளுகைச் செலுத்தினார். இந்த காலத்தின் பிந்தைய நாட்களில், சபைகளில் சீர்த்திருத்தங்கள் வெளிப்படத் துவங்கியது.

கி.பி. 1520 முதல் 1750-ஆம் ஆண்டு வரையிலான நாட்களை சர்தை சபையின் காலம் என்கிறார்கள். சர்தை, செத்த சபை என பெயர் பெற்றிருந்தாலும், தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையில் இருந்தார்கள். வேதாகமத்தை அடித்தளமாகக் கொண்டு, விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்ற வாக்கைச் சார்ந்து செயல்பட்ட மார்ட்டின் லூத்தர் போன்ற சீர்திருத்தவாதிகள் தோன்றி சபையில் இருளின் கிரியைகளுக்கு எதிர்த்து நின்று, சபை சரித்திரத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியதால், இந்நாட்கள் சீர்திருத்த காலம் என அழைக்கப்படுகிறது.

கி.பி.1750 முதல் 1906 வரையிலான நாட்கள், மறுமலர்ச்சியின் காலம் என்றும் உண்மையுள்ள பிலதெல்பியா சபையின் காலம் எனவும் அறியப்பட்டிருக்கிறது. மெதடிஸ்ட் நற்செய்தி இயக்கத்தின் மூலம் சபைகளில் மறுமலர்ச்சி உண்டாக்கிய ஜான் வெஸ்லி துவங்கி, பின்னர் பெந்தெகொஸ்தே இயக்கத்தின் எழுப்புதல் அக்கினியும் இக்காலத்தில் சபைகளைப் பற்றிப்பிடித்தது.

கி.பி.1906-ஆம் ஆண்டிலிருந்து இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலான நாட்களை பெருமையும் அகங்காரமும் கொண்ட லவோதிக்கேயா சபையின் காலம் என குறிப்பிடுகிறார்கள். இந்த சபையின் ஆவிக்குரிய நிலை, பரவலாக இக்கால சபைகளின் தன்மைகளோடு பொருந்துவதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

# கர்த்தரின் வருகை மிக சமீபமாக இருக்கிறது

சபை சரித்திர காலங்களைப்பற்றிய இந்த நீண்ட விளக்கங்களின் பிரதான நோக்கம் முதலாவதாக நாம் சபைகளின் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை எடுத்துரைப்பதாகும்; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அதிசீக்கிரமாய் வரவிருக்கிறார். அடுத்து, சபைகளுக்கான இந்தக்கடிதங்களில், இருண்ட காலம் என்று வருணிக்கப்படுகிற தியத்தீரா சபைக் காலத்தையடுத்துள்ள மூன்று சபைகளின் கடிதங்களிலும் இயேசுகிறிஸ்து தம்முடைய வருகையைப்பற்றி தெளிவாக எடுத்துரைத்து எச்சரிக்கிறதைப் பார்க்கிறோம்.

இவற்றில் முதலாவதாக, சர்தை சபைக்கு எழுதினபோது: நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை நீ அறியாதிருப்பாய் (வெளி 3:3) என்றார். அடுத்து பிலதெல்பியா சபைக்கு எழுதினபோது: இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு (வெளி3:11) என்றார். நிறைவாக, லவோதிக்கேயா சபைக்கு எழுதினபோது; இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் (வெளி 3:20) என்றார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நாம் வாழும் இந்தக் கடைசி நாட்கள், பிலதெல்பியா சபையின் தன்மைகள் குறைவுபட்டு, லவோதிக்கேயா சபையின் தன்மைகள் பரலவாக தோன்றி வெளிப்படும் நாட்களாக இருக்கிறது. நீ விழித்திராவிட்டால் திருடனைப்போல் உன்மேல் வருவேன் என்ற எச்சரிப்பு இயேசுகிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டு (மத்தேயு 24:42,43) வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பின்னர், இது சர்தை சபைக்கு எச்சரிப்பாகவும், சபை சரித்திரத்தில் சீர்திருத்த சபை காலத்தில் அதன் எதிரொலியாகவும் வெளிப்பட்டது.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன் என்ற வார்த்தைகள், பிலதெல்பியா சபையை உற்சாகப்படுத்தி தனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிருக்க எழுதப்பட்டது. இதுவே, சபை சரித்திரத்தில் மறுமலர்ச்சி சபையின் காலத்தின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் என்ற வார்த்தைகள் லவோதிக்கேயா சபைக்கு கடைசி எச்சரிப்பின் சத்தமாகவும், சபை சரித்திரத்தின் கடைசி காலக்கட்டத்தில் வசிக்கும் நமக்கு, மனந்திரும்பி பரிசுத்தமாய் வாழ தந்தருளப்படும் இறுதிவாய்ப்பாகவும் எச்சரிப்பாயும் இருக்கிறது.

இதிலே ஞானம் விளங்கும்; புத்தியுடையவன் ஆராய்ந்தறியக்கடவன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆம், பிரியமானவர்களே, கர்த்தரின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. நியாயாதிபதி வாசற்படியிலே நிற்கிறார். அல்லேலூயா!

## சோதனை காலத்திற்குத் தப்புவிப்பார்

வாசற்படியிலே நின்றுதட்டும் இயேசுகிறிஸ்துவின் சத்தம் கேட்டு, தங்கள் வாழ்வைச் சீர்படுத்தி இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கும் தேவஜனத்தைக் கர்த்தர் பூமியெங்கும் வரவிருக்கும் சோதனை காலத்திற்குத் தப்புவித்து காப்பார் என்று எழுதப்பட்டிருக்கிறது. என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்ட படியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வெளி 3:10) என்று கர்த்தர் பிலதெல்பியா சபைக்கு வாக்கருளியிருக்கிறார். சோதனை காலம் என்பது கர்த்தர் எச்சரிக்கும் மிகுந்த உபத்திரவத்தின் காலம் ஆகும். உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

இந்த உபத்திரவத்தின் நாட்களுக்கு முன்னர், இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டமாகிய சபை மறுரூபப்பட்டு இயேசுவோடிருக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்படும். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெச. 4:16,17). இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபப்படுவோம் (1கொரி. 15:51) என்றும் பவுல் எழுதியிருக்கிறார்.

சபை மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, சபையின் காலம் முடிவுக்கு வரும்; தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் நாட்களும் நிறைவு பெறும். அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும், தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான் (2 தெச.2:7,8). இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் அந்திக்கிறிஸ்துவை அக்கிரமக்காரன் என்றும், பரிசுத்த ஆவியானவரை, அக்கிரமக்காரனை தடைசெய்கிறவராகவும் குறிப்பிடுகிறதாக வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்.

# காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்

பிள்ளைகளே! இது கடைசிகாலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம் (1 யோவான் 2:18) என்று எழுதப்பட்டிருக்கிறது. கிருபையின் நாட்களின் சிறப்பு, இந்நாட்களில் அந்திக்கிறிஸ்துகள் தேவ ஜனத்திற்கும் அவர்களின் சாட்சியின் வாழ்வுக்கும் விரோதமாக எழும்பாதபடிக்கு பரிசுத்த ஆவியானவர் தடைசெய்கிறார். சத்துரு வரும்போது, வெள்ளம்போல் கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். அல்லேலூயா!

சபையின் காலத்தில் கிருபையின் நாட்களில், பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார், ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். சபை மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் நாட்கள் நிறைவுபெறும். அப்பொழுது பூமியெங்கும் உபத்திரவத்தின் காலம் உண்டாயிருக்கும். கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாயுள்ளவர்கள் சபை மறுரூபமடைந்து இயேசுவோடு எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

உயிரோடிருந்து அஜாக்கிரதையாய் இந்தத் தருணத்தை நழுவவிட்டவர்கள், கைவிடப்பட்டு மிகுந்த உபத்திரவத்தின் நாட்களுக்குள்ளாகவும், அந்திக்கிறிஸ்துவின் வஞ்சகங்களுக்கும் உட்படுவார்களாம். அந்நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையின்றி, கிறிஸ்துவுக்குள்ளான அவர்களுடைய சாட்சியைக் காத்துக்கொண்டு முடிவுபரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருந்து இரட்சிக்கப்படுவது மிகவும் கடினமாக இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இதனிமித்தம் கிருபையின் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம். கிருபையாய் நமக்கருளப்பட்டிருக்கிற இந்த நாட்களில், வாசற்படியிலே நின்றுதட்டும் இயேசுவின் சத்தம்கேட்டு, இன்றே நம்மை பரிசுத்தத்திற்கும் உண்மைக்கும் அர்ப்பணிப்போம். மிகவும் சமீபமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு நாமுங்கூட விழித்திருந்து ஆயத்தமாயிருப்போம். அல்லேலூயா!

# பின்மாரியின் காலம்

வேதாகமத்தில் பின்மாரி என்ற சொல், ஏற்றகாலத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் தரவிருக்கும் ஆசீர்வாதங்களோடும், கர்த்தரின் வருகைக்கு முன்னர் யாவர்மேலும் ஊற்றப்படவிருக்கும் கர்த்தருடைய ஆவியோடும் இணைத்து குறிப்பிடப்படுகிறது. இப்படியிருக்க சகோதரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே (யாக்கோபு 5:7,8) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பயிரிடுகிறவனைப் போன்றே, கர்த்தரின் வருகைக்கு காத்திருக்கிற தேவஜனமும், விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும் நீடிய பொறுமையோடு நிலைத்திருக்க அழைக்கப்படுகிறார்கள். முன்மாரி பெந்தெகொஸ்தே நாளில் தந்தருளப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், பின்மாரி கர்த்தரின் வருகைக்கு முன்னர் மாம்சமான யாவர் மீதும் ஊற்றப்படவிருக்கும் கர்த்தருடைய ஆவியையும் குறிக்கிறது. அவர் வந்து, பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

வேதாகமத்தில் கர்த்தர் : நீ உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்ற காலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருக ஜீவன்களுக்காக உன்வெளியிலே புல் முளைக்கும்படி செய்வேன்; நீ சாப்பிட்டு திருப்தியடைவாய் என்கிறார் (உபாகமம் 11:14, 15). மேலும் : தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களி கூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் ... அவர் தக்கப்படி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார். களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும் (யோவேல் 2:21-24) என்றும் பின்மாரிக்காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள் (சகரியா 10:1) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வசனங்களை யாக்கோபு 5:7,8 வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, களங்கள் தானியத்தால் நிரம்ப, ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோட, பின்மாரி அவசியமாக இருக்கிறது. இதைப் போன்றே, கர்த்தருடைய வருகைக்கு முன்னர், மீட்கப்பட்டோரின்

எண்ணிக்கை நிறைவு பெற, கர்த்தர் மாம்சமான யாவர் மீதும் கர்த்தருடைய ஆவியை ஊற்றவிருக்கிறார். அல்லேலூயா!

## களங்கள் தானியத்தால் நிரம்பும்

அரசு பணியில் உயர் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர், தன் ஓய்வு நேரங்களிலும் விடுமுறைகளிலும் இயேசுவின் அன்பை, விரும்பி அழைத்தவர்களுக்கு அறிவித்து வந்தார். இதை அந்த அதிகாரி தவிர்க்கும்படியாகவும் விளக்கங்கோரியும் அரசு ஆணைப் பிறப்பித்தது. இச்செய்தி தொலைக்காட்சியிலும் ஊடகங்களிலும் செய்திதாள்களிலும் பிரசுரிக்கப்பட்டு, விவாத மேடைகளிலும் அலசி விவாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, இயேசுவை அறியாத பல லட்சம் மக்கள், இயேசுவின் அன்பையும் ஆற்றலையும் ஒரே நாளில் அறிந்துக் கொண்டார்கள்.

தான் இயேசுவை அறியாத நிலையிலும், தன்னுடைய வாழ்வின் நெருக்கத்தில், இயேசு தன்னைத் தேடிவந்து விடுவித்ததை தெளிவாக அந்த அதிகாரி எடுத்துரைத்தார். முன்பு இயேசுவை அறியாத, நன்கு படித்து உயர் பதவி வகிக்கும் இவரது சாட்சி, வேதனையில் செய்வதறியாது கலங்கி நிற்கும் அநேகரை சிந்திக்க வைத்துள்ளது; வாழ்வில் நெருக்கங்களில் சிக்கி தவிக்கும் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டு விடுவிக்கப்பட வகை செய்கிறது. அல்லேலூயா!

இதைப் போலொத்த ஆவியானவரின் கிரியைகளை, பல வருடங்களுக்கு முன்னர், தேவமனிதர் ஒருவர் பகிர்ந்துக் கொண்டார். வடமாநில பணித்தளம் ஒன்றிற்கு அவர் சென்றபோது, மலைமேல் இருந்த ஒரு கிராமத்திற்கு அவரை அழைத்துச் சென்றனராம். அந்த கிராமத்தில் அனைவரும் கிறிஸ்தவர்களாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவர்களைக் கேட்ட போது, கர்த்தர் செய்த பலத்த கிரியைகளை அவர்கள் விவரித்துச் சொன்னார்களாம். அங்கு ஊழியர் ஒருவர் மனைவி மகனுடன் ஊழியம் செய்து வந்தார். திடீரென விஷக்காய்ச்சால் பாதிக்கப்பட்டு ஊழியரும் மகனும் மரித்துவிட்டார்கள். அவர்களுடைய உடல்களைக் கூட சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லாமல் அங்கேயே புதைத்து விட்டார்கள். இதன் பின்னர் கர்த்தர் ஒருநாள் இரவில் அந்த கிராமத்து மக்கள் அனைவருக்கும் தனித்தனியே சொப்பனத்தில் இடைபட்டு கர்த்தரே தெய்வம் என வெளிப்படுத்தினாராம். ஒரே நாளில் அந்த கிராமம் இயேசுவை ஏற்றுக் கொண்டது. அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இப்படிப்பட்ட கிராமம் பட்டணம் தேச அளவிலான பின்மாரியின் தாக்கங்கள் துரிதமாக வெளிப்படும் நாட்களுக்குள்ளாக நாம் இருக்கிறோம். களங்கள் தானியத்தால்

நிரம்புகிறது. இனி காலம் செல்லாது. இதைப் போலொத்த சம்பவங்கள் எத்தனை நடந்து கொண்டிருக்கிறதோ, நடைபெறவிருக்கிறதோ நாம் அறியோம். ஆனால், இவைகளையெல்லாம் காணும்போது, கேட்கும்போது, இயேசு சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என நாம் அறிவோம். அல்லேலூயா!

## சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள்

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியாக, யோவேல் தீர்க்கதரிசியின் வாக்குப்படி, கர்த்தர் மாம்சமான யாவர் மேலும், பின்மாரியாக தம்முடைய ஆவியை ஊற்றிக் கொண்டு இருக்கிறார். மேலும், உபத்திரவ காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங்களும்கூட முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களில் நடந்தேற செய்யப்படும் ஆயத்தங்களையும் நாம் இப்பொழுதே காணமுடிகிறது. நம்மைச் சுற்றிலும் நடைபெறும் நிகழ்வுகளை கவனித்தறிகிறது மட்டுமல்லாமல், அவைகளை பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆவியில் உணர்ந்து, ஜாக்கிரதையாய் விழிப்புடன் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

சபை மறுரூபப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, கைவிடப்பட்டோர், உபத்திரவத்தின் காலத்திற்குட்படுவர் என்பதை நாம் அறிவோம். இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது, நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், பெற்றுக் கொள்ளுகிறவர் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்யப்பட்டதாக (வெளி 13:16,17) எழுதப்பட்டிருக்கிறது.

முந்தின காலங்களில், இந்த வசனங்களை முழுமையாக விளங்கிக் கொள்ள தெளிவும் விவரங்களும் இல்லாதிருந்தது. ஆனால், இந்நாட்களில் தொழில்நுட்ப வளர்ச்சியும், வசதிகளும், தொகுக்கப்பட்ட தனிமனிதரைப் பற்றிய விவரங்களும், இந்த வசனங்களை இன்னும் சற்று தெளிவாக அறிந்துணர உதவுகிறது.

## உபத்திரவ கால முத்திரை

மனிதருடைய கைரேகைகள் தனித்தன்மை வாய்ந்தது. கைரேகையை வைத்து எந்த ஒரு மனிதனையும் அடையாளம் காணமுடியும். தேசத்தில் எல்லா மனிதருடைய கைரேகைப் போன்ற விவரங்களையும் பொதுவாக சேகரித்து வைத்து, தேவையானபோது ஒப்பிட்டுப் பார்த்து அடையாளங் காணும் தொழில்நுட்பமும் வசதிகளும்

இப்பொழுது பயன்பாட்டில் உள்ளது. நாட்டின் சில பகுதிகளில், ரேஷன் அட்டைகள் கூட, சிறு அட்டை வடிவத்தில் (Smart Card) சோதனைக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்பமும் வசதிகளும் இருந்த போதும், தேசத்தில் 121 கோடிக்கு மேலானவரின் விவரங்களை சேகரிப்பது சவாலாகவே இருந்தது.

2014-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஆதார் அடையாள அட்டைத் திட்டத்தை, தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவு செய்தது. இத்திட்டத்தை துரிதப்படுத்தி, 2015-நவம்பர் மாதத்திற்குள் நாட்டிலுள்ள அனைவருக்கும் ஆதார் அட்டை வழங்க முயற்சிகள் எடுக்கப்படுகிறது. நவம்பர் 2014ல், 70 கோடி மக்களுக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டிருந்தது. மார்ச் 2015 ல் இந்த எண்ணிக்கை 80 கோடியாக உயர்ந்துள்ளது.

சேகரிக்கப்பட்ட தனிமனிதரின் விவரங்களை, ஏமாற்றுவதற்கு வாய்ப்பின்றி பாதுகாக்க, வெளிநாடுகளில் இந்த விவரங்களை ஒரு அரிசி மணி அளவிலான நுண்ணிய மின்பொறியில் பதிவு செய்து, மனிதரின் வலது கையிலோ அல்லது நெற்றியிலோ பதிக்கும்பணி அங்கு சில நாடுகளில் துவங்கி உள்ளது. இதுவே உபத்திரவ காலத்தில் பொருட்களை வாங்கவும் விற்கவும் தேவையான முத்திரை என்பதாக சொல்லப்படுகிறது.

பரந்த நம் தேசத்தில், வேண்டிய விபரங்களைச் சேகரித்து, இம்முறையை செயல்படுத்துவது மிகவும் கடினம் என்ற நிலை இப்பொழுது மாறி உள்ளது. தேவையான அனைத்து விபரங்களும் வசதிகளும் ஏற்படுத்தி, இன்னும் ஒரு சில ஆண்டுகளிலேயே முத்திரைப் பதிக்கும் இம்முறையை அமல்படுத்துவது, அதிக நிச்சயமாகவே தோன்றுகிறது. உபத்திரவ காலத்திலே நடைபெறவிருக்கும் நிழ்வுக்கே சகலமும் துரிதமாக ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில், அதற்கு முந்தைய நிகழ்வான இயேசுகிறிஸ்துவின் வருகை மிக மிக சமீபமாக இருக்குமல்லவா?

ஆகையால் இனிச்சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார் (லூக்கா 21:36). திறவுண்ட வாசல் அடைபடுமுன், நொறுங்குண்ட மனதாய் முன் செல்வோர் யார்? நாட்கள் கொடியதாய் மாறிடுதே, காலத்தை ஆதாயம் செய்திடுவோம்!

## நினையாத நாழிகையில் இயேசு

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும்

ஆயத்தமாயிருங்கள். இயேசு வாசற்படியிலே நின்று தட்டுகிறார்; மிகவும் சீக்கிரமாய் வரவிருக்கிறார். ஆயத்தமாயிருக்கும் நம்மைக் கர்த்தர் உபத்திரவத்தின் காலத்திற்கு தப்புவிப்பார்.

மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் எண்ணிக்கை நிறைவுபெற, பின்மாரியைக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். பூமியின் எல்லையெங்கும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான அடையாளங்கள் பரவலாகத் தோன்றி இயேசுவின் வருகையை வெளிப்படுத்தி நிச்சயிக்கிறது; விழித்திருங்கள்; ஆயத்தமாயிருங்கள். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும், மாரநாதா!